

சேகுவேராவைச் சுட்டுக்கொன்ற இராணுவ வீரர் மரணம்

பக்கம் 03



பக்கங்கள்: 20

THEEMPUNAL

# தீம்புனல்

வாராந்தப் பத்திரிகை

தீ : 01 புனல்:46 12.03.2022 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2053





சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமாக மாற்றமடைகிறது வடமராட்சி கிழக்கு

பானு

பக்கம் 10




வர்மா

# பகையாளிகளான பங்காளிகள்





**கோ**ட்டபாய ராஜபக்
ஷவை ஜனாதிபதியாக்குவதற்காக இரவு
பகலாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஓடி ஓடி பிர
சாரம் செய்தவர்களை அரசாங்கம் தூக்கி எறியத் தயா
ராகிவிட்டது.
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன
ஓரம் கட்டத் தொடங்கிவிட்டது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்
பினர்களையும் பிரதான உறுப்பினர்களையும் அரசாங்கம் கண்டு கொள்வ
தில்லை. அரசாங்கத்தில் இருந்து வெளியேறப் போவதாக மிரட்டும் ஸ்ரீலங்கா
சுதந்திரக் கட்சியின் குரலுக்கு எந்த விதமான எதிர்வலைகளும் கிளம்பவில்லை. அதனால்
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் குரல் தானாக அமைதியாகிவிடும்.
முழு நாடும் சரியான பாதையை நோக்கி" என்ற திட்டத்தை அண்மையில் ஆரம்
பித்த அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 11 கட்சிகளும் தனியாகச் செயற்பட முடிவு செய்
துள்ளன. தற்போது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அல்லது முன்னாள்
ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் தலைமையில் ஒரு பரந்த கூட்டணியை உரு
வாக்குவது குறித்து ஆலோசித்து வருகின்றன. மைத்திரியும் குமாரதுங்கவும் இதையே
வழிநடத்துவார் என்றும் தி மோர்னிங் தெரிவித்துள்ளது.
"நாங்கள் இரண்டாம் தர குடிமக்களாக உணர்கிறோம். ஆம், நாங்கள் கூட்டணி
அமைப்பதற்கான விவாத கட்டத்தில் இருக்கிறோம், அதுவும் நிச்சயம் நடக்கும். யார்
வழிநடத்துவது என்பது குறித்து, நாம் இன்னும் முடிவு செய்ய வேண்டும். 1997 ஆம்
ஆண்டு சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் காலத்தில் அனைத்துக் கட்சித்
தலைவர்களும் மாதம் ஒருமுறை ஜனாதிபதியுடன் கலந்துரையாடி அரசாங்கம் மற்றும்
நாடு தொடர்பான தீர்மானங்கள் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. இது மஹிந்த
ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்திலும் இருந்தது. இப்போது தெளிவாக, அரசாங்
கத்தின் முக்கிய நபர்கள் மட்டுமே தங்கள் சொந்த கூட்டங்களைக் கொண்
டுள்ளனர், நாங்கள் இரண்டாம் தர குடிமக்களைப் போல ஒதுக்கி
வைக்கப்படுகிறோம். இனி யாரும் மகிழ்ச்சியாக இல்லை"
என்று அந்த வட்டாரம் தெரிவித்தது.
அமைச்சர்களுடன் கலந்துரையாடாமல் ஜனா
திபதி தனக்குத் தோன்றியவாறு தீர்மானங்
களை

▶18

'பேசாப் பொருளையும் பேசும் குரல்'

ஐ.வி.மகாசேனன்

**ரஷ்யா மீது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் பொருளாதாரத் தடைகளை விதித்து வருகின்ற போதிலும், ரஷ்யா அவற்றை அசண்டை செய்து நகர்வதற்கு பிரதான காரணம் ஆசிய நாடுகளின் ஆதரவுத்தளமாகும். உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பைக் கண்டித்து அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகள் கடுமையான பொருளாதாரத் தடைகளை விதிப்பதுடன், ரஷ்யாவை தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளை சர்வதேச நிறுவனங்களூடாக நெறிப்படுத்தி வருகின்றன. எனினும் ஆசியா நாடுகள் பெருமளவில் ரஷ்யா உறவை பேணியே வருகின்றன.**

# ஆசியாவின் எழுச்சிக்கு ரஷ்ய – உக்ரைன் போர் வித்திடுகின்றதா?

உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு போர் உலக அரசியலில் பல புதிய திருப்பங்களை உருவாக்கி வருகின்றது. அமெரிக்கத் தலைமையிலான மேற்கு கூட்டின் பிளவு தொடர்பான உரையாடல்கள் கடந்த ஆண்டுகளில் முதன்மை பெற்ற போதிலும் ரஷ்ய-உக்ரைன் போரில் ஐரோப்பா சார்ந்த அச்சுறுத்தல் அமெரிக்க தலைமையிலான மேற்கு கூட்டை மீளவும் பலப்படுத்தி உள்ளதை சர்வதேச அரங்கில் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. அவ்வாறே ஆசிய நாடுகள் மேற்கிலிருந்து வேறுபட்டு சில முடிவுகளை சுயாதீனமாக மேற்கொள்கின்றமையும் வெளிப்படுத்தப்படுகின்றது. இவ்வகையிலான ஆசியாவின் தனித்துவமான நகர்வுகள் சர்வதேச அரசியலில் மாறிவரும் ஆசியா மீதான அரசியலை உறுதி செய்யும் களமாக ரஷ்ய-உக்ரைன் போர் அமைகின்றதா என்ற தேவையும் சர்வதேசப் பரப்பில் உருவாக்கி உள்ளது. இக்கட்டுரை ரஷ்ய-உக்ரைன் போரில் ஆசிய நாடுகளின் நகர்வுகளைத் தேடுவதாகவே உருவாக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் மீது படையெடுப்பதற்கான விளாடிமிர் புடினின் பெப்ரவரி-24 அறிவிப்பானது, எல்லைகளின் புனிதத்தன்மை பற்றிய அனுமானங்களை உயர்த்தி உலகை ஒரு புதிய சூழ்நிலைக்குத் தள்ளியுள்ளது என்று பாதுகாப்பு நிபுணர்கள் கூறுகின்றனர். ரஷ்யாவின் படையெடுப்பு உக்ரைனின் இறையாண்மையை அச்சுறுத்துவது மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த புவிசார் அரசியல் ஒழுங்கையும் குறைமதிப்பிற்கு உட்படுத்தியுள்ளது என்று ஜேர்மன் பாதுகாப்பு நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். ஜேர்மனிய ஹாலே பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானி ஜோஹன்னஸ் வார்விக், “இன்று கிட்டத்தட்ட அனைத்தும் நேற்றிலிருந்து வேறுபட்டது. நாம் இப்போது ஒரு வகையான முகாம்களின் மோதலுக்குத் திரும்பியுள்ளோம், பனிப்போர் காலத்துடன் ஒப்பிடும்போது மேற்கு முகாமின் எல்லைகள் மட்டுமே கிழக்கு நோக்கி நகர்ந்துள்ளன. ஐரோப்பாவில் அமைதி கடந்த காலத்தின் ஒரு விஷயம், ரஷ்யாவின் மீதான நம்பிக்கை முற்றிலும் அழிக்கப்பட்டுள்ளது. மேற்குலகம் ரஷ்யா ஆகியவற்றுக்கு இடையே நம்பிக்கையை மீட்டெடுக்கப் பல தசாப்தங்கள் ஆகும்.” என்று DW (Deutsche Welle) செய்தித்தளத்திற்குத் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய-உக்ரைன் போரிற்கு முன்னரான சர்வதேச அரசியல் நிகழ்வுகள் மற்றும் போரில் அமெரிக்க-ரஷ்யவின் மோதுகைகளை நுணுக்கமாக அவதானிக்குமிடத்தேயே மாறிவரும் புதிய உலக ஒழுங்கைப் புரிந்துகொள்ள இலகுவாக அமையும்.

முதலாவது, கொவிட்-19க்கு பின்னர் சர்வதேச அரசியல் பரப்பில் தாராள ஜனநாயகத்தின் வீழ்ச்சியும் இராணுவ, எதேச்சதிகார ஆட்சியதிகாரங்களின் ஆதிக்கம் பரவலாக அதிகரித்து வருகின்றது. எனினும் தாராள ஜனநாயகக் கட்டமைப்பின் தலைமையாகப் பிரகடனப்படுத்தியுள்ள அமெரிக்காவால் அதன் வீழ்ச்சியைத் தடுக்க முடியாமை அமெரிக்காவின் பலவீனத்தையே உறுதி செய்கின்றது. 2021 ஆம் ஆண்டில் ஆபிரிக்காவில் நான்கு நாடுகள் (சாட், மாலி, கினியா, சூடான்) மியான்மார் உட்பட ஏறத்தாழ 5 நாடுகளில் நேரடி இராணுவ ஆட்சியும் ஆப்கானிஸ்தானில் நேரடி எதேச்சதிகார ஆட்சியும் இதனைத்தவிர இலங்கை போன்ற பல நாடுகளில் ஜனநாயகப் போர்வையில் இராணுவச் செல்வாக்கு ஆட்சியில் அதிகரிக்கப்பட்டுள்ளது. எனினும், அமெரிக்காவால் உயர்ந்தபட்சமாக இணையவழியில் ஜனநாயகத்தின் நெருக்கடி தொடர்பில் மாநாட்டினை மாத்திரமே ஒழுங்கு செய்ய முடிந்தது. குறிப்பாக அமெரிக்காவின் நெருங்கிய பங்காளியான ஆங் சான் சூகியினுடைய ஆட்சி மியான்மாரில் இராணுவ சதிப்புரட்சி மூலமாகக் கவிழ்க்கப்பட்டு சூகி சிறையிலடைக்கப்பட்டார் அமெரிக்கா மற்றும் சர்வதேச நிறுவனங்களால் எவ்வித வினைத்திறனான செயற்பாடுகளையும் செய்ய முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வகையில், உலக அரங்கில் நலிவடைந்துவரும் அமெரிக்காவின் அதிகாரத்தை மதிப்பீடு செய்தே யுரேசியாவிலும் அமெரிக்காவின் அதிகாரத்தைப் பலவீனப்படுத்தி ரஷ்யா தனது அதிகாரத்தை உறுதிப்படுத்தும் வகையில் உக்ரைன் மீதான ஆக்கிரமிப்புப் போரை நகர்த்தியுள்ளது.



இரண்டாவது, ரஷ்ய-உக்ரைன் போரில் சீனாவின் நடுநிலைத் தன்மை என்பது மறைமுகமாக ரஷ்ய ஆதரவு தளத்திலேயே காணப்படுகிறது. மேற்கு நாடுகள் அரசியல்ரீதியாகப் புறக்கணித்த குளிர்கால ஒலிம்பிக் போட்டியின் ஆரம்ப நிகழ்வுக்கு ரஷ்யா ஜனாதிபதி விளாடிமிர் புடின் பெப்ரவரி-04 அன்று சென்றிருந்ததோடு, சீன ஜனாதிபதி ஷி ஜின் பிங் உடன் சந்திப்பையும் மேற்கொண்டிருந்தார். அக்காலப்பகுதியில் ரஷ்யா இராணுவம் உக்ரைன் எல்லையின் ரஷ்ய நிலப்பரப்பில் நின்றது. ஜின்பிங்-புடின் சந்திப்பின் இறுதியில் வெளியிடப்பட்ட அறிக்கையில், “தங்கள் கூட்டாண்மைக்கு வரம்புகள் இல்லை” என்று அறிவித்தன. மேலும், “நேட்டோ விரிவாக்கத்தைக் கண்டித்து உண்மையான ஜனநாயகத்துடன் ஒரு புதிய உலகளாவிய ஒழுங்கை நிறுவுவோம்” என்று வலியுறுத்தியது. இது ரஷ்யாவுக்கான சீனாவின் ஆதரவுத் தளத்தை உறுதி செய்கிறது. மேலும், சீனா ரஷ்யாவிடம் காணப்படும் புதிய உலக ஒழுங்கிற்கான எதிர்பார்க்கையையும் வெளிப்படுத்தியுள்ளது.

மூன்றாவது, ரஷ்ய-உக்ரைன் போரை மையப்படுத்தி எழுந்துள்ள இந்திய தொடர்பான அரசியல் ஆழமாக உரையாடப்படுகிறது. அமெரிக்காவின் இந்தோ-பசுபிக் மூலோபாயம் மற்றும் குவாட் அமைப்பின் முக்கிய பங்காளியான இந்தியா நடுநிலைமை செலுத்துவதாகத் தெரிவித்துள்ளது. அத்துடன் தொடர்ச்சியாக ரஷ்யாவுடனான உறவிலும் எவ்வித ஏற்ற இறக்கமின்றிப் பாதுகாத்து வருகிறது. இந்தியாவின் பெருமளவிலான இராணுவ ஆயுத தளபாட இறக்குமதியானது ரஷ்யாவைச் சார்ந்தே காணப்படுகின்றது. ரஷ்யாவுடனான இப்பாதுகாப்பு உறவை, இந்தியா துண்டிக்க வேண்டுமெனவும் அல்லது இந்தியா மீதும் பொருளாதாரத் தடை தொடர்பில் அமெரிக்க காங்கிரஸ் பரிசீலிப்பதாக செய்திகள் வெளிவந்தன. எனினும் இந்தியா வெளியுறவு அமைச்சகம் ரஷ்யாவுடனான இராணுவ ஆயுதத் தளபாட இறக்குமதிசார் முடிவில் எவ்வித மாற்றங்களும் இல்லையெனத் தெரிவித்துள்ளது. மேலும் உக்ரைன் அரசாங்கம், ரஷ்யாவின் உக்ரைன் மீதான ஆக்கிரமிப்புப் போரை நிறுத்த வேண்டும் என இந்தியப் பிரதமர் மோடி புடினிடம் வலியுறுத்த வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளது. இவ்வகையில் ரஷ்யாவுடனான இந்தியாவின் உறவு சார்ந்து அமெரிக்கா அதிருப்தி கொள்வதும் போரை நிறுத்தக்கூடிய வல்லமை இந்தியாவிடம் காணப்படுவதாக உக்ரைன் அரசு நம்பிக்கை கொள்வதும் வலுப்பெறும் ஆசிய அரசியல் ஒழுங்கையே உறுதி செய்கிறது.

நான்காவது, ரஷ்யா மீது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் பொருளாதாரத் தடைகளை விதித்து வருகின்ற போதிலும், ரஷ்யா அவற்றை அசண்டை செய்து நகர்வதற்குப் பிரதான காரணம் ஆசிய நாடுகளின் ஆதரவுத்தளமாகும். உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பைக் கண்டித்து அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகள் கடுமையான பொருளாதாரத் தடைகளை விதிப்பதுடன், ரஷ்யாவை தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளை சர்வதேச நிறுவனங்களூடாக நெறிப்படுத்தி வருகின்றன. எனினும் ஆசிய நாடுகள் பெருமளவில் ரஷ்ய உறவைப் பேணியே வருகின்றன. குறிப்பாக பொருளாதார ரீதியில் பெரிய சந்தைப்பலத்தை உடைய சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் ரஷ்ய-உக்ரைன் போரில் நடுநிலைமையை அறிவித்துள்ளதுடன், ரஷ்யாவுடனான பொருளாதார உறவை தொடர்ச்சியாகப் பேணி வருவது ரஷ்யாவிற்கான பலமாகவே காணப்படுகிறது. இதனை வலுச்சேர்ப்பதாகவே இலங்கையின் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் கருத்து அமைகிறது. “உக்ரைன் யுத்தம் அனைவரையும் பாதிக்கும் என தெரிவித்துள்ள அவர், இந்த யுத்தத்தினாலும் மேற்குலகின் தடைகளாலும் உருவாகும் சவால்களை எதிர்கொள்வதற்கான திறமை ஆசியாவில் உள்ளது” எனக்குறிப்பிட்டுள்ளார். இவ் எண்ணப்பாங்கிலேயே ரஷ்யாவும் அதிக நம்பிக்கை கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

எனவே, ரஷ்யா மீதான உக்ரைன் போர் அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவினை போரின் பங்குதாரராய் நெருக்கடியை அதிகப்படுத்தியுள்ளது. மறுமுனையில் ஆசியாவின் வல்லரசுகள் போரில் நடுநிலைமை வகிப்பதால் பார்வையாளராய் தமக்கான வாய்ப்புக்களைப் பலப்படுத்திக் கொள்ளும் சூழலே அவதானிக்கப்படுகின்றது. இதனடிப்படையில் இளம் செயற்பாட்டாளர்களுடனான உரையாடலில் ரணில் தெரிவித்துள்ள, “மேற்குலகம் வலுவிழக்கின்றது. ஆசியா புதிய உலகஒழுங்குமுறை குறித்து சிந்திக்க வேண்டும்.” என்பதே இன்று சர்வதேச அரசியல் அவதானிகளது எண்ணங்களாகவும் உள்ளது. ■



“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 0777 133 542
www.theempunal.lk
news@theempunal.com

THEEMPUNAL
தீம்புனல்

# அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வால் பாதிக்கப்படும் மக்களின் வாழ்வாதாரம்

அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடும், விலை அதிகரிப்பும் 1970 ஆம் ஆண்டை நினைவுபடுத்துகிறது. அரிசி, கோதுமை மா, சீனி போன்ற உணவுப் பொருட்களை வாங்குவதற்கு கூப்பன் முறை அமுல்படுத்தப்பட்டது. பாண் வாங்குவதற்கு அதிகாலையில் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை உருவானது. ஒருவருக்கு ஒரு இறாத்தல் பாண் மட்டுமே கொடுக்கப்பட்டது. அப்படி ஒரு நிலை வரக்கூடாது என்பதே அனைவரின் விருப்பம்.

கோதுமை மா, பெற்றோல், டீசல் என்பனவற்றின் சடுதியான விலை உயர்வு அடிமட்ட மக்களின் வாழ்வாதாரத்துக்குப் பலத்த அடியாக விழுந்துள்ளது. ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலையை 35 ரூபாவால் செரண்டிப் நிறுவனம் அதிகரித்துள்ளது. பிறிமா நிறுவனம் ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலையை 40 ரூபாவால் அதிகரித்துள்ளது. கோதுமை மாவின் விலை உயர்வால் வறுமைக் கோட்டினுள் வாழும் மக்களின் வயிற்றிலடிக்கும் நிலை தோன்றியுள்ளது. பாண், பணிஸ் போன்ற உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பைத் தடுக்க முடியாது.

அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம், ஒரு கிலோ கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்பட்டதன் காரணமாக அனைத்து பேக்கரி பொருட்களின் விலைகளையும் அதிகரிக்க பேக்கரி உரிமையாளர்கள் தீர்மானித்துள்ளதாக (ACBOA) தலைவர் என்.கே.ஜெயவர்த்தன கூறினார்.

இதேவேளை எரிவாயு தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு, மின்வெட்டு, கோதுமைமா தட்டுப்பாடு, மூலப் பொருட்களின் விலை உயர்வு போன்ற காரணங்களால் பேக்கரி தொழில்துறை கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. கடந்த சில மாதங்களில் 1,000 க்கும் மேற்பட்ட பேக்கரிகள் மூடப்பட்டுள்ளன. மட்டுப்படுத்தப்பட்ட விநியோகம் காரணமாக பல அடிப்படை உணவுப் பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ளதால், பெரும்பாலான இலங்கையர்களுக்கு அன்றாட வாழ்க்கை ஒரு போராட்டமாக மாறியுள்ளது. தற்போது இயங்கி வரும் 6,000 பேக்கரிகளில் பெரும்பாலானவை தினசரி உற்பத்தியில் 50% கூட இல்லை என சங்கத்தின் தலைவர் என்.கே.ஜெயவர்தன தெரிவித்திருந்தார்.

இலங்கையில் வழங்கப்படும் அனைத்து விமான டிக்கெட்களின் விலைகளையும் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாட்டில் நாணய மாற்று வீதம் அதிகரித்துள்ளமையினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார். இலங்கையில் வழங்கப்படும் அனைத்து விமானப் பயணச்சீட்டுகளுக்கான கட்டணம் 27% ஆக அதிகரிப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

டீசல்,பெற்றோல் ஆகியவற்றின் விலை உயர்வு மக்களின் தலையின் மீது விழுந்த இன்னொரு பேரிடியாக உள்ளது. பெற்றோல், டீசல் ஆகியவற்றின் விலை உயர்வால் போக்குவரத்து செய்வதில் பெரும் நெருக்கடி தோன்றியுள்ளது. போக்குவரத்து பஸ் கட்டணம் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எரிபொருளின் விலை உயர்வு காரணமாக ஏற்றி இறக்குக் கூலியும் அதிகரிக்கும், டீசலுக்கு 75 ரூபாவும் பெற்றோலுக்கு 50 ரூபாவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) டீசல் விலையை உயர்த்தினால், பஸ் கட்டணத்தை அதிகரிக்கப் போவதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கமும் (LPBOA) மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கமும் (IPPBOA) கூறியுள்ளன.

LPBOA மற்றும் IPPBOA இந்த அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வுக்கு அரசாங்கம் உடனடித் தீர்வுகளை தேட வேண்டும் என்று கூறியது.

எரிபொருள் விலையேற்றம் காரணமாக லங்கா ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் இருந்து தமது பஸ்களுக்கு எரிபொருள் நிரப்ப முடியவில்லை என LPBOA தலைவர் கெமுனு விஜேரதே மற்றும் IPPBA செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் ஆகியோர் தெரிவித்தனர்.

இலங்கை போக்குவரத்து சபைக்கு (SLTB) சொந்தமான டிப்போக்களில் இருந்து மக்களுக்குத் தேவையான டீசலை பெற்றுக்கொள்ளும் திட்டத்தை அரசாங்கம் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். அஞ்சன பிரியஞ்சித் கூறுகையில், டீசல் விலை உயரும் பட்சத்தில் குறைந்தபட்ச பஸ் கட்டணம் உட்பட மொத்த பஸ் கட்டணம் 50% உயர வேண்டும். இதேவேளை, இது தொடர்பில் அமைச்சுக்கு அறிவித்துள்ளதாக கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

விலைவாசி உயர்வு மற்றும் அதிக கடனின் இரட்டைச் சுமை ஆகியவற்றை இலங்கை எதிர்கொள்கிறது, மேலும் உள்நாட்டு நிலைமை மேலும் மேலும் மோசமாகி வருவதால் மக்கள் அதன் சுமைகளைச் சுமந்து வருகின்றனர். மருந்துகளின் விலை 18 சதவீதத்தால் அதிகரிக்கப்பட உள்ளது. புற்று நோய், சிறுநீரகநோய் ஆகியவற்றுக்கான மருந்துகள் குறைந்தளவே கையிருப்பில் உள்ளதாக அரச மருந்தாளர் சங்கம் தெரிவித்துள்ளது. கையில் இருக்கும் ஏனைய மருந்துகள் நான்கு மாதங்கள் வரை மட்டுமே போதுமானதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

2.2 கோடி மக்கள் வாழும் தீவான இலங்கை மிகப் பெரிய பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து வருகிறது. கடந்த நவம்பர் மாதத்தில், அந்நியச் செலாவணி கிட்டத்தட்ட 1.6 பில்லியன் அமெரிக்க டொலர் அளவுக்கு சரிந்துவிட்டது அதன் விளைவாக, அரசு சில அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிகளைக் குறைக்க வேண்டி வந்தது, அதில் உணவுப் பொருட்களும் அடக்கம். இது போக எரிபொருள் மற்றும் சரக்கு போக்குவரத்து விலை அதிகரிப்பால், பால் பவுடர் மற்றும் அரிசி போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலை மேலும் அதிகரித்தது.

விலைவாசி அதிகரிப்பு இலங்கை மட்டுமே எதிர்கொள்ளும் பிரச்சினையல்ல. இந்தியா, பாகிஸ்தான் போன்ற மற்றைய ஆசிய நாடுகளும் பணவீக்கத்தை எதிர்கொண்டு வருகின்றன. ஆசியக் கண்டத்தில் வாழும் மக்கள் தங்களின் தினசரி உணவு மற்றும் எரிசக்திச் செலவுகளைச் சமாளிக்க மற்ற செலவுகளைக் குறைத்து வருகிறார்கள். வரவுக்கு மிஞ்சி செலவு செய்யப்படுவதால் மக்களின் வாழ்வாதாரம் பாதிப்படையும் நிலை தோன்றியுள்ளது. இந்த இக்கட்டில் இருந்து மக்களைப் பாதுகாக்க வேண்டிய கடமை அரசுக்கு உள்ளது.

■

# சே குவேராவை சுட்டுக் கொன்ற இராணுவவீரர் காலமானார்



புகழ்பெற்ற புரட்சியாளர் கெரில்லா எர்னஸ்டோ “சே” குவேராவை சுட்டுக் கொலை செய்த பொலிவிய வீரர் மரியோ டெரான் சலாசர், மார்ச் 10 ஆம் திகதி வியாழன் தனது 80 ஆவது வயதில் கிழக்கு பொலிவியாவில் உள்ள சாண்டா குரூஸ் டி லா சியர்ராவில் காலமானார்.

மரியோ டெரான் “இராணுவத்தின் சார்ஜென்ட் என்ற முறையில் தனது கடமைக்கு இணங்கினார்,” என்று ஓய்வுபெற்ற ஜெனரல் கேரி பிராடோ கூறினார். ஒரு மாதகால தேடலுக்குப் பிறகு 1967 இல் குவேராவைக் கைது செய்த குழுவிற்கு அவர் தலைமை தாங்கினார்.

ரேடியோ கம்பேனேராவிடம் பேசிய அவர், டெரான் நீண்ட காலமாக நோய்வாய்ப்பட்ட பின்னர் இறந்துவிட்டதாகக் கூறினார். இவருக்கு மனைவி மற்றும் இரண்டு குழந்தைகள் உள்ளனர்.



குவேரா, ஆர்ஜென்ரீனாவில் பிறந்த மருத்துவர். கியூபாவில் சர்வாதிகாரி ஃபுல்ஜென்சியோ பாடிஸ் டாவை வீழ்த்தி 1959 இல் பிடல் காஸ்ட்ரோவின் கீழ் அதிகாரத்தை வென்ற கியூபா புரட்சியில் ஒரு முன்னணி நாயகன்.

கியூபாவின் அரசாங்கத்தில் பல ஆண்டுகள் மூத்த அதிகாரியாகப் பணியாற்றிய பிறகு, ஆபிரிக்காவிலும் அதன்பிறகு தென் அமெரிக்காவிலும் - மிகக் குறைவான வெற்றியுடன் பிற கிளர்ச்சிகளை வழிநடத்த முயற்சிக்கத் தொடங்கினார்.

கைது செய்யப்பட்ட குவேராவை தூக்கிலிட உத்தரவு வந்த பிறகு அவரைக் கொல்வதற்கு டெரான் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஒக்டோபர் 8, 1967 இல், பொலிவியன் இராணுவம் இரண்டு கியூப-அமெரிக்க சி.ஐ.ஏ ஏஜென்டுகளின் ஆதரவுடன் பனிப் போரின் போது ஆயுதமேந்திய புரட்சிகர நடவடிக்கையின் கதாநாயகனான சே குவேராவைக் கைது செய்தது. போர், பசி மற்றும் நோயிலிருந்து தப்பிய ஒரு சில கொரில்லாக்களின் தலைவராக சே இருந்தார். போரில் காயமடைந்த அவர், லா ஹிகுவேரா நகரில் கைவிடப்பட்ட பள்ளிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அவர் தனது கடைசி இரவை அங்கேயே கழித்தார். கடுமையான கம்மியூனிஸ்ட் எதிர்ப் பாளரான ஜனாதிபதி ரெனே பேரியண்டோஸின் (1964-1969) ஒப்புதலுடன் டெரான் அடுத்த நாள் சேவை சுட்டுக் கொலை செய்தார்.

“என் வாழ்க்கையின் மிக மோசமான தருணம் அது. அந்த நேரத்தில் நான் சேயின் பெரிய, மிகப் பெரிய கண்களைப் பார்த்தேன். அவரது கண்கள் பிரகாசமாகப் பிரகாசித்தன” என்று டெரான் பின்னர் விவரித்தார்.

“அவர் என் மேல் இருப்பதைப் போல உணர்ந்தேன், அவர் என்னை முறைத்தபோது, எனக்கு மயக்கம் வந்தது. ஒரு வேகமான இயக்கத்தால் சே என்னிடமிருந்த ஆயுதத்தை எடுக்க முடியும் என்று நினைத்தேன். ‘அமைதியாக இருங்கள் - அவர் என்னிடம் கூறினார் - நன்றாக இலக்கு பார்! ஒரு மனிதனைக் கொல்லப் போகிறாய்!’ என்றார். அதனால், நான் ஒரு அடி பின்வாங்கி, கதவின் வாசலை நோக்கி, கண்களை மூடிக்கொண்டு துப்பாக்கியால் சுட்டேன்,” என்று கூறினார்.

30 வருட சேவைக்குப் பிறகு, டெரான் ஓய்வு பெற்றார். பத்திரிகைகளைத் தவிர்த்து, அநாமதேயமாக இருந்தார். குவேராவைக் கொலை செய்தவர் தாம் அல்ல, அதே பெயர் மற்றும் குடும்பப் பெயரைக் கொண்ட மற்றொரு சிப்பாய் என்பதை உறுதிப்படுத்தும் அளவுக்கு அவர் சென்றார்.

■

# மல்லியப்பு சந்தி திலகரை 'சந்தியில்' தவிக்க விட்ட சாணக்கியன்..!








பிதாமகன்

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜ் 'மல்லியப்பு சந்தி திலகர்' என்ற பெயரால் அறியப்படுபவர். தொழிலாளர்களின் சம்பளப் போராட்டம் கற்றன் மல்லியப்பு சந்தியில் இடம்பெற்ற போது அதைக் கருவாகக்கொண்டு அவரால் எழுதப்பட்ட கவிதைத்தொகுதிக்கு 'மல்லியப்பு சந்தி' என்று பெயர் வைத்தார். அரசியலுக்கு வருவதற்கு முன்பதாக ஆசிரியராகவும் இலக்கிய செயற்பாடுகளில் அதீத ஆர்வம் கொண்டவராகவும் விளங்கியதால் தனது கவிதைத்தொகுதியின் பெயரை இணைத்து மல்லியப்பு சந்தி திலகர் என்றே அழைக்கப்பட்டார்.

இவரை அதே கற்றன் மல்லியப்பு சந்தியில் தவிக்க விட்டு கடந்து சென்ற தமிழ் முற்போக்குக்கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனைப் பற்றியே இப்போது முகநூலில் பேசப்பட்டு வருகின்றது. ஆனால், இதன் பின்னணியில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். உதயகுமாரே செயற்பட்டிருக்கிறார் எனத் தனது கோபத்தை அவிழ்த்து விட்டிருக்கின்றார் திலகராஜ். அப்படி என்ன சம்பவம் இடம்பெற்றது?

கையெழுத்து வேட்டை நுவரெலியா மாவட்டத்தில் பிரதேச செயலகங்களை அதிகரிக்க அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட வர்த்தமானியை, அமுலாக்கும்படி கோரிக்கை விடுத்து மலையக அரசியல் அரசாங்கம் என்ற அமைப்பை ஸ்தாபித்து நாடெங்கிலும் கையெழுத்து சேகரிக்கும் பணியில் இறங்கியிருக்கிறார் திலகராஜ். வடக்குக் கிழக்கு என எல்லா இடத்திலும் தனது ஆதரவாளர்களையும் சென்ற இடங்களில் தனது ஆதரவாளர்களை உருவாக்கியும் கையெழுத்து வேட்டையை முன்னெடுத்து வருகின்றார் இவர்.

மறுபக்கம் தமிழ்க் கட்சிகள், சிவில் அமைப்புகளை இணைத்துக்கொண்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக்கோரி நாடெங்கிலும் கையெழுத்து வேட்டையை ஆரம்பித்துள்ளனர். இந்த இரண்டு தரப்பினரும் ஒரே நகரில் சந்தித்தால் என்ன நடக்கும்? தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினராக ம.திலகராஜ் செயற்பட்டாலும் அவர் அங்கம் வகித்த கட்சி தொழிலாளர் தேசிய சங்கமாகும். அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பி.திகாம்பரம். திலகராஜின் செயற்பாடுகளை உன்னிப்பாக அவதானித்து வந்தாலும் எந்த சந்தர்ப்பத்திலும் அவரைப் பற்றி வாய் திறக்காது சாதுர்ய அரசியலை அவர் முன்னெடுத்து வருகின்றார். திலகராஜ் கட்சியிலிருந்து விலகி விட்டேன் என ஊடகங்களின் முன்பாக அறிக்கை விட்டாலும் அது குறித்து எந்த பிரதிபலிப்புகளையும் பி.திகாம்பரம் எம்.பி வெளிக்காட்டவில்லை.

இது இப்படியிருக்கக் கடந்த 7 ஆம் திகதி ஹற்றன் நகரில் பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராகப் பொது மக்களிடம் கையெழுத்து சேர்க்கும் நிகழ்வு தமிழ் முற்போக்குக் கூட்டணியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்கு முதல் நாள் நுவரெலியா நகரில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களான எம்.ஏ. சுமந்திரன் மற்றும் ராசமாணிக்கம் சாணக்கியன் ஆகியோர் அவ்வழியாக ஹற்றன் வந்து மக்களைச் சந்தித்துக் கையெழுத்தை சேகரிக்கும் அதேவேளை, பொருளாதார நெருக்கடிகளால் அவஸ்தைப்படும் மக்களிடம் அரசாங்கத்தின் செயற்பாடுகளைக் கூறி அதற்கெதிராக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தையும் முன்னெடுப்பதற்கு ஏற்பாடாகியிருந்தது. அந்த நிகழ்வுக்கு முன்பதாக இந்த நிகழ்வைத் தனக்கு சாதகமாகப்பயன்படுத்திக்கொள்ள திட்டம் தீட்டினார் மல்லியப்பு சந்தி திலகர். நுவரெலியாப் பிரதேச சபை அதிகரிப்பு கையெழுத்து நடவடிக்கையோடு சேர்த்துப் பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கும் எதிரான கையெழுத்து வேட்டை என பதாகைகளைத் தயார்ப்படுத்தி இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன் மற்றும் சாணக்கியன் ஆகியோர் கலந்து கொள்வர் என முகநூலிலும் ஏனைய வழிகளிலும் பிரசாரத்தை ஆரம்பித்தார்.

அன்றைய நாளும் வந்தது. அதே நாளில் ஹற்றன் அம்பிகா சந்தியில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான பி.திகாம்பரம், வே.இராதாகிருஷ்ணன், எம்.மயில்வாகனம் ஆகியோர் தமது பணிகளை ஆதரவாளர்களுடன் முன்னெடுத்தனர். அம்பிகா சந்தியானது மல்லியப்பு சந்தியிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தொலைவில் நகரத்துக்கு மத்தியில் அமைந்துள்ளது. மல்லியப்பு சந்தி என்பது கொழும்பு, தலவாக்கலை, ஹற்றன் செல்லும் மார்க்கங்களை இணைக்கும் சந்தியாகும். அந்தச் சந்தியில் தனது ஆதரவாளர்களுடன் சுமந்திரன் சாணக்கியனுக்காகக் காத்திருந்தார் திலகர். முதல் நாள் நுவரெலியா நிகழ்வில் கலந்து கொண்டிருந்த இருவரும் அங்கு தங்கி மறுநாள் கற்றனுக்கு வருவதென்பதே ஏற்பாடு. இவர்களை அழைத்து வரும் பொறுப்பை உதயகுமார் எம்.பி ஏற்றிருந்தார். நுவரெலியாவிலிருந்து தலவாக்கலை வழியாக ஹற்றன் வந்து கொண்டிருந்த உதயகுமார் எம்.பி எங்கும் நிறுத்தாது சுமந்திரன் மற்றும் சாணக்கியன் எம்.பிக்களை நேரடியாக அம்பிகா சந்திக்கே அழைத்துச் சென்று விட்டார். சுமந்திரனும் சாணக்கியனும் மலையகத்தில் எந்த சந்தியை அறிவார்கள்?



தனது ஆதரவாளர்கள் பத்துப் பேருடன் மல்லியப்பு சந்தியில் காத்திருந்த திலகராஜ்யைக் கடந்து சர் சர்ரென வாகனங்கள் பறந்து போயின. அம்பிகா சந்தியில் அதிக ஆதரவாளர்களுடன் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தையும் கையெழுத்து வேட்டையையும் வெற்றிகரமாக நடத்தி முடித்தது தமிழ் முற்போக்குக் கூட்டணி. திலகரான் எம்.பியின் முகத்தில் ஈயாடவில்லை. கடுப்பாகிப் போன அவர் அப்போதே தனது முகநூலில் பதிவு ஒன்றைப் போட்டார்.

'மல்லியப்பு சந்தி தெரியாத சாணக்கியன்' எனத் தனது ஆத்திரத்தை வெளிப்படுத்தினார். இதில் என்ன சுவாரஸ்யமான அம்சம் எனில் ஏற்கெனவே, தனது யாழ் மற்றும் மட்டக்களப்பு விஜயத்தின் போது பிரதேச சபை விவகாரத்துக்கு ஆதரவாக சுமந்திரன் மற்றும் சாணக்கியன் உட்பட மாவை சேனாதிராஜா எனப் பலரிடமும் கையெழுத்துக்களை வாங்கி விட்டார் திலகராஜ். மலையகத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணிக்குப் பாடங் கற்பிக்கப்போய் மல்லியப்பு சந்தியிலேயே மண்கவ்வியிருக்கின்றார் திலகர்.

பிறகு அவர் முன்னெடுத்த செயற்பாடு முக்கியமானவை. முற்போக்குக் கூட்டணியின் நிகழ்வு முடிந்த பிறகு, கற்றன் நகரின் அனைத்துக் கடைகளுக்கும் ஏறி இறங்கி கையெழுத்தைச் சேகரித்திருக்கின்றார். ஆனால், ஏற்கெனவே அவர் இப்பகுதிகளில் கையெழுத்து சேகரித்து முடித்து விட்டார். திலகருக்கு ஏன் தேவையில்லாத வேலை எனப் பலரும் விமர்சித்து வருகின்றனர். தனது சமூகத்துக்காக மலையக அரசியல் அரங்கம் அமைப்பின் ஊடாக அவர் கையெழுத்து சேகரிப்பு நடவடிக்கைகளுக்கு அனைவரும் ஆதரவளித்தே வருகின்றனர். இடையில் ஏன் இவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிரான கையெழுத்து வேலைக்குச்சென்றார் என அவரது ஆதரவாளர்களே மனதுக்குள் குமுறி வருகின்றனர்.

ஆனால், எது எப்படியானாலும் தனது கோட்டைக்குள்தான் சொல்வதைத்தான் தனது மக்கள் கேட்பர் என்பதையும் பாராளுமன்றத்துக்குள்ளேயும் தனக்கு தமிழ் எம்.பிக்கள் மத்தியில் ஆதரவு உள்ளது என்பதையும் மீண்டும் நிரூபித்துள்ளார் பி.திகாம்பரம் எம்.பி. கூடவே திலகருக்கு நடந்த சம்பவத்தைக் கூறி முகநூலில் கேலிப் பதிவுகளை இட்டு மேலும் அவரை எரிச்சலடையச் செய்துள்ளனர் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் ஆதரவாளர்கள். ■

# தலையணை உறையை மாற்றுவது தீர்வாகுமா...?

அவதானி

“ஒரு புறம் வேடன், மறுபுறம் நாகம், இரண்டுக்கும் நடுவே அழகிய கலைமான்” என்ற திரைப்படப்பாடலைக் கேட்டிருப்பீர்கள்.

சமகாலத்தில் இலங்கை நிலவரங்களைப் பார்க்கும்போது இந்தப்பாடல்தான் நினைவுக்கு வருகிறது.

கொவிட் பெருந்தொற்று முற்றாக நீங்காத நிலையில் அதன் திரிபடைந்த ஒமிக்ரோன் பரவியிருக்கும் சூழலில் எரிபொருள் தட்டுப்பாடு, விலைவாசி ஏற்றம், காஸ் சிலிண்டர் வெடிப்புகள், வெதுப்பகங்கள் மூடப்படும் சூழல்... எனப் பல்வேறு நெருக்கடிகளுக்கு மக்கள் முகம் கொடுத்துவருகின்றனர். தினமும் மின்வெட்டும் மக்களை சிக்கலுக்குள்ளாக்கியிருக்கிறது.

அந்த அழகிய கலைமானுக்குத்தான் இரண்டு புறத்திலிருந்தும் ஆபத்து. ஆனால், ராஜபக்ஷ குடும்பத்தினரைப் பல எதிர்பார்ப்புகளுடன் பதவியில் அமர்த்திய அப்பாவி மக்களுக்குப் பல வழிகளிலும் துயரமும் நெருக்கடிகளும் தொடருகின்றது.

முன்னரும் பின்னரும் பதவிக்கு வந்த ஆட்சியாளர்களின் தீர்க்கதரிசனமற்ற பல செயற்பாடுகளினால், இன்று இலங்கை தேசத்திற்கு இத்தகைய சோதனை வந்துள்ளது.

கொவிட் பெருந்தொற்றைக் காரணம் காண்பித்து காலத்தைக் கடத்திய ஆட்சியாளர்களுக்கு, சமகாலத்தில் தோன்றியிருக்கும் ரஷ்ய - உக்ரைன் மோதல் மற்றும் ஒரு காரணத்தைக் கூறுவதற்கு வழிகோலியிருக்கிறது.

கோட்டபாய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்றபின்னர் எத்தனை தடவை அமைச்சரவையில் மாற்றங்கள் நடந்துவிட்டன...?

ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் நிதியமைச்சரின் வகிபாகம் மிகவும் முக்கியமானது.

அதற்காக முன்பிருந்த நிதியமைச்சரை மாற்றிவிட்டு, அமெரிக்கக் குடியுரிமையுடனிருந்த தமது சகோதரரை அழைத்தார்கள் அண்ணன் பிரதமரும் தம்பி ஜனாதிபதியும்.

அவருக்காகத் தமது கட்சியைச்சேர்ந்த மக்களால் தெரிவான ஒரு எம்.பியை வீட்டுக்கு அனுப்பிவிட்டு, தேசியப்பட்டியல் ஊடாகவே அவருக்கு பாராளுமன்றில் அரியாசனம் வழங்கி, அவரது வாழ்வில் மீண்டும் அரசியல் விளக்கை ஏற்றினார்கள்.

ஆனால், வந்திருப்பவரோ வீதிவிளக்குகளை அணையுங்கள் என்று சொல்லத் தொடங்கியிருக்கிறார்.

2009 ஆம் ஆண்டின் பின்னர் நடந்த பாராளுமன்ற மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களில்







தமிழ் மக்களில் பெரும்பான்மையானவர்கள் தமக்கு வாக்களிக்கமாட்டார்கள் என்பதை நன்கு தெரிந்து வைத்திருந்தவர்கள்தான் ராஜபக்ஷ குடும்பத்தினர். அதனால், சிங்கள - பௌத்த பெரும்பான்மையினரின் வாக்குகளைச் சேகரிப்பதில் மாத்திரமே குறியாக இருந்து பதவிக்கு வந்தவர்கள்.

இறுதியாக 2019 இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டபாயவை எவ்வாறாயினும் வெற்றிபெற வைக்கவேண்டும் என்பதற்காக வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் தீவிர பிரசாரங்களை முன்னெடுத்தவர்கள்தான் உதய கம்மன் பிலவும் விமல் வீரவன்சவும்.

விமல், மகிந்த ராஜபக்ஷவின் செல்லப்பிள்ளையாக, 2010 இற்கு முன்னரும் பின்னரும் அலரிமாளிகையில் வலம் வந்தவர்தான்.

மொட்டு அணியின் பிரசாரப் பீரங்கியாக விளங்கியவர். எரிபொருளுக்குத் தட்டுப்பாடு வரத்தொடங்கிய காலப்பகுதியில் அதன் பொறுப்பிலிருந்த அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானமும் வந்திருந்தது.

தற்போது, இவர்கள் இருவரும் அரசைத் தொடர்ந்து விமர்சித்து வருகிறார்கள் என்ற காரணத்தினால், அமைச்சுப் பதவிகளிலிருந்து அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு முன்னரும் அமைச்சரவையில் மாற்றங்கள் நடந்திருக்கின்றன.

முன்னர் வெளிவிவகார அமைச்சராகவிருந்தவர் தினேஷ் குணவர்தன அவரை மாற்றி, அவ்விடத்திற்குக் கல்வி அமைச்சராகவிருந்த பேராசிரியர் ஜி. எல். பீரிஸை நியமித்தார் ஜனாதிபதி. கல்வி அமைச்சு தினேஷ் வசம் சென்றது. அதுபோன்று பவித்ரா வன்னியராய்ச்சியின் வசம் இருந்த சுகாதார நலத்துறை அமைச்சும் கைமாறியது.

பசில் ராஜபக்ஷவும் அழைத்துவரப்பட்டு நிதியமைச்சராக்கப்பட்டார்.

இந்த அதிரடி மாற்றங்களினால், அரசுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் நீண்ட கால இடதுசாரி அரசியல்வாதி வாசுதேவ நாணயக்காரவும் கடுப்பிலிருக்கிறார். அவர் அரசுடன் தொடர்ந்து இணைந்திருப்பதா..? வெளியேறுவதா ..? என்று தெரியாமல் திரிசங்கு சுவர்க்க நிலையிலிருக்கிறார்.

இச்சந்தர்ப்பத்தில் 1970 இல் வாசுதேவாவின் (முன்னைய) சமசமாஜக்கட்சியும் (என்.எம். பெரேரா தலைமை) கம்மியூனிஸ்ட் கட்சியும் (பீட்டர் கெனமன் தலைமை) வழங்கிய ஆதரவினால், ஆட்சிக்கு வந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் நெருங்கிய உறவினர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கவுடன் முரண்பட்டு, 1976 இன் இறுதியில் அமைச்சரவையிலிருந்து வெளியேறின.

அப்போது, நிதியமைச்சராகவிருந்த கலாநிதி என். எம். பெரேரா தாம் அமைச்சரவைக் கூட்டத்துக்குச் செல்லும்போதெல்லாம் இராஜினாமாக் கடிதத்தை தமது பொக்கட்டில் எடுத்துச் செல்வதாகக் கூறியிருந்தார். அவ்வாறு தற்போது வாசுதேவாவும் தன்வசம் ஒரு இராஜினாமாக் கடிதத்துடன்தான் நடமாடுகிறாரோ தெரியவில்லை.

அன்று நிதியமைச்சராகவிருந்த என். எம். பெரேரா, பாராளுமன்றத்தில், பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கவை “சாத்தான்” என்றே வர்ணித்தார். இறுதியில் அந்தக் கூட்டரசாங்கத்தை விட்டு 1976 இல் படிப்படியாக இடதுசாரிகள் வெளியேறினர்.

1977 இல் நடந்த பொதுத்தேர்தலில் இம்மூன்று கட்சிகளும் படுதோல்வியைத் தழுவின. எதிர்க்கட்சி ஆசனத்தைக்கூடப் பெறமுடியாத இமாலயத் தோல்வியைச் சந்தித்தனர்.

அவ்வேளையில்தான் ஆளும் தரப்புக்குத் தெரிவான ஐக்கிய தேசியக்கட்சியை அடுத்து அதிகப்படியான ஆசனங்களைப்பெற்று அமிர்தலிங்கம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் எதிர்க்கட்சித் தலைவரானார்.

இந்த வரலாற்றை நாம் பின்னோக்கிப் பார்க்கவேண்டும்.

தங்களது பதவிகள் பறிபோனதற்கு முழுமுதற் காரணம் பசில் ராஜபக்ஷதான் என்று உதயகம்மன்பிலவும் விமல் வீரவன்சவும் பகிரங்கமாகக் குற்றம் சுமத்துவதற்குத் தொடங்கியிருக்கின்றனர்.

ஆனால், இதுவரையில் அவர்களின் வாயிலிருந்து “சாத்தான்” என்ற சொல் மாத்திரம் உதிரவில்லை !

அமைச்சுப்பதவியை வழங்குவதும் பிடுங்குவதும் ஜனாதிபதி கோட்டபாயவின் இயல்பு என்று சொல்கிறார் உதய கம்மன்பில. இவர்தான் கடந்த ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களுக்காக வெளிநாடுகளுக்கு வந்தவர். இவருடன் வந்த மற்றவர் இன்றைய நீதியமைச்சர் அலிசப்ரி.

அப்போதெல்லாம் அமெரிக்காவில் வாழ்ந்துகொண்டிருந்த பசில் ராஜபக்ஷதான், 2015 இல் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித்தேர்தலில் தோற்பதற்கு முக்கிய காரணம் என்றும் உதய கம்மன்பில சொல்லிவருகிறார்.

எது எப்படியோ எரிமலை வெடித்துவிட்டது. எமது மக்கள் தமது வீடுகளில் எப்போது காஸ் சிலிண்டர் வெடிக்கும் என்ற பதைபதைப்போடு வாழும் காலத்தில், ராஜபக்ஷ சகோதரர்களின் ஆட்சியில் பூகம்பம் வெடித்துள்ளது.

சகோதரர்கள், தலையணைகளின் உறைகளை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், தலையணைகள் மாறவில்லை.

அதனை முற்றாக மாற்றவேண்டிய எதிரணி என்னசெய்யப்போகிறது..? என்பதே மக்கள் முன்னிருக்கும் பிரதான கேள்வி.

**அமைச்சுப்பதவியை வழங்குவதும் பிடுங்குவதும் ஜனாதிபதி கோட்டபாயவின் இயல்பு என்று சொல்கிறார் உதய கம்மன்பில. இவர்தான் கடந்த ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களுக்காக வெளிநாடுகளுக்கு வந்தவர். இவருடன் வந்த மற்றவர் இன்றைய நீதியமைச்சர் அலிசப்ரி. அப்போதெல்லாம் அமெரிக்காவில் வாழ்ந்துகொண்டிருந்த பசில் ராஜபக்ஷதான், 2015 இல் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித்தேர்தலில் தோற்பதற்கு முக்கிய காரணம் என்றும் உதய கம்மன்பில சொல்லிவருகிறார்.**

திருநாவுக்கரசு தயந்தன்
மூத்த பொறியியலாளர்

# சரிந்து கொண்டிருக்கும் ஒரு சரித்திரம் 12

## கல்வி நிர்வாக சீர்கேடுகள்

எண்ணிக்கையில் சிறுபான்மைச் சமூகமாக இருந்தாலும் சாதிப்பதில் பெரும்பான்மையாக இருந்த சரித்திரங்களைக் கொண்டிருந்த சமூகம் எங்களுடையது! ஆனால் பல்வேறு உள்ளக வெளியக அரசியல், பொருளாதார, சமூகக் காரணிகளால் எங்கள் சமூகத்தின் கல்விச் சரித்திரங்கள் சரிந்து வருவது வெளிப்படை உண்மை! உண்மைகளை உணர்ந்து ஒன்றுபட்டு உழைத்தால் மீண்டும் பல சாதனை, சரித்திரங்களைப் படைக்க முடியும் என்ற நம்பிக்கையில் பல்வேறு காரணிகளை யதார்த்தமாக ஆராய்வதோடு நடைமுறைச்சாத்தியமான பரிந்துரைகளையும் தேவையான மாற்றங்களையும் விவாதிக்க இருக்கிறது இந்தக் கட்டுரைத் தொடர்! சுயவிருப்பு வெறுப்புகளைப் புறந்தள்ளி, நடுநிலைமையுடன் தொடரை வாசிக்குமாறும் பொருத்தமான களப்பணிகளிலும் செயற்பாடுகளிலும் இணையுமாறும் வாசகர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்!

-ஆசிரியர்

அத்தியாயம் - 09

**பகுதி - 01**

மெது நஞ்சூட்டலாக அழிக்கப்பட்டு வரும்/ அழிந்துகொண்டிருக்கும் தமிழர் கல்வித்தரமும் சரி செய்யப்பட வேண்டிய கல்வித்துறையிலுள்ள நிர்வாகக் குறைபாடுகளும்!

கல்வியை என்றும் சொத்தாக நினைக்கும் எம் தமிழ் சமூகமே!

கடந்த 8 அத்தியாயங்களில் எங்கள் கல்விப்புலத்தை மேம்படுத்த அடித்தட்டு சமூகமாக மீண்டெள வேண்டிய அத்தியாவசியத்தையும் அடிப்படையில் செய்ய வேண்டிய சில வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் விபரித்திருந்தேன்.

இன்றைய இந்தக் கட்டுரையில், எங்கள் கல்வித்தரம் மிக நுணுக்கமாக நிர்வாக குளறுபடிகளால் எவ்வாறு அழிக்கப்பட்டு / பிற்படுத்தப்பட்டு வந்திருக்கிறது என்பதை ஆதாரபூர்வமாக விளக்கி, எங்கள் கல்வி நிர்வாகக் கட்டமைப்புகள் எவ்வாறு அவ்வாறான அழிப்புகளுக்குத் தெரிந்தோ / தெரியாமலோ துணை போயிருக்கிறார்கள் என்பதையும் அந்தக் குளறுபடிகளை மாற்றி அமைக்க உண்மையில் மாற்றம் விரும்பும் அதே கட்டமைப்பிலுள்ள கல்வியியலாளர்கள் கரங்களை பலப்படுத்த, தகவல் அறியும் உரிமைச் சட்டம் (RTI-Right to Information) மூலம் எவ்வாறு இதுவரை எங்கள் கல்விச் சமூகம் உணர்ந்திராத / அறிந்திராத குறைபாடுகளை அம்பலப்படுத்தி சமூகவெளிக்குக் கொண்டு வரலாம் என்பதையும் ஆழமாக ஆராய்கிறது இக்கட்டுரை!

இந்தக் கட்டுரை, எங்கள் கல்வித்துறையில் உண்மையான பற்றுறுதியுடன் நேர்மையாக உழைக்கும் எந்த ஒரு அதிகாரியையோ, அதிபரையோ, ஆசிரியரையோ, தொண்டர் ஆசிரியரையோ அதிபரையோ, கல்விப்பணிப்பாளர்களையோ நோகடிக்கும் நோக்கம் கொண்டதல்ல. மாறாக எங்கள் கல்வி நிர்வாகத்தினுள் சுயநலங்களுக்காகவும் அரசியல் இலாபங்களுக்காகவும் நிர்வாகக் குறைபாடுகளை / உண்மையில் வேலைசெய்ய நினைப்பவர்களுக்கு முட்டுக்கட்டை போடுபவர்களினதும் முகத்திரைகளையும் கிழித்துவிடும் முயற்சி அல்லது அவை கிழிந்து தொங்க முதல் அவர்களை நேர்மையாக இயங்க வைப்பதற்கான உச்சபட்ச அழுத்தத்தைப் பிரயோகிக்கும் முயற்சி! அதை எங்கள் கல்விப்புலம் மேலோங்க வேண்டும் என நினைக்கும் நீங்கள் ஒவ்வொருவரும்தான் கொடுக்கப்போகிறீர்கள்! அந்தச் சமூக அழுத்தத்தை எங்கள் கல்வி நிர்வாகக் கட்டமைப்புகள் இதுவரை காலமும் கண்டிருக்க வாய்ப்பில்லை! ஆக இறுதிவரை வாசித்து உங்களுக்காகக் கொடுக்கப்பட்ட கடமையை தயவு செய்து நிறைவேற்றுங்கள்!


இலங்கை கல்வித் திணைக்களத்தால் இறுதியாக வெளியிடப்பட்ட 2018 இற்கான புள்ளிவிபர அறிக்கையையும் (http://www.statistics.gov.lk/page.asp? page= Education) அதனைத் தொடர்ந்து அதற்கு முந்திய அறிக்கைகளையும் ஆராய்ந்து தற்போது பல நுட்பமான தரவுகள் சிக்கியது.

1) இலங்கையில் ஆசிரியத்துவத்தில் பட்டதாரி ஆசிரியர்களின் சராசரி சதவீதம் 44% ஆக இருக்க முதல் மூன்று நிலைகளில் உள்ள மேல் மாகாணம், தென்மாகாணம், வடமேல் மாகாணம் ஆகியன முறையே 55.7%, 46.1%, 45.8% ஆக அதிகபட்ச பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டிருக்கின்றன.

**28. Teachers of Government Schools by Category of Appointment by Province - 2018**

| Province | Graduate Teachers | Trained Teachers | Trainee Teachers | Untrained Teachers | Other Teachers | Total | Graduate % |
|---|---|---|---|---|---|---|---|
| | Category of Appointment | | | | | | |
| 1. Western | 25,642 | 19,989 | 230 | 52 | 111 | 46,024 | 55.7 |
| 2. Central | 14,039 | 20,106 | 844 | 630 | 22 | 35,641 | 39.4 |
| 3. Southern | 14,104 | 16,048 | 291 | 129 | 29 | 30,601 | 46.1 |
| 4. Northern | 7,054 | 10,751 | 323 | 20 | 10 | 18,158 | 38.8 |
| 5. Eastern | 9,038 | 13,740 | 570 | 94 | 5 | 23,447 | 38.5 |
| 6. North Western | 13,509 | 15,314 | 548 | 103 | 28 | 29,502 | 45.8 |
| 7. North Central | 8,137 | 9,430 | 270 | 50 | 4 | 17,891 | 45.5 |
| 8. Uva | 7,779 | 11,832 | 516 | 270 | 97 | 20,494 | 38.0 |
| 9. Sabaragamuwa | 11,439 | 13,425 | 427 | 273 | 12 | 25,576 | 44.7 |
| Total | 110,741 | 130,635 | 4,019 | 1,621 | 318 | 247,334 | 44.8 |


Source : School Census 2018




இறுதி மூன்று நிலைகளில் உள்ள வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம், ஊவா மாகாணம் ஆகியவை முறையே 38.8%, 38.5%, 38% ஆக மிகக்குறைந்த பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டிருந்தார்கள். இந்த மூன்று மாகாணங்களும்தான் கடந்த கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை முடிவுகளில் இறுதி மூன்று இடங்களையும் பெற்றிருந்தார்கள் என்பது நேரடியாக ஒத்துப் போகிறது.

இதன் சூட்சுமம், 2005 வரை தொடர்ச்சியாக தரவுகளை ஆராய்ந்த போது பல உண்மைகளுடன் வெளிப்பட்டது. 2005 இல் தேசிய சராசரி 27.7% ஆக இருக்க மேல் மாகாணம் 34% பட்டதாரி ஆசிரியர்களுடனும் தென் மாகாணம் 30.7% உடனும் வட மாகாணம் மிகக்குறுகிய இடைவெளியில் 30% பட்டதாரி ஆசிரியர்களுடன் 3 ஆம் இடத்திலும் இருந்தன.

அன்று வடமேல் மாகாணம், வடமத்திய மாகாணம் ஆகியவை வடமாகாணத்தை விட மிக பின்தங்கிய இருந்தன. அன்றைய காலப்பகுதியில் வடமாகாணம் சாதாரண தர அடைவு மட்டங்களிலும் முன்னணியில் இருந்தது. ஆக இப்போது புரிகிறதா? நாங்கள் மெதுவாக எவ்வாறு பின் நோக்கி நகர்த்தப்படுகிறோம் என்பது இவை கடந்த 15 வருடங்களாக மிக நுணுக்கமாக நடைபெற்று வந்துள்ளது! இதை ஏன் யாரும் அவதானிக்கவில்லை?



நான் தொண்டர் ஆசிரியர்களுக்கோ, பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கோ எதிரானவன் அல்ல. அவர்களில் ஏராளமான திறமைமிக்க ஆசிரியர்கள் இருக்கிறார்கள்! அவர்களிடம் நானும் கற்றிருக்கிறேன். ஆனால், அதிகரித்து வரும் கல்வித் தரத்திற்கு ஈடு கொடுத்து கற்பிப்பதற்கான பின்புலங்களோ, பயிற்சிகளோ, பட்டதாரி ஆசிரியர்கள் பெற்றுக் கொண்டதற்கு ஒப்பாக ஏனைய ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை அல்லது அதற்கான பொறிமுறைகள் இல்லை / குறைவு! இதுவும் எங்கள் கல்விக் கட்டமைப்பில் உள்ள முக்கிய குறைபாடுதான்!

இது எவ்வாறு என்று சந்தேகங்கள் பின்வரும் காரணிகளால் வலுவாகியது.

அ) பட்டதாரி நியமனம் என்ற பெயரில் திறமைமிக்க வடமாகாணப் பட்டதாரிகள் பலர், முகாமைத்துவ உதவியாளர்கள் (DO) உள்ளிட்ட சில முகாமைத்துவம் சார்ந்த பதவிகளுக்கு உள்வாங்கப்பட்டமை. இதுவே பொதுவாக முதலில் நடைபெறுகிறது. பிறகு வேலை கிடைக்காது என்ற பயத்தையும் உருவாக்கி விட, பலரும் அள்ளுப்பட்டு சென்று அவர்கள் திறமைகளுக்கு உண்மையில் பொருத் தப்பாடு மிகக் குறைவான முகாமைத்துவ உதவியாளர் உத்தியோகங்களைப் பெற்று விடுகிறார்கள். ஆக ஆசிரிய பதவி விண்ணப்பங்கள் பின்னர் கோரப்படும் போது பல திறமை மிக்கவர்களும், இன்றைய அதி உச்ச கல்வித் தேவையான விஞ்ஞான பிரிவைச் சேர்ந்த பலரும் உள்வாங்கப்படவில்லை. விஞ்ஞானபாட அடைவு மட்டத்தில் தேசிய சராசரி 65% ஆக இருக்க வடமாகாண அடைவு மட்டம் இறுதிநிலையில் 51% ஆக இருந்தமை மேலதிக தகவல்.

ஆ) அதனைத் தொடர்ந்து வெற்றிடங்களை நிரப்புகிறோம் என்ற பெயரில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களையும், தொண்டர் ஆசிரியர்களையும் உள்வாங்கி அவர்களை நேரடியாக பிரதான ஆசிரியத்துவத்தில் அரசியல்வாதிகளின் சதுரங்கவேட்டைகளின் உதவியுடன் இணைக்கப்படுகிறார்கள்.

தொண்டர் ஆசிரியர்கள் உண்மையில் யுத்தகாலங்களில் எங்கள் கல்விப்புலத்தைத் தாங்கி நிற்கவும் இன்றும் பல பின்தங்கிய பிரதேசங்களில் பல பாடங்களை கற்பிக்கவும் உதவுவது என்றும் போற்றப்பட வேண்டியவர்களாக இருந்தாலும் அவர்களுக்கான போதிய பயிற்சிகளை வழங்கி உதவி ஆசிரியர்களாக சில காலமாவது பட்டதாரி ஆசிரியர்களுடன் பயணிக்க வைத்து அதன் பின் நேரடிக் கற்றலில் ஈடுபட வைப்பதுதான் நியாயம். தென் மாகாணத்தில் தொண்டர் ஆசிரியர் நியமனம் சில காலமாகவே வழங்கப்படவில்லை!

மேற்குறிப்பிட்ட இரண்டு வழிமுறைகள் மூலமாக தேசிய ரீதியான காய்நகர்த்தலாகப் பட்டதாரி ஆசிரிய விகிதம் கணிசமாகக் குறைக்கப்பட்டு இன்று இறுதிநிலைகளில் நாம் தள்ளப்பட்டுள்ளதாகக் கருதவேண்டியுள்ளது!

2) இன்னுமொரு அசாதாரண நிலையையும் இந்த புள்ளிவிபரங்களில் இருந்து அறிந்து கொண்டேன்.

வடமாகாணத்திலுள்ள கிட்டத்தட்ட 1000 பாடசாலைகளில் கிட்டத்தட்ட 43% பாடசாலைகளில் அதாவது, 423 பாடசாலைகளில் 9 அல்லது அதற்குக் குறைவான ஆசிரியர்களே உள்ளனர். வட மாகாணம்தான் இந்தப் பட்டியலில் இறுதி இடத்தில் உள்ளது. வடமாகாணத்தில் 5 மாவட்டங்கள் இருப்பதால் அதிகமான ஆரம்பப் பாடசாலைகள் இருக்கின்றன என்ற வாதம் உண்மையாயினும் இந்த எண்ணிக்கை ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது சற்று அதிகமாகக் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது. மற்றைய மாகாணங்களில் 10ஐ விடக் குறைவான ஆசிரியர்களைக் கொண்ட பாடசாலைகளின் எண்ணிக்கை விகிதம் குறிப்பிடத்தக்க அளவு குறைவு! இதன் அரத்தம் என்ன என்று புரிகிறதா? இன்று எங்கள் பாடத்திட்டத்தில் தொகுதிப் பாடங்கள் உள்ளடங்கலாக 20 இற்கு மேற்பட்ட பாடங்கள் உள்ளன. ஆக பத்திற்கும் குறைவான ஆசிரியர்களை வைத்துக்கொண்டு எப்படி 20 பாடங்களைக் கற்பிக்க முடியும்? முடிந்த அளவு சமாளிக்க கல்வித்திணைக்களங்கள் முயன்றாலும் இன்னமும், ஆசிரிய வளமின்மையால் பாதிக்கப்படும் பாடசாலைகளும் மாணவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இலவசக் கல்வியை வழங்கும் எங்கள் நாட்டில் எல்லா மாணவருக்கும் கல்விக்கான சம உரிமை உண்டு. அது எங்கள் நாட்டின் போற்றத்தக்க விடயங்களில் ஒன்று. அது நிர்வாக சீர்கேடுகளால் மறுக்கப்படும் சூழ்நிலை உருவாவது ஏற்றுக் கொள்ள கூடியதல்ல.

ஆக ஒன்றில் பல பாடசாலைகளில் சில பாடங்கள் கற்பிக்கப்படவில்லை அல்லது பொருத்தமற்ற அல்லது குறிப்பிட்ட பாடங்களில் அனுபவமற்ற ஆசிரியர்கள் அவற்றை கற்பிக்கும் சூழ்நிலை இருக்க வேண்டும். இது நியாயமா? இலவசக் கல்வி என்று சொல்லிவிட்டு பல மாணவர்களின் கல்விக்கும் சம உரிமையை கொடுக்காமல் விடுவது நியாயமா? சரியாகக் கல்வி கற்பிக்கப்படாமல், சம வளங்கள் பகிரப்படாமல் எப்படி அந்த மாணவர்கள் பெறுபேறுகள் பெறமுடியும்?

**அத்தியாயம் தொடரும்...**

> நான் தொண்டர் ஆசிரியர்களுக்கோ, பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கோ எதிரானவன் அல்ல. அவர்களில் ஏராளமான திறமைமிக்க ஆசிரியர்கள் இருக்கிறார்கள்! அவர்களிடம் நானும் கற்றிருக்கிறேன். ஆனால், அதிகரித்து வரும் கல்வித் தரத்திற்கு ஈடு கொடுத்து கற்பிப்பதற்கான பின்புலங்களோ, பயிற்சிகளோ, பட்டதாரி ஆசிரியர்கள் பெற்றுக் கொண்டதற்கு ஒப்பாக ஏனைய ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை அல்லது அதற்கான பொறிமுறைகள் இல்லை/ குறைவு! இதுவும் எங்கள் கல்விக் கட்டமைப்பில் உள்ள முக்கிய குறைபாடுதான்!

# அழிவுகளுக்கு மத்தியில் மெதுவாக முன்னேறும் ரஷ்யா

வானதி

உக்ரைனுக்கு எதிரான போரில் எதிர் பார்த்த வேகத்தில் ரஷ்யா முன்னேறவில்லை. ரஷ்யப்படைகள் பல நாட்களாக ஓரிடத்தில் தங்கி நிற்க வேண்டியதால், உக்ரைன் படைகளின் எதிர்த் தாக்குதலுக்குப் பதிலளிக்க முடியவில்லை. எரிபொருள் வாகனத் தொடரணியின் மீது உக்ரைன் தாக்குவதால் கனரக ஆயுதங்களைக் கைவிட வேண்டிய நிலை ரஷ்யாவுக்கு ஏற்படுகிறது.

ரஷ்ய - உக்ரைனின் போர் எப்படி நடக்கிறது என்பது குறித்து, முரண்பட்ட கணக்குகளை கொடுக்கின்றன. இதுவரை கொல்லப்பட்ட அல்லது காயமடைந்த ரஷ்ய துருப்புக்களின் எண்ணிக்கை பற்றிய சமீபத்திய உக்ரைனிய மதிப்பீடு உத்தியோகபூர்வ ரஷ்ய எண்ணிக்கையை விட அதிகமாகும்.

உக்ரைனிய அரசாங்கத்திற்கு அவர்களின் புள்ளி விவரங்களைக் குறைத்து மதிப்பிடுவதற்கு சிறிய ஊக்கம் இருப்பதால் - அவர்கள் ஒரு நேர்மறையான படத்தை வரைவதன் மூலம் மன உறுதியை அதிகரிக்க விரும்புவார்கள். உண்மையான எண்கள் ஆய்வாளர்களால் ஆவணப்படுத்தப்பட்டவற்றுக்கும் உக்ரைனிய அரசாங்கத்தால் கூறப்பட்டவற்றுக்கும் இடையில் எங்காவது இருப்பதாகக் கருதுவது நியாயமானது.



இது இன்றுவரை 151 முதல் 303 ரஷ்ய டாங்கிகளை உக்ரைன் கைப்பற்றியுள்ளது அல்லது அழித்துள்ளது.

சமூக ஊடக இடுகைகளில் இருந்துவரும் அதே திறந்த மூலத் தகவல், போர்க்களத்தில் யார் சிறப்பாக செயற்படுகிறார்கள் என்பதை ஒப்பிடவும் பயன்படுத்தப்படலாம்.

இந்தத் தரவுகளின்படி, 275 உக்ரைனிய உபகரணங்களுடன் ஒப்பிடுகையில், போர் தொடங்கியதில் இருந்து குறைந்தது 949 ரஷ்ய உபகரணங்கள் அழிக்கப்பட்டுள்ளன, சேதமடைந்துள்ளன, கைப்பற்றப்பட்டுள்ளன அல்லது கைவிடப்பட்டுள்ளன.

உக்ரைன் போரில் வெற்றி பெறுவது போல் தெரிகிறது. ஆனால், அது அவ்வளவு எளிதல்ல.

முதலாவதாக, பாதுகாப்பு உளவுத்துறை நிறுவனமான ஜேன்ஸின் மூல ஆய்வாளரான தாமஸ் புல்லக் "கிடைக்கும் சார்பு" என்று அழைப்பதன் காரணமாக இந்தத் தரவு நிகழ்வுகளின் உண்மையான படத்தைக் கொடுக்க வாய்ப்பில்லை.

அழிக்கப்பட்ட ரஷ்ய வாகனங்களின் படங்களை மக்கள் அதிகமாக இடுகையிடுவதால் இந்த சார்பு எழுகிறது.

புல்லக் ஸ்கை நியூஸிடம் தெரிவிக்கையில்:

"பல புரிந்துகொள்ளக்கூடிய காரணங்களுக்காக மோசமான விநியோக வழிகள் மற்றும் குறைந்த மன உறுதி ஆகியவை ரஷ்யாவை விட்டு வெளியேறுவதற்குக் காரணமாகும்

> **"ரஷ்யப் படைகள் சுமார் 860 குறிப்பிடத்தக்க உபகரணங்களை இழந்துள்ளன - டாங்கிகள், கவச வாகனங்கள் மற்றும் பீரங்கித் துண்டுகள் உட்பட, சுயாதீன ஆதாரங்களில் இருந்து சரிபார்க்கக்கூடிய புள்ளி விவரங்களின்படி அல்லது புகைப்பட ஆதாரங்களுடன் இது கணிக்கப்பட்டுள்ளது. அவைகளில் 60% கைவிடப்பட்டுள்ளன அல்லது கைப்பற்றப்பட்டுள்ளன. உக்ரைன் 250க்கும் குறைவானவற்றை இழந்துள்ளது. எந்தப் பக்கம் பின்வாங்கினாலும் சில உபகரணங்களை இழக்க நேரிடும், ஏனெனில் உபகரணங்களை விட்டுச் செல்ல வேண்டும்" என்று பேராசிரியர் கிளார்க் கூறுகிறார்.**

பெரும்பாலான ரஷ்ய வாகனங்கள் அழிக்கப்படவில்லை, ஆனால், அவை கைவிடப்படுகின்றன அல்லது கைப்பற்றப்படுகின்றன என்பதைக் காட்டுகிறது. ஆனால், உக்ரைனிய வாகனங்களுக்கு இந்த சதவீதங்கள் மிக அதிகமாக இருப்பதையும் இது காட்டுகிறது.

"எரிபொருளைச் சுற்றியுள்ள குறைந்த மன உறுதி மற்றும் விநியோக சிக்கல்கள் காரணமாக ரஷ்ய உபகரணங்களின் கணிசமான விகிதம் கைவிடப்படலாம்," என்று அவர் கூறினார்.

"உக்ரைனிய உபகரணங்களைப் பொறுத்தவரை, இவற்றில் பல தளங்கள் முறியடிக்கப்பட்டு, துருப்புக்கள் விரைவாக பின்வாங்க வேண்டிய சூழ்நிலைகள் உள்ளன, இதனால் உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் கைவிடப்பட்டன."

இவை அனைத்தும் இன்னும் தெளிவற்ற முடிவுகளை மட்டுமே எடுக்க முடியும் என்பதாகும். ரஷ்யா உக்ரைனியப் படைகளை முறியடிக்கவில்லை, ஆனால், உக்ரைன் போரில் வெற்றிபெறப் போகிறது என்றும் கூற முடியாது.

திறந்த மூலத் தகவல்கள் உக்ரைனுக்கு நேர்மறையாக இருக்கக்கூடும். உக்ரைனியர்கள் தங்கள் படைகளின் படங்களை இடுகையிட விரும்பவில்லை.

"எதிரி படையெடுப்புப் படையாக இருப்பதால் ரஷ்ய வாகனங்கள் அழிக்கப்படுவதைப் பற்றி அவர்கள் அதிகம் இடுகையிடுகிறார்கள். உக்ரைனிய உபகரணங்களின் இடுகைகளை நாங்கள் பார்த்தபோது, அதை பெரும்பாலான மக்கள் ரஷ்யன் என்று தவறாகப் புரிந்துகொள்வதால் தான்."

ரஷ்யாவில் உக்ரைனை விட ஆறு மடங்கு அதிகமான டாங்கிகள் உள்ளன, அதாவது இழப்புகள் அவற்றின் ஒட்டுமொத்த சக்திக்கு ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளன.

சமீப நாட்களாக ரஷ்ய ராணுவ சாதனங்கள் கைவிடப்பட்டு சாலையோரம் விடப்பட்டதாகச் செய்திகள் வெளியாகி வருகின்றன.

எரிபொருள் பற்றாக்குறைக்கு வழிவகுக்கும் ரஷ்ய இராணுவம் "குறிப்பிடத்தக்க" உபகரணங்களை இழந்து வருகிறது, "கிடைக்கும் துருப்புக்கள் தீர்ந்துவிடும் மற்றும் அதன் கான்வாய்களை கியிவ் நகருக்கு நகர்த்துவதில் தோல்வியடைந்தது என்று ஒரு பாதுகாப்பு ஆய்வாளர் கூறுகிறார்.

ரோயல் யுனைட்டட் சேவிஸ் இன்ஸ்ரிரியூட் (RUSI) இன் முன்னாள் டைரக்டர் ஜெனரல் மைக்கேல் கிளார்க், ரஷ்ய இராணுவம் உக்ரைனில் ஏன் போராடுகிறது என்று தோன்றுகிறது - ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் அடுத்த நகர்வுகள் என்னவாக இருக்கும் என்று கூறுகிறார்.

பேராசிரியர் கிளார்க் கூறுகையில், ரஷ்யப் படைகள் சுமார் 860 குறிப்பிடத்தக்க உபகரணங்களை இழந்துள்ளன - டாங்கிகள், கவச வாகனங்கள் மற்றும் பீரங்கித் துண்டுகள் உட்பட, சுயாதீன ஆதாரங்களில் இருந்து சரிபார்க்கக்கூடிய புள்ளிவிவரங்களின்படி அல்லது புகைப்பட ஆதாரங்களுடன் இது கணிக்கப்பட்டுள்ளது.

அவைகளில் 60% கைவிடப்பட்டுள்ளன அல்லது கைப்பற்றப்பட்டுள்ளன.

உக்ரைன் 250 க்கும் குறைவானவற்றை இழந்துள்ளது.

"எந்தப் பக்கம் பின்வாங்கினாலும் சில உபகரணங்களை இழக்க நேரிடும், ஏனெனில் உபகரணங்களை விட்டுச் செல்ல வேண்டும்" என்று பேராசிரியர் கிளார்க் கூறுகிறார்.

"அவர்கள் முயற்சி செய்து அதை வெடிக்கச் செய்கிறார்கள். அதை முடக்குகிறார்கள் அழிக்கிறார்கள். இது உக்ரைனின் எதிர்த்தாக்குதல்கள், உள்ளூர் எதிர்த்தாக்குதல்கள் மிகச் சிறப்பாகச் செயற்படுவதைக் குறிக்கிறது.

உக்ரைனிய வட்டாரங்கள் ரஷ்யா 11,000 துருப்புக்களை இழந்துள்ளதாகக் கூறுகின்றன. ஆனால், சரிபார்க்கக்கூடிய ஆதாரங்கள் இந்த எண்ணிக்கையை 10,000 க்கு அருகில் வைத்துள்ளதாகப் பேராசிரியர் கிளார்க் கூறுகிறார்.

ஒன்பது ஆண்டுகளில் ரஷ்யர்கள் 15,000 துருப்புக்களை இழந்த ஆப்கானிஸ்தானில் நடந்த மோதலுடன் ஒப்பிடும்போது இது மிகவும் மோசமானது என்று அவர் கூறுகிறார்.

ரஷ்யா இன்னும் கிழக்கிலிருந்து அதிக படைகளை அனுப்புவது போல் தெரிகிறது, அது இன்னும் நான்கு அல்லது ஐந்து நாட்களில் வந்து சேரும் என்று தெரிகிறது. மினிவான்கள் போன்ற இராணுவம் அல்லாத வாகனங்களில் அவர்கள் வருவது போல் தெரிகிறது.

"உங்களை விரும்பாத ஒரு நாட்டை ஆக்கிரமிக்க முயற்சிப்பதில் ரஷ்யர்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை" என்று பேராசிரியர் கிளார்க் கூறுகிறார்.

இதன் பொருள் அவர்கள் கூறுவது போல், மக்களை விடுவிப்பதாக இருந்தால், பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்க அவர்கள் துருப்புக்களை விட்டுச் செல்ல வேண்டும் என்று அவர் கூறுகிறார்.

பேராசிரியர் கிளார்க் கூறுகையில், கியூவ் நோக்கிச் சென்ற ரஷ்ய வாகனத் தொடரணி ஆறு நாட்களில் நகரவில்லை கியூவ் மீதான அதன் திட்டமிட்ட தாக்குதலுக்கான முக்கிய பிரச்சினை.

இது ஒரு "உட்கார்ந்து இருக்கும் இலக்கு" என்று ஒப்புக்கொண்ட அவர், உக்ரைனியப் படைகள் ட்ரோன்களைப் பயன்படுத்தித் திறம்பட தாக்குவதாகக் கூறுகிறார்.

உக்ரைனிய துருப்புக்கள் பனிஷர் ட்ரோன் என்று அழைக்கப்படும் தங்கள் சொந்த ட்ரோனைக் கொண்டுள்ளனர், இது மின்சாரம் மற்றும் ஒரு வெடிகுண்டை சுமந்து செல்கிறது.

"இது ராடரில் தெரியாது. இது மின்சாரம் என்பதால் அதை எளிதில் கண்டுபிடிக்க முடியாது" என்று பேராசிரியர் கிளார்க் கூறுகிறார்.

"அவர்கள் புத்திசாலிகள் ஏனென்றால், அவர்கள் எரிபொருள் வாகனங்களைத் தாக்குகிறார்கள்.

இந்தக் கான்வாய் சுமார் 15,000 துருப்புக்களைக் கொண்டுள்ளது - இது அடிப்படையில் ஒரு கவசப் பிரிவு மற்றும் அநேகமாக 230 டாங்கிகள்.

அவர்கள் டாங்கிகளைத் தாக்கவில்லை, எரிபொருளைத் தாக்குகிறார்கள்."

■

# பெண்களைத் தெய்வம் ஆக்காதீர்கள்!



புதிதாகக் கல்யாணமாகியிருந்த எனது நண்பன் வீட்டுக்குப் போய் வாழ்த்துரைக்க இருந்தேன். ஒரே இடத்தில் வேலை செய்யும் அவர்களது திருமணம் காதல் திருமணம். பெண்ணை ஓரிரு தடவை சந்தித்திருந்தாலும் பெரிதாக பேசிக் கொண்டதில்லை. வழமையான விசாரிப்புகள் முடியும் முன்னரே தொலைபேசி அழைப்பை காரணம் காட்டி நகர்ந்து சென்றவள் வர தாமதமாகியதால் தானே சென்று தேநீரும் சில சிறுண்டிகளுடனும் வந்தான் நண்பன். சிரித்துக் கொண்டே "இப்போதைய பெண்கள் எல்லாம் கொடுத்து வைத்தவர்கள். என்னைப் போல புருஷன் கிடைத்ததால்" என்றான். என்னால் ஏன்? என்று கேட்காமல் இருக்க முடியவில்லை.

"நான் அவளுக்கு எல்லா சுதந்திரமும் கொடுத்திருக்கிறேன். அவள் வேலைக்கும் போறாள். வீட்டிலையும் எல்லா வேலைகளிலும் நான் ஹெல்ப் பண்றன். இதை விட என்ன வேணும்?" பெருமிதத்துடன் பதிலளித்தான்... "இப்ப ஆணும் பெண்ணும் சமம் என்ற நிலை வந்திட்டு... நீ என்ன சொல்ற?" இந்தக் கேள்வியை மட்டும் தவிர்த்திருக்கலாம்.

உண்மையிலேயே இன்றைய பெண்கள் அனைவரும் சுதந்திரமானவர்கள் தானா?

எங்கெல்லாம் ஆண் ஒருவன் என் மனைவிக்கோ மகளுக்கோ பூரண சுதந்திரம் கொடுத்திருக்கிறேன் என்று சொல்கிறானோ அங்கிருந்தே ஆணாதிக்கம் தலையெடுக்கத்துவங்கிறது. ஒருவர் நமக்கு சுதந்திரத்தைத் தருகிறேன் என்று சொல்லும் போதே அவர் நம்மை விட ஒரு படி மேலே இருக்கிறேன் என்பதை அங்கு பதிவு செய்கிறார் என்றே அர்த்தம் இல்லையா? ஆகவே, பெண் என்பவள் தனக்கு கீழே இருக்கிறாள் என்பது ஆண்கள் மனதில் ஆதிகாலம் தொட்டே கலாசாரம், பண்பாடு எனும் போர்வையில் விதைக்கப்பட்டிருக்கிறது.

பெண்ணைத் தெய்வமாகவும் தியாகத் திருவுருவமாகவும் வழிப்படுவதும் எமது கலாசாரமே. இதுவே பெண் மீது திணிக்கப்படும் அடக்குமுறையாகும். ஆண் தவறிழைக்கலாம், வழி தடுமாறிப் போகலாம். ஆனால், பெண்ணான நீ எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு கணவன், பிள்ளைகள் குடும்பம் என மற்றவர்களுக்காக வாழ வேண்டும். ஏனெனில் பெண் பொறுமையின் வடிவானவள். பத்துமாதம் சுமந்து வாரிசுகளை உருவாக்கி வளர்த்து ஆளாக்கி தருகிறாள். ஆனால், அவளுக்கு அந்த வாரிசுகள் மீது எந்த விதமான உரிமையும் வழங்கப்படுவதில்லை. இன்றும் பெயருக்குப் பின்னால் தந்தையின் பெயரே போட்டுக் கொள்கிறோம். யோசித்துப் பார்த்தால் என்ன அநியாயம் என்று தோன்றவில்லை? அன்றைய புராணங்கள், இதிகாசங்கள் தொடங்கி இன்றைய தமிழ் சினிமா, தொலைக்காட்சித் தொடர்கள் வரைக்கும் பெண் என்பவள் மற்றவர்களுக்காக வாழும் தியாக தெய்வம் என்பதையே பிரதிபலிக்கிறது. அவ்வாறு இல்லாமல் தனக்காக சுயநலமாக நடக்கும் பெண்கள் வில்லனாக்கப்படுகிறார்கள்.

பெண்ணைத் தெய்வமாக்குதல். இதுவே பெண்களை உணர்ச்சிவசமாக்கி அவர்களை அவர்களுக்காக சுயநலமாக வாழ நினைப்பதைத் தடுக்கும் இந்தச் சமுதாயத்தின் பேராயுதம்.

அவதார புருஷர்கள் எல்லாம் 1000 திருமணங்கள் கூட செய்யலாம். பெண்ணொருத்தி ஐந்து கணவன்மாருடன் வாழ அக்கினியில் குதிக்க வேண்டி இருந்தது. இன்றும் இந்த நிலையில் எந்த மாற்றமும் இல்லை. பல பெண்களுடன் நட்பு வைத்திருக்கும் ஆண் "மன்மதன்" எனப் பெருமிதத்துடன் திரிகிறான். ஆனால், பெண்ணுக்கு அவர்கள் வைத்த பெயர் "விபச்சாரி". இங்கு ஆண் ஒருவனை பழிவாங்கவோ இல்ல திட்டுவதற்கோ அவன் வீட்டுப் பெண்ணே அவமதிக்கப்படுகிறாள். இங்கு அநேக தீஞ்சொற்கள் பெண்ணையோ பெண்ணுறுப்புகளை சாடியோ இருப்பதேன்?

> எங்கெல்லாம் ஆண் ஒருவன் என் மனைவிக்கோ மகளுக்கோ பூரண சுதந்திரம் கொடுத்திருக்கிறேன் என்று சொல்கிறானோ அங்கிருந்தே ஆணாதிக்கம் தலையெடுக்கத் துவங்கிறது. ஒருவர் நமக்கு சுதந்திரத்தை தருகிறேன் என்று சொல்லும் போதே அவர் நம்மை விட ஒரு படி மேலே இருக்கிறேன் என்பதை அங்கு பதிவு செய்கிறார் என்றே அர்த்தம் இல்லையா? ஆகவே, பெண் என்பவள் தனக்குக் கீழே இருக்கிறாள் என்பது ஆண்கள் மனதில் ஆதிகாலம் தொட்டே கலாசாரம், பண்பாடு எனும் போர்வையில் விதைக்கப்பட்டிருக்கிறது.

அடுத்த பெரிய ஆபத்தான அடக்குமுறை ஆயுதம் இந்த "கற்பு". இந்தச் சொல் எதற்காக உருவாக்கப்பட்டது? இதன் உண்மைதான் பொருள் என்ன? இந்தக் கற்பு எங்கே இருக்கிறது? என் அறிவிற்கு எட்டியவரை, பெண்ணொருத்தி திருமணத்திற்கு முன்போ அல்லது கணவனை தவிர்த்து வேறொருவருடன் விரும்பியோ விரும்பாமலோ உடலுறவு கொண்டால் அவள் கற்பை இழந்தவளாகிறாளாம். ஆனால், ஆண்களுக்கு அவ்வாறான ஒரு விடயம் இல்லை. அவன் எத்தனை பெண்களோடு உறவுகொண்டாலும் அவன் இழக்கப் போவது எதுவுமில்லை. பெண்கள் அவர்களது மானத்தைக் காக்க உயிரைத் துறந்த கதைகளைப் பெருமையாகக் கூறி அவர்களை வணங்கும் சமுதாயமே எமது. இதன் மூலம் பெண்ணின் உயிரை விட அவளது மானம் பெரியது என்பதை அவள் மீது திணிக்கப்படுகிறது. இந்த மனநிலையை உபயோகப்படுத்தி இன்றும் புகைப்படங்களை வைத்து மிரட்டிக் காரியம் சாதிக்கும் ஆண்கள் கூட்டம் ஒரு புறமிருக்க, இதனால் உயிரைக் கைவிட்ட பெண்கள்தான் எத்தனை?


ஆண்கள் தாம் செய்யும் களியாட்டங்களைப் பார்த்து பெண்களும் செய்யத் தொடங்கி விடுவார்களோ என்ற பயத்தில் உருவாக்கப்பட்ட சொல்லாகவே இந்தக் கற்பு என்னும் சொல்லைப் பார்க்கத் தோன்றுகிறது. பெண் உறவு கொள்வதால் ஏதோ ஒன்றை இழக்கிறாள் என்று அவர்கள் மனதில் பயத்தை விதைத்து வைத்திருக்கிறார்கள்.

ஆண் ஒருவனின் ஐந்து நிமிட இன்பத்துக்கு இரையாகும் பெண்ணோ, இல்லை விரும்பிப் பங்கேற்கும் பெண்ணோ, அவர்கள் எந்தவொரு விடயத்தையும் இழக்கப் போவதில்லை. அவர்கள் மானம் உயிரை விட மேலானதும் இல்லை என்பதை உணர வேண்டும். பெண்களே! தயவு செய்து இந்தச் சமுதாயம் புனைந்து வைத்திருக்கும் மாயையில் இருந்து விடுபடுங்கள். பெண் தேவியும் இல்லை, அடியாளும் இல்லை, வெறும் மனிதப் பிறவியே. பிற மனிதர்களைப் போல அவளுக்கும் சுயநலமாக வாழவோ, தவறு செய்யவோ, திருத்திக் கொள்ளவோ எல்லா உரிமைகளும் உண்டு. பெண்ணுக்காக நீங்கள் வரையறுத்து வைத்திருக்கும் விம்பங்களைத் தகர்த்து விட்டு பெண்ணைப் பெண்ணாக சக மனுஷியாக வாழவிடுங்கள். அவள் அவளது சுதந்திரத்தைத் தானே எடுத்துக் கொள்வாள். அவள் அவளாகவே சுதந்திரமடைவாள்.

இவள்இராதை

# இந்துப் பண்பாட்டிற்கு மேலைத்தேசத்தவர்களின் பங்களிப்புக்கள்

செ.வெவோகா
இறுதி வருட சிறப்புக்கற்கை
கிழக்குப் பல்கலைக்கழகம்
வந்தாறுமூலை



இந்துப் பண்பாடானது இன்றைய காலப்பகுதியில் உலகம் முழுவதும் உள்ள பல நாடுகளில் சிறந்தமுறையில் பயில்நிலையில் வளர்ச்சியடைந்து வருகின்றன. இந்துப் பண்பாடு என்னும் போது சமயம், கல்வி, வர்த்தகம், கலை மற்றும் தத்துவம் என்பவற்றைக் குறிப்பிடமுடியும். இவற்றின் மூலமே மேலை நாடுகளில் இந்துப் பண்பாடு பரவி இன்று பரந்து வளர்ந்துள்ளதனையும் அவதானிக்கமுடிகின்றது. இந்துக்களின் மேலைத்தேய நாடுகளிற்கான பயணம் இந்துசமயத்தைச் சேர்ந்தவர்கள் மேலைத்தேய நாடுகளிற்குச் சென்று அங்கு தமது சமயம் சார்ந்த விடயங்களை வெளிப்படுத்தல் மற்றும் மேலைத் தேசத்தவர்களின் வருகை அதாவது மேலைத் தேசத்தவர்கள் இந்து சமயத்தினால் அல்லது இந்து சமூகத்தினரால் கவரப்பட்டு இந்துப் பண்பாட்டை உள்வாங்கி அதனை வெளிப்படுத்தல் என்பன மூலம் இந்துப் பண்பாடானது மேலைநாடுகளில் காலூன்றவும் சுதேச நாடுகளில் வளர்ச்சியடையவும் காரணமாக விளங்கின.

மேலைத்தேயர்கள் இந்துப் பண்பாட்டம்சங்களில் பிரதிபலிக்கின்ற தத்துவம், இலக்கியம், சமயம், கலை மற்றும் வழிபாடுகள், நிறுவனங்கள், ஆலயங்கள் எனும் அம்சங்களின் அடிப்படையில் தமது பங்களிப்புக்களினை மேற்கொண்டனர். அந்தவகையில் அகழ்வாராய்ச்சி மூலம் இந்தியாவில் தோன்றிய பண்பாடு இந்துப் பண்பாடு எனும் குறிப்பை உலகத்திற்கு வழங்கியவர்கள் மேலைத்தேய அறிவாராய்ச்சியாளர்களாவார். உலகின் பல பாகங்களிலும் நாகரிகங்கள் பல தோற்றம் பெற்றுக் காணப்பட்டன. எனினும் அந்நாகரிகங்கள் இயற்கை முதலான சீற்றத்தால் புதையுண்ட நாகரிகங்களை அகழ்வாராய்ச்சி செய்வதன் மூலம் அந்நாகரிகத்தில் பழங்கால மனிதனின் பண்பாட்டுக் கூறுகளான வாழ்க்கைமுறை, நம்பிக்கை, சடங்கு, வழிபாடு, தேசிய மொழி, கலையார்வம் முதலானவற்றைத் தெரிந்து கொள்ள முடியும்.

இவ்வாறு அறிந்து கொண்ட நாகரிகமாக விளங்குவது சிந்துவெளி நாகரிகமாகும். இந்த நாகரிகத்தினை உலகிற்குத் தெரியப்படுத்துவதுடன் அங்கு இந்துப் பண்பாடு நிலவியதாகவும் தமிழர் நாகரிகம் எனும் செய்தியை வழங்கியவர்கள் மேலைத் தேசத்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. கி.பி. **1922** ஆம் ஆண்டு காலத்தில் வேதகாலமே பழங்கால நாகரிகம் எனக் கூறப்பட்டு வந்தது. அவ்வாறு இருந்த போதிலும் இந்தியத் தொல்லியலாளர்கள் நடத்திய அகழ்வின் மூலம் மண்ணினுள் புதையுண்டிருந்த அழகிய இரு நகரங்களான மொகஞ்சதாரோ, ஹரப்பா எனும் நகரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்விடங்களில் தொடர்ந்து அகழ்வாராய்ச்சி நடாத்தி மண்ணிற்குள் புதையுண்டிருந்த இரு நகரங்களைப் பற்றி உலகறியச் செய்தவர் தொல்பொருள் ஆய்வியல் அறிஞர் சேர். ஜோன் மார்சல் என்பவராவார். இப் புதையுண்ட நகரங்களைப் பற்றிய செய்திகளைப் பிற்காலங்களில் சிந்துவெளி நாகரிகம் (Indus valley civilization), ஹரப்பா பண்பாடு (Harappan culture) என்ற தலைப்புக்களில் அறியப்படலாயின.

ஆசிய சமூகம் என அழைக்கப்படும் கழகமானது மேலைநாட்டவரான வில்லியம் ஜோன்ஸ் என்பவரால் நிறுவப்பட்ட இந்து அமைப்பாகும். இது இந்தியாவின் தலைநகரான கொல்கத்தாவில் நிறுவப்பட்டது. வில்லியம் கோட்டையில் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியாக விளங்கிய இராபர்ட் சாம்பர்சு தலைமையில் கூட்டம் நடாத்தி கிழக்கிந்திய பண்பாட்டுக் கூறுகளை ஆராய்ந்தறியும் நோக்குடன் இக் கழகத்தை நிறுவினார். **1784** ஆம் ஆண்டு நிறுவப்பட்டு **1832** இல் இதன் பெயர் "வங்காளத்தின் ஆசியக்கழகம்" எனப் பெயர் மாற்றம் பெற்றது. **1936** இல் "வங்காளத்தின் அரச ஆசியக்கழகம்" என்றும் பின்னர் இறுதியாக **1951** இல் "ஆசிய சமூகம்" என்று பெயர் மாற்றப்பட்டு தற்போதும் அப் பெயருடன் நிலைத்து நிற்பதை அவதானிக்கலாம். இவ் ஆசியக்கழகமே இந்துசமயப் பண்பாட்டு வளர்ச்சிக்கு அடிக்கல் எனலாம். இக்கழகத்தின் ஊடாக ஏட்டுச்சுவடிகள், இந்து இலக்கியங்கள் மொழிபெயர்க்கப்பட்டன அத்துடன் பாதுகாக்கப்பட்டன. புதிய நூலுருவாக்கம் செய்யப்பட்டன எனப் பல்வேறு பணிகளைப் புரிந்தது.

**1865** இல் பிரித்தானியாவில் பிறந்த ஜோன் வூட்ரொப் என்பவரினை நோக்கின், இவர் இந்தியப் பாரம்பரிய மொழியான சமஸ்கிருதத்தையும் இந்து தத்துவத்தையும் முறையாகப் பயின்றார். இந்து தத்துவத்தில் அதிக ஆர்வம் காட்டியதுடன் **20** சமஸ்கிருத நூல்களைத் தொகுத்தார். இந்தியத் தத்துவம் மற்றும் யோகா, தந்திரா முதலான தலைப்புக்களில் பல கட்டுரைகளை வெளியிட்டார். மேலைத் தேசத்தில் தந்திரத்தின் நவீன முன்னோடியாக இருந்தார். இந்தியத் தத்துவங்களான குண்டலினி, மந்திரம், தந்திரா, யந்திரா, காளி முதலானவை பற்றிய தனது ஆய்வுகளையும் மேற்கொண்டார்.

வில்லியம் ஜேம்ஸ் குரண்ட் என்பவரும் மேலைத்தேய தத்துவவியல் அறிஞர்களுள் ஒருவராவார். இவருடைய தத்துவம் தொடர்பான The story of philosopy எனும் நூல் சிறப்பிற்குரியதாகும். இதனை **1926** இல் எழுதியுள்ளார். இதனைத் தனது மனைவியான ஏரியல் டுரனட்டுடன் இணைந்து எழுதினார். இது தத்துவத்தைப் பிரபல்யப்படுத்துவதற்கு உதவியதாகக் கூறப்படுகின்றது. இந்தியா தந்த சகிப்புத்தன்மை, ஆத்ம அமைதியான உள்ளடக்கம் முதலான விடயங்களை உள்ளடக்கியதாக அமைகின்றது.

இந்துப் பண்பாடு தொடர்பான பங்களிப்பை ஆற்றிய மேலைத்தேயர்களுள் மிர்ரா அல்பாஸா என்பவரும் ஒருவராவார். இவர் **1878** பெப்ரவரி **21** இல் பிரான்ஸ் நாட்டின் பாரிஸில் பிறந்தவர். அனைவராலும் அம்மா என அழைக்கப்பட்டவர். ஆன்மீகக் குரு மற்றும் ஸ்ரீ அரவிந்தரின் இந்துமதச் செயற்பாடுகளிற்குத் துணை நின்றார். ஸ்ரீ அரவிந்தோ ஆச்சிரமத்தை நிறுவி ஆரோவில்லைச் சோதனை நகரமாகவும் உலகளாவிய நகரமாகவும் நிறுவினார். யோகா தொடர்பான எழுத்தாளர்களையும் குருக்களையும் தனது செல்வாக்கு மற்றும் தூண்டுதல்கள் மூலம் உருவாகினர். உலகெங்கிலும் பயணம் செய்து இறுதியாக இந்தியாவின் பாண்டிச்சேரிக்கு வந்து ஸ்ரீ அரவிந்தோ ஆச்சிரமம் நிறுவியதுடன் ஸ்ரீ அரவிந்தாவுடன் இணைந்து யோகாவை நிறுவி அதன் மாணவர்களிற்கு வழிகாட்டியாகவும் இருந்தனர்.

இந்துப் பண்பாட்டில் வேதங்கள் முக்கிய இடம் பெறுகின்றன. இவ்வாறு முக்கியம் பெறும் வேதத்தினை மேலைநாட்டவர்கள் ஆய்வு செய்ததன் மூலம் இந்துப் பண்பாடு தொடர்பில் பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளமையைக் காணலாம். அந்தவகையில் வேதத்தை ஆய்வு செய்தவர்களில் மேலைநாட்டுத் தத்துவவியலாளரான மக்ஸ்முல்லரும் ஒருவராவார். வேதகால ரிஷி எனச் சுவாமி விவேகானந்தரால் சுட்டப்பட்ட மக்ஸ்முல்லர் "தமது அகவாழ்வு நிறைவானதாகவும் இருக்க வேண்டுமாயின் இந்தியத் தத்துவ நூல்களைப் படிக்க வேண்டியது இன்றியமையாததாகும்" என்கிறார்.

இவரது படைப்புக்களில் **20** ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் தோற்றுவிக்கப்பட்ட நூலாக My Autobiography Afragment **(1901)** எனும் நூல் குறிப்பிடத்தக்கது. இவரது சிறந்த படைப்புக்களில் The Sacred books of the East எனும் நூலில் பல்லின ஒருமைப்பாட்டோடு இந்துமத மூலங்களைப் பற்றி தெளிவான வரையறைக்குள் எடுத்துரைப்பதைக் காணமுடிகின்றது.

கீழைத்தேய ஆய்வுகளிற்கு முக்கியத்துவம் அளிக்கும் Oxford பல்கலைக்கழகம் மக்ஸ்முல்லரின் நூலை வெளியீடு செய்தது. The sacred books of the East எனும் நூற்தொகுதி **50** நூல்களை உள்ளடக்கியது. இவை **1879** ஆம் ஆண்டிற்கும் **1910** ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் வெளிவந்தன. வெவ்வேறுபட்ட சமயங்களை ஒப்பிட்டு ஆராய்வதில் சிறந்த பல மொழி வல்லுனரான மக்ஸ்முல்லர் இவற்றைப் பதிப்பித்தது மாத்திரமின்றி **03** நூல்களை எழுதியுள்ளார்.

இவர்களைப் போன்று Kashinath Trimbak Telang, Geroge Thibaut, Maurice Bloomfield, Herman Oldenbery, Julius Eggeling, George Buhler Julius Jolly ஆகியோரும் இந்நூலில் எழுத்தாளர்களாக உள்ளனர். இந் நூலின் இந்துத் தத்துவங்கள், இந்துச் சட்டங்கள் மற்றும் இறையியல் மந்திரங்கள் என்பன தொடர்பாக ஆய்வு செய்துள்ளமையை அவதானிக்கலாம்.


இவர்கள் ஆற்றிய பங்களிப்புக்களின் காரணமாக இன்று உலகின் பல்வேறு இடங்களிலும் இந்து ஆலயங்கள் (அமெரிக்கா சுவாமி நாராயணா தந்திர், சுவிட்சலாந்து முருகன் கோயில், அவுஸ்ரேலிய முருகன் கோயில்), இந்துசமய நிறுவனங்கள் (இராமகிருஷ்ணமிஷன், அமெரிக்க கவாய் ஆதீனம்) மற்றும் இந்துக் கற்கைகளுடன் தொடர்பான கல்விநிறுவனங்கள் எனப் பரவலடைந்திருப்பதனையும் காணலாம். சுருங்கக் கூறின் இன்று இந்துப் பண்பாடானது உலக மயமாதலிற்குட்படவும் இவர்களது பங்களிப்புக்களும் ஒரு காரணம் என்பது கண்கூடு.


ஆகவே மேற்குறிப்பிட்ட விடயங்களை ஒட்டு மொத்தமாக நோக்குகின்ற போது மேலைநாடுகளில் பல்வேறு காரணங்களை அடிப்படையாகக் கொண்டு இந்துப் பண்பாடானது பரவியமையைக் காணமுடிகிறது. அல்லது பரவிய இந்துப் பண்பாட்டின் சிறப்புக்களை அலசியாராய்ந்த மேலைநாட்டவர்கள் அதில் ஆர்வம் ஏற்பட்டு இந்துப் பண்பாட்டின் அனைத்து அம்சங்களையும் ஆராயத்தொடங்கினர். குறிப்பாகச் சடங்கு, கலை, தத்துவம், சமயம் முதலான அம்சங்களை உள்ளடக்கிய இந்துப் பண்பாட்டை ஆராய்ந்தனர். ஆராய்ந்தது மட்டுமன்றி அவை தொடர்பானவற்றை தத்தமது நாடுகளில் பரவச்செய்ததுடன் இந்துப் பண்பாட்டம்சங்களை மேலை நாட்டாரும் அறியும் வகையில் பல பங்களிப்புக்களை ஆற்றினர்.

குறிப்பாக அகழ்வாராச்சிகள், இலக்கியங்கள் எழுதுதல், இலக்கிய மீளாய்வு, மொழிபெயர்ப்பு, கல்வி இலக்கியங்கள் எனப் பலவாறு தமது பங்களிப்புக்களை ஆற்றியுள்ளமையை அறியலாம். இன்று வரை பேணப்பட்டு வருகின்றமையை அவதானிக்கலாம். குறிப்பாக மேலைதேசங்களில் இந்துப் பண்பாடு தொடர்பான கற்கைகள் இடம்பெறுவதனையும் அவதானிக்கலாம். எடுத்துக்காட்டாக, பிரித்தானிய Oxford பல்கலைக்கழகத்தில் காணப்படுகின்றமையைக் குறிப்பிடலாம். இன்றைய காலப்பகுதியை விடுத்து அதற்கு முற்பட்ட காலம் தொடக்கம் இந்துப் பண்பாடு தொடர்பில் தமது பங்களிப்புக்களை மேலைநாட்டில் மட்டுமல்லாது இந்தியாவிலும் இலங்கையிலும் தமது பங்களிப்புக்களை ஆற்றியுள்ளனர் என்பதும் மனங்கொள்ளத்தக்கது.

இலங்கையில் வெளிநாட்டவரான விட்டாக்கர் என்பவர் மட்டக்களப்பு மண்டூர் முருகன் கோயில் தொடர்பாகவும் அக்கோயிலை அண்டியுள்ள சமூகம் தொடர்பாகவும் ஆய்வு செய்துள்ளமையை அவதானிக்கலாம். தென்கிழக்காசிய நாடான தாய்லாந்தில் இன்றுவரை இராமாயணச் செல்வாக்குக் காணப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணமாக அமைவது அந்நாட்டவரின் ஆரம்பகாலச் செயற்பாடுகளின் தொன்மங்கள் ஆகும். பகவத்கீதையை மேலைநாட்டறிஞர் சமஸ்கிருதத்தில் இருந்து ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்தமையை அறியலாம். அதே போன்று பல அறிஞர்களும் தமது ஆய்வுகளை மேற்கொண்டு இன்றுவரை நிலைத்து நிற்பதற்கு வழிவகுத்துள்ளதனை அவதானிக்கலாம்.

இவ்வாறு மேலைநாடுகளில் இந்துப் பண்பாடு நிலைத்து நிற்பதற்கும் பல அறிஞர்களும் ஆராய்ச்சியாளர்களும் செய்த பங்களிப்புக்களே காரணம். இவ்வாறு இவர்கள் செய்த பங்களிப்புக்களால் இன்று வரை மேலைநாட்டவர் மத்தியில் இந்தப் பண்பாடு நிலைத்து நிற்கின்றது என்பது கண்கூடு.





உசாத்துணைகள்.

**1.** முகுந்தன்.ச **(2021)**, இந்துக் கற்கைகளை வளமூட்டிய மேலைத்தேசத்து ஆளுமைகளும் ஆய்வுகளும், இந்துக் கற்கைகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**2.** www.gaurijiog.com/directory/indian-dance/Bharatanatyam-Dance/north-Amerika

**3.** https://www.google.com

**4.** https://www.ox.ac.uk/admissions/undergrauate/courses/orient-studies/sankit?wass1=1

# சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமாக மாற்றமடைகிறது வடமராட்சி கிழக்கு

பானு

யாழ் மாவட்டத்தின் வட முனையின் தென் கிழக்கே அழகிய கடற்கரையையும் எழில் வனப்பு மிகு வயல் வெளிகளையும் கொண்டு வடமராட்சி கிழக்குப் பிரதேசம் அமை யப் பெற்றுள்ளது. மணற்காடு தொடக்கம் சுண்டிக் குள கிராமம் வரை 18 கிராம அலுவலகர் பிரிவிலும் 16389 ற்கு மேற்பட்ட மக்கள் வாழ்கின்ற ஓர் அழகிய நிலப்பரப்பு. வடமராட்சி கிழக்கு, பறவைகளின் சுவர்க்க பூமியாகவும் மணல் வளம் நிறைந்த பகுதியாகவும் வரலாற்றுக் காலத்தில் பூர்வீகக் குடிகளான நாகர்கள் வாழ்ந்த இடம் என்ற சிறப்புப் பெறுகிறது. அதிக இடங்கள் வனஜீவராசிக்கு உரிய இடமாகவும் உள்ளது.

யாழ் மாவட்டத்தில் இப் பிரதேசம் ஒடுங்கிய நீண்ட வடிவில் வடக்கே இந்து சமுத்திரத்தையும் தெற்கே தொண்டமனாறு கடல் நீரேரியாலும் கிழக்கே நன்னீர் தொடுவாயினாலும் சூழப்பட்டு காட்சியளிக்கிறது.

வடமராட்சிக் கிழக்குப் பிரதேசம் வரலாற்று சிறப்பம்சங்களையும் தமிழர் அடையாளங்களையும் பிரதிபலிக்கும் விடயங்களை தன்னகத்தே கொண்டமைந்த இப் பிரதேசம் சுற்றுலாத்துறைக்குச் சிறந்த பல இடங்கள் உள்ளன. சுண்டிக்குளத்தில் பறவைகள் சரணாலயம், அழகிய கடற்கரைகள், மணல் மேடுகள், சவுக்கம் காடுகள், ஒல்லாந்தர் கோட்டை, புராதன பழைய வீடு, பல சிறப்பு வாய்ந்த வழிபாட்டுத் தலங்கள் மண்டலாய் பிள்ளையார் ஆலயம், பிலப்பு நேரியன் தேவாலயம், நாகதம்பிரான் ஆலயம், கப்பல் ஏந்திய மாதா, புல்லாவெளி புனித செபஸ்தியான், கண்டல் தாவரங்கள். ஆனால், இவ்விடங்கள் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் அபிவிருத்திகளோ, விளம்பரங்களோ செய்யப்படுவதில்லை.

பல முறை யுத்த பாதிப்புகளையும் 2004 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தையும் சந்தித்தது. பல ஆயிரம் மக்கள் இறந்தும் உடல் அவயங்களையும் இழந்தும் இன்றும் அப் பாதிப்புகளோடு மீள முடியாமல் வாழ்ந்து வருகிறார்கள். உயிரழிவுகள் மட்டுமல்ல சொத்து, பொருளாதார இழப்பு என்பனவற்றால் மிகவும் பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்கிறார்கள்

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் உள்ள சுற்றுலா மையங்களை அபிவிருத்தி செய்து அதைப் பிரபலப்படுத்துவதன் ஊடாக உள்ளூர், வெளிநாட்டு பயணிகள் வந்து போக வாய்ப்பாக இருக்கும். வடமராட்சி கிழக்கின் சுற்றுலா மையங்களில் முள்ளியான் கிராம அலுவலகர் பிரிவுக்குட்பட்ட நித்திய வெட்டைக் காட்டுக்குள் புராதன வீடு ஒன்று உள்ளது.

இப் புராதன வீட்டைப்பற்றி மக்கள் அறிந்திருந்தாலும் அங்கு முனி இருப்பதாகப் பழைய காலம் முதல் முதியவர்களால் கூறி வருவதனால் அப் பகுதிக்குக் கிராம மக்கள் செல்வது குறைவு. இப் புராதன வீடு




கிளிநொச்சி மாவட்டத்துக்குட்பட்ட இயக்கச்சிக் கோட்டையிலிருந்து தென் கிழக்கே ஏழு கிலோ மீற்றர் தொலைவிலுள்ள நித்திய வெட்டை முள்ளியான் கிராமத்தில் உள்ளது.

புராதன வீடு இருக்கும் பகுதியில் யாழ் பல்கலைக் கழக தொல்லியல் இணைப்பாளர் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் மற்றும் தொல்லியல் சிறப்புக் கலை மாணவர்களும் காட்டுப் பகுதியில் அழிவடைந்த அரண்மனை இருப்பதாக அவ்வூர் மக்களால் கூறப்பட்ட தகவலையடுத்து ஆய்வை மேற்கொண்டார்கள்.

புராதன வீட்டை அவ்வூரைச் சேர்ந்த மக்கள் பலர் அரண்மனை எனவும் வேறு சிலர் இயக்கச்சிக் கோட்டையுடன் தொடர்புடைய சிறைக்கூடம் எனவும் அழைக்கின்றனர். ஆனால், கட்டடத்தின் அமைப்பையும் அதன் காலத்தையும் நோக்கும்போது அது பண்டைய காலத்தில் அங்கு வாழ்ந்த மக்களது வீடாக இருக்கலாம் என்பதை உறுதிப்படுத்த முடிகிறது. இவ் வீடு காட்டின் நடுவேயுள்ள பெரிய குளத்துக்கு அருகேயுள்ள உயர்ந்த மேட்டு நிலத்தில் செங்கட்டிகள், களிமண், சுதை என்பன கொண்டு கட்டப்பட்டுள்ளது என புஸ்பரட்ணம் தெரிவித்துள்ளார்.

இப் புராதன வீட்டிற்கு வடக்கே பெரிய குளம் உள்ளது. குளத்தை நம்பி விவசாயம் செய்யும் நோக்கில் ஆதிகாலத்தில் வீடுகள் அமைந்திருக்கக்கூடும் எனவும் நோக்கலாம்.





இரண்டு அறைகளைக் கொண்ட இக்கட்டடம் ஏறத்தாழ ஒன்பது மீற்றர் நீளமும் நான்கரை மீற்றர் அகலமும் கொண்டது. இவ் வீட்டின் பின்பக்க அறைச்சுவரில், சிறிய யன்னல் ஒன்று இருப்பதற்கான அடையாளம் காணப்படுகிறது. கட்டடத்தின் பெரும்பாலான சுவர்கள் அழிவடைந்து விட்டாலும் கட்டடத்தின் மூன்று பக்க அத்திவாரங்களைத் தெளிவாகப் பார்க்க முடிகிறது. இந்தக் கட்டடத்தின் கூரை, கூரை மரங்கள், பனை ஓலைகள் கொண்டு மேயப்பட்டிருக்கலாம் எனக் கருத முடியும்.

இவ் வீட்டை அமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட செங்கட்டிகளின் அளவும் அவற்றின் தொழில்நுட்பமும் ஐரோப்பியர் ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்ட செங்கட்டிகளின் காலத்துக்கு முன்னர் பயன்படுத்தப்பட்ட காலத்தைச் சேர்ந்ததாகக் காணப்படுகின்றன. மேலும், இக்கட்டட இடிபாடுகளுக்கிடையே இருந்து எடுக்கப்பட்ட மட்பாண்ட ஓடுகள், சுடுமண்ணால் செய்யப்பட்ட நீர்ப்பாசனக் குழாய்கள் என்பவற்றின் காலம் ஏறத்தாழ கி.பி 15 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாகக் காணப்படுகின்றது. இவ் ஆதாரங்களைக் கொண்டு பார்த்தால் இவ் வீடு யாழ்ப்பாண அரசுக் காலம் அல்லது அதற்கு முந்திய காலத்தைச் சேர்ந்ததெனக் கூறமுடியும். ஆகவே வட இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட காலத்தால் முந்திய குடிமனையாக இதைக் கருத முடியும் என தொல்லியல் பேராசிரியர் புஸ்பரட்ணம் குறிப்பிட்டார்.

'வட இலங்கையில் பிரதான குடியிருப்புக்களைக் கொண்ட இடங்களில் வடமராட்சி கிழக்குப் பிரதேசமும் ஒன்றாகும். வெற்றிலைக்கேணி, உடுத்துறை, செம்பியன்பற்று, முள்ளியான், கட்டைக்காடு ஆகிய இடங்களில் மேற்கொண்ட ஆய்வுகளில் இவ்விடங்களில் இன்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னரே மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

யாழ்ப்பாண அரசர் காலத்தில் கடல் வழிகளாலும் வன்னியிலிருந்தும் தரை வழியாகக் கொண்டு வரப்பட்ட பொருட்களுக்கான வரி அறவிடும் கடவைகள் மேற்கூறப்பட்ட இடங்களில் ஆதாரங்கள் காணப்படுகிறது.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சியைத் தொடர்ந்து இவ்விடயங்களில் வாழ்ந்த மக்கள் படிப்படியாக பிற இடங்களுக்குச் சென்றதாக இவர் களின் ஆட்சிக் கால ஆவணங்கள் கூறுகின்றன. ஆயினும் இவ் இடங்களிலிருந்து கடல் வழியாகவும் தரை வழியாகவும் பொருட்கள் கடத்தப்பட்டதால் அவற்றைத் தடுப்பதற்காக ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தை காட்டிலும் அதிக எண்ணிக்கையிலான கோட்டைகளை இயக்கச்சி, ஆனையிறவு, வெற்றிலைக் கேணி போன்ற இடங்களில் கடற்கரையை அண்டிய இடங்களில் காவல் அரண்கள் அமைத்தனர் என வரலாற்று ஆய்வுகளூடாக அறிய முடியும்.

முள்ளியான், நித்திய வேட்டை காட்டுப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட கட்டட அழிபாடுகள் ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் செறிவான தமிழர் குடியிருப்புகள் அங்கிருந்ததன் அடையாளமாகக் காணப்படுகிறது. இது போன்ற வீடுகளின் சிதைவுகளும் பாழடைந்த ஆலயங்களின் வழிபாடுகளும் இவ் வட்டாரத்தின் காட்டுப்பகுதியில் இருப்பதாகத் தெரிய வந்துள்ளது. எதிர்கால ஆய்வுகளைச் செய்வதன் மூலம் புது வெளிச்சம் பெறலாம் என பேராசிரியர் புஸ்ப ரட்ணம் குறிப்பிட்டார்.

இப் புராதன வீட்டை வைத்தும் அதன் காலப்பகுதிகளை வைத்தும் நோக்கும் போது ஆதிகாலம் முதல் இப் பிரதேசங்களில் தமிழர்கள் அதிகமானோர் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை நிரூபிக்கக் கூடியதாக உள்ளது. அவற்றை விட இன்னும் இப்பகுதிகளில் ஆய்வுகளை மேற்கொண்டால் பல வரலாற்று சிதைவுகளை அறியமுடியும். அதற்கு தொல்பொருள் திணைக்களமும் பிரதேச கலாசார அலுவலகமும் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப் புராதன ஆதிகால வீட்டை ஆய்வு செய்வதற்காகவும் மக்கள் வந்து பார்ப்பதற்கும் ஏற்ற வகையில் வரலாற்று பழமையான ஆதிகால வீடு என்ற வகையில் கல்வி நடவடிக்கைக்கும் மக்கள் பார்த்து இதைப் பற்றி அறிந்து கொள்வதற்கு ஏற்ற வகையிலும் வடமராட்சி கிழக்கு சுற்றுலா மையமாகப் பாதுகாக்கப்பட வேண்டும். இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டும்.

வடமராட்சி கிழக்கில் பல இடங்களைச் சுற்றுலா மையமாகவும் பாதுகாக்கப்பட வேண்டிய இடமாகவும் பிரகடனப்படுத்தி மாணவர்களின் கல்விச் சுற்றுலாக்கும் பொதுமக்கள் வந்து பார்வையிடும் இடமாகவும் மாற்றி வழியமைக்க உரிய தரப்பினர் முன் வர வேண்டும். அதை விடுத்து பின் தங்கிய இடம் என யாரும் கவனிப்பாரின்றி இருந்தால் வடமராட்சி கிழக்கின் பல வரலாற்று அம்சங்களையும் வடமராட்சி கிழக்குக்கே உரித்தான தனித்துவங்களையும் ஏனைய சமூகத்தினரும் எதிர்கால சமூகத்தினரும் அறிய எதிர்கால சமூகத்தினரும் அறிய முடியாமல் மறைக்கப்பட்டு விடும் என்பது நிதர்சனம் எதிர்காலத்தில் வடமராட்சி கிழக்கு சுற்றுலாத் துறையில் மிளிர வேண்டும். ■

# Z புள்ளி கணிக்கின்ற முறையும் அதன் பயன்பாடும்

சி.உதயகுமார்
BA.MA(Hons)PGDE,
DIP.in.Cinema

இலங்கையில் 2002/2003 கல்வியாண்டிற்கு முன்னர் க.பொ.த. (உ/தர) பரீட்சையில் மொத்த புள்ளிகளின் அடிப்படையிலேதான் மாணவர்கள் தரப்படுத்தப்பட்டு பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டனர். இம்முறையில் பல குறைபாடுகள் காணப்பட்டமையினால் Z அளவுத்திட்டம் எனும் முறை 2002/2003 கல்வியாண்டிலிருந்துதான் இலங்கையில் பயன்பாட்டிற்கு வரத்தொடங்கியது எனலாம்.

Z அளவுத்திட்ட முறை என்பது, ஏற்கெனவே மேலத்தேய நாடுகளில் பின்பற்றப்பட்டு வருகின்ற ஒரு முறை ஆகும்.

Z அளவுத்திட்ட அறிமுகம் காரணமாக, மொத்தப்புள்ளிகளின் அடிப்படையில் மாணவர்களைத் தரப்படுத்தும் முறையிலிருந்த பல குறைபாடுகள் நீக்கப்பட்டன. இதனால், பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களைத் தெரிவு செய்வதில் Z அளவுத்திட்ட முறை மிகுந்த பயனுடையதாக அமையத்தொடங்கியது.

மாணவர்கள் பாடங்களில் கேட்கப்படுகின்ற வினாக்களிற்கு விடையளிக்கும் போது கடினத்தன்மை, இலகுத்தன்மை என்பவை செல்வாக்குச் செலுத்துகின்றன. இவ்விரு தன்மைகளும் பல்கலைக்கழக அனுமதியில் செல்வாக்குச் செலுத்துதலை இயன்றளவு குறைத்துவிடுதலே Z அளவுத்திட்ட முறையின் நோக்கமாகும். அதாவது, பாடங்களிற்கு இடையே ஒரு சமச்சீர்த்தன்மையைப் பேணுதல் இதன் முக்கிய கடமை ஆகும்.

ஒரு மாணவன் குறித்தவொரு பாடத்தில் திறமையாக இருப்பதைவிட, அப்பாடத்தில் அம்மாணவன் மற்றைய மாண வர்களைவிட எவ்வளவு சதவீதம் திறமையாக உள்ளான் என்பதையே Z புள்ளித் திட்டம் எடுத்தியம்புகிறது.

**மூலப்புள்ளிகள்:**

குறித்தவொரு பரீட்சையில் மாணவனொருவன் பெற்றுக் கொண்ட புள்ளிகள் மூலப் புள்ளிகள் எனப்படும்.

உதாரணம் (1): இசைநிலவன் 4 பாடங்களில் பெற்றுக்கொண்ட புள்ளிகள் பின்வருமாறு.

கணிதம் 98, விஞ்ஞானம் 95,
தமிழ்மொழியும் இலக்கியமும் 99,
வணிகக்கல்வியும் கணக்கீடும் 89.

இவைதான், இசைநிலவன் என்ற மாணவனுக்குரிய மூலப்புள்ளிகளாகும்.

உதாரணம் (2): ஒரு வகுப்பில் 35 மாணவர்களும் அதே தரமுள்ள இன்னுமொரு வகுப்பில் 32 மாணவர்களும் உள்ளனர். இரண்டு வகுப்புகளிலும் உள்ள மாணவர்கள் சிலர், சில பாடங்களுக்குச் சம மான புள்ளிகளைப் பெற்றிருப்பர்.

இதனால், ஒரே பாடத்திற்குச் சமமான புள்ளிகளை பெற்றிருக்கின்ற மாணவர்கள் சமமான அறிவும் சமமான திறனும் உடையவர்கள் எனும் முடிவுக்கு வந்துவிட முடியாது.

ஏனென்றால், ஒரே தரமுள்ள இரண்டு வகுப்புகளுக்கும் ஒரே பாடத்திற்காக இரண்டு ஆசிரியர்கள் காணப்பட்டிருக்கலாம். அதாவது, ஒரே பாடத்திற்காக இரண்டு வகுப்புகளுக்குமான விடைத்தாள்களை திருத்துகின்ற இரண்டு ஆசிரியர்களின் மனப்பாங்கு ஒரேமாதிரியாக அமைந்து காணப்படமாட்டாது.

இவை போலவே, மேற்படி இரண்டு வகுப்புகளிலுமுள்ள மாணவர்கள் சிலரின் மொத்தப்புள்ளிகள் சமமாகவும் காணப்படலாம்.

ஒரே வகுப்பிலுள்ள மாணவர்கள் சமமான புள்ளிகளைப் பெற்றுவிட்டார்கள் என்பதற்காக, அத்தகைய மாணவர்களை சமவலுவுள்ள மாணவர்கள் என்று சொல்லிவிடவும் முடியாது.

ஏனென்றால், கட்டாயமான பாடங்கள் தவிர்த்து தொகுதிப்பாடங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பாடங்களின் இலகுத்தன்மையும், கடினத்தன்மையும் ஒரு மாணவனுடைய மொத்தப்புள்ளிகளில் செல்வாக்குச் செலுத்தியிருக்கலாம். இதற்காக, ஒவ்வொரு பாடத்திலும் ஒவ்வொரு மாணவனும் அதிகூடிய புள்ளியிலிருந்து எவ்வளவு புள்ளியால் விலகியுள்ளான் என்பதைக் கண்டறிவது திருத்தமான புள்ளி அளவுத்திட்டமாகும்.

இதற்காகவே, க.பொ.த.(உ/தர) வகுப்புகளில் மாணவர்களின் நிலை அறிவதற்கு Z புள்ளித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறையினை, ஒவ்வொரு பாடசாலையிலும் தரம் 6 தொடக்கம் க.பொ. த (உ/தர) வகுப்பு வரையான அனைத்து வகுப்புகளுக்கும் அறிமுகப்படுத்தி மாணவர்களின் நிலையினை அறிந்து கொள்வது சாலப்பொருத்தமாகும்.

**Z புள்ளி கணிக்கும் முறை:**

குறிப்பிட்ட மாணவர்கள் சிலர் P, Q, R, S, T, U, V ஆகிய பாடங்களில் பெற்ற புள்ளிகளும், அவற்றிற்கான Z புள்ளிகளும் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| மாணவர் பெயர் | P | $Z_P$ | Q | $Z_Q$ | R | $Z_R$ | S | $Z_S$ | T | $Z_T$ | U | $Z_U$ | V | $Z_V$ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இனியவன் | 75 | 0.4146 | - | - | 80 | 0.2121 | 84 | -0.1270 | - | - | - | - | - | - |
| பகலவன் | 80 | 0.8117 | - | - | - | - | 90 | 1.2065 | - | - | 82 | -0.5135 | - | - |
| காவியா | - | - | 60 | 1.1308 | - | - | 86 | 0.3175 | 92 | 1.4415 | - | - | - | - |
| எழிலன் | 48 | -1.7292 | - | - | 84 | 1.4242 | - | - | 72 | 0.6680 | - | - | - | - |
| வினோத் | 72 | 0.1764 | - | - | 79 | 0.0909 | - | - | - | - | - | - | 82 | 0.5550 |
| நிலான் | - | - | 94 | 1.0292 | - | - | 76 | -1.9050 | - | - | - | - | 64 | -1.7760 |
| சந்தோஸ் | - | - | - | - | 81 | 0.5152 | 90 | 1.2065 | - | - | - | - | 79 | 0.1665 |
| துர்க்கா | 57 | -1.0146 | - | - | - | - | - | - | - | - | 90 | 0.6947 | 82 | 0.5550 |
| தேனினியன் | - | - | 81 | 0.2033 | - | - | - | - | 90 | 1.2305 | - | - | 72 | -0.7400 |
| விதுசா | - | - | - | - | 73 | -1.9091 | - | - | 68 | -1.0899 | 96 | 1.6009 | - | - |
| செழியன் | 75 | 0.4146 | 59 | 1.1944 | - | - | - | - | 78 | -0.0352 | - | - | - | - |
| நித்திலா | 56 | -1.0940 | - | - | 79 | 0.0909 | - | - | - | - | 81 | -0.6645 | - | - |
| நிலாமதி | 90 | 1.6057 | - | - | - | - | 82 | -1.5715 | - | - | - | - | 75 | -0.3515 |
| மகிழ்நன் | - | - | 95 | 1.0927 | - | - | 84 | -0.1270 | - | - | 78 | -1.1176 | - | - |
| நிலானி | 75 | 0.4146 | - | - | - | - | - | - | 70 | 0.8789 | - | - | 90 | 1.5910 |

அட்டவணை (1)

P என்ற பாடத்தில் இனியவன் 75 புள்ளியினையும் V என்ற பாடத்தில் நிலாமதி 75 என்ற புள்ளியினையும் பெற்றுள்ளனர். இவர்கள் விடையளித்த வினாத்தாள்களின் கடினத்தன்மை ஒரேயளவாக இருந்திருக்கும் என்று சொல்ல முடியாது. இவற்றில், எந்த வினாத்தாள் கடினத்தாளோ, அந்த வினாத்தாளிற்கு விடையளித்த மாணவனே திறமைசாலியாக இருக்க முடியும்.

**மொத்தப்புள்ளி மற்றும் Z புள்ளியின் அடிப்படையில் மாணவரின் நிலை:**

| மாணவர் பெயர் | மொத்த புள்ளி | மொத்த Z புள்ளி | மொ.பு.அடி.இல் மாண.நிலை | Z புள்.அடி.இல் மாண.நிலை | பெறுபேறு |
|---|---|---|---|---|---|
| இனியவன் | 239 | 0.4997 | 6 | 7 | 3A |
| பகலவன் | 252 | 1.5047 | 2 | 2 | 3A |
| காவியா | 238 | 0.6282 | 7 | 6 | 2AC |
| எழிலன் | 204 | -0.9730 | 15 | 12 | ABS |
| வினோத் | 233 | 0.8223 | 11 | 4 | 2AB |
| நிலான் | 234 | -2.6518 | 10 | 15 | 2AC |
| சுந்தோஸ் | 250 | 1.8882 | 3 | 1 | 3A |
| துர்க்கா | 229 | 0.2351 | 12 | 8 | 2AC |
| தேனினியன் | 243 | 0.6938 | 5 | 5 | 2AB |
| விதுசா | 237 | -1.3981 | 13 | 13 | A2B |
| செழியன் | 212 | -0.8150 | 11 | 11 | 2AC |
| நித்திலா | 216 | -1.6676 | 14 | 14 | 2AC |
| நிலாமதி | 247 | -0.3173 | 10 | 10 | 3A |
| மகிழ்நன் | 257 | -0.1519 | 9 | 9 | 3A |
| நிலானி | 235 | 1.1267 | 3 | 3 | 2AB |

அட்டவணை (2)

**Z புள்ளி கணித்தல்**

$$Z = \frac{Xi - \bar{X}}{SD}$$

இங்கு, Z : Z புள்ளி
Xi : குறித்த பாடத்திற்கான புள்ளி.
$\bar{X}$ : குறித்த பாடத்திற் கான சராசரி.
SD : குறித்த பாடத்திற்கான நியமவிலகல்.
N : மீடிறன்களின் கூட்டுத்தொகை.

$$SD = \sqrt{\frac{\sum(X - \bar{X})}{N}}$$

அட்டவணை (2) இலே மொத்தப்புள்ளிகளின் அடிப்படையிலான மாணவர் நிலையும் Z புள்ளி அடிப்படையிலான மாணவர் நிலையும் மாறியிருப்பதை அவதானிக்கலாம்.

**உய்த்தறிதல்:**

$Z = \frac{Xi - \bar{X}}{SD}$ என்பதை நோக்குவோம்.

$Z \geq 1$ ஆக இருப்பதற்கு, $\frac{Xi - \bar{X}}{SD} \geq 1$ ஆதல் வேண்டும்.

$SD > 1$ என்பதால், $X_i - \bar{x} \geq 1$ ஆகும்.

$$\therefore X_i \geq SD + \bar{x}$$

இந்த இறுதி முடிவிலிருந்து நாம் பெற்றுக் கொள்ளும் முடிவு யாதெனில், ஒரு மாணவன் குறித்தவொரு பாடத்தில் அவனின் Z புள்ளி 1 இலும் அதிகமாக இருக்க வேண்டுமெனில், குறித்த பாடத்திற்கான சராசரி புள்ளியினதும், குறித்த பாடத்திற்கான நியம விலகலினதும் கூட்டுத் தொகையானது குறித்த பாடத்திற்கான புள்ளியிலும் குறைவாகக் காணப்படல் வேண்டும்.

(1) பாடம் p இற்கான நியமவிலகல் 12.5943 உம், பாடம் P இற்கான சராசரிப்புள்ளி 69.7778 உம் ஆகும். அந்த வகையில் பாடம் P இல் நிலாமதி பெற்ற புள்ளி 90 ஆகும். இந்தப்பெறுமதி 12.5943 இனதும் 69.7778 இனதும் கூட்டுத்தொகையிலும் அதிகம் என்பதை நீங்கள் அவதானிக்கலாம். இதனாலேயே நிலாமதியின் Z புள்ளி 1 இலும் அதிகமாகக் (1.6057) காணப்படுகிறது.

(2) பாடம் p இற்கான நியமவிலகல் 12.5943 உம், பாடம் P இற்கான சராசரிப்புள்ளி 69.7778 உம் ஆகும். அந்த வகையில் பாடம் P இல் பகலவன் பெற்ற புள்ளி 80 ஆகும். இந்தப் பெறுமதி 12.5943 இனதும் 69.7778 இனதும் கூட்டுத் தொகையிலும் குறைவு என்பதை நீங்கள் அவதானிக்கலாம். இதனாலேயே நிலாமதியின் Z புள்ளி 1 இலும் குறைவாக (0.8117) காணப்படுகிறது.

ஒரு மாணவன் போட்டி கூடிய பாடத்தினையோ, போட்டி குறைவான பாடத்தினையோ தெரிவு செய்தல் என்பது இங்கு பிரச்சினை கிடையாது. அது எந்த வகையானதாக இருந்தபோதும், அந்த வகையில் குறித்த மாணவனின் குறித்தவொரு பாடத்திற்கான அதிகபுள்ளி எதுவோ, அதற்கு மருவியதாக புள்ளி இருக்கிற போதுதான் அம்மாணவனின் Z புள்ளி 1 இனைவிடக் கூடுதலாக இருக்க வாய்ப்பிருக்கிறது.

(1) T என்ற பாடத்தில் காவியா பெற்ற புள்ளி 92 ஆகும். இதுவே அப்பாடத்திற்கான அதிகூடிய புள்ளியும் ஆகும். இதற்கான பேறு A ஆகும். அதே பாடத்தில் தேனினியனும் செழியனும் பெற்ற புள்ளிகள் முறையே 90 உம், 78 உம் ஆகும். இவர்களிற்கான பேறுகளும் A ஆகும். ஆனால், இவர்களிற்கான Z புள்ளிகள் முறையே, 1.4415, 1.2305, -0.0352 ஆகும்.

இங்கே, கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் என்னவெனில், செழியன் T பாடத்தில் A பேற்றினை பெற்றிருந்த போதும், T என்ற பாடத்தின் அதியுயர் புள்ளியான 92 இலும் பார்க்க அதிகளவு புள்ளிகளால் விலகியிருத்தலே அவனுடைய Z புள்ளி சய (-) பெறுமானத்தில் காணப்படுவதற்குக் காரணமாகும்.

இந்த சய (-) பெறுமதி செழியனின் மொத்த Z புள்ளியில் செல்வாக்குச் செலுத்தும். அதாவது, செழியன் நல்ல பெறுபேற்றினை எடுத்திருந்தபோதும் அவன் பல்கலைக்கழக அனுமதிக்குத் தெரிவு செய்யப்படாமல் போகலாம்.

(2) இங்கே தரப்பட்ட அட்டவணை (1) இன்படி P என்ற பாடத்தை 9 பேரும் Q என்ற பாடத்தை 5 பேரும் தெரிவு செய்து படிக்கின்றனர். P என்ற பாடத்தில் நிலாமதி 90 புள்ளியினையும் Q என்ற பாடத்தில் மகிழ்நன் 95 என்ற புள்ளியினையும் பெற்றிருந்த போதும் நிலாமதியின் Z புள்ளி 1.6057 ஆகவும், மகிழ்நனின் Z புள்ளி 1.0292 ஆகவும் காணப்படுவதை அவதானிக்கலாம்.

(3) மேலே (2) இல்,

(i) பாடங்கள் வேறுபட்டிருக்கின்றன.

(ii) பாடங்களைத் தெரிவு செய்த மாணவர்களின் எண்ணிக்கை வேறுபட்டிருக்கின்றன.

(iii) பாடங்களில் பெற்ற புள்ளிகள் வேறுபட்டிருக்கின்றன.

(iv) ஆனால், பேறுகள் A என்றே அமைந்திருக்கின்றன.

(v) Z புள்ளிகள் வேறுபட்டிருக்கின்றன.

P என்ற பாடத்திற்குப் போட்டி கூடுலாகவுள்ளது. இப்பாடத்தை எடுத்த நிலாமதியின் Z புள்ளி 12.5943 ஆகும். Q என்ற பாடத்திற்கு போட்டி குறைவாகவுள்ளது. இப்பாடத்தை எடுத்த மகிழ்நனின் Z புள்ளி 15.7404 ஆகும். போட்டி கூடுதலாகவுள்ள P என்ற பாடத்தின் சராசரிப்புள்ளி 69.7778 ஆகவும், போட்டி குறைவாக உள்ள Q என்ற பாடத்தின் சராசரிப்புள்ளி 77.8000 ஆகவும் காணப்படுகிறது.

P என்ற பாடத்தின் நியமவிலகலானது (12.5943), Q என்ற பாடத்தின் நியமவிலகலை (15.7404) விட குறைவாக அமைந்து காணப்படுகிறது.

Z புள்ளியானது நியமவிலகலில் தங்கியிருப்பதால், ஒரு பாடத்தின் நியமவிலகல் பெறுமானம் கூடும்போது அதன் Z புள்ளி குறைந்து காணப்படும். இதனாலேயே, P என்ற பாடத்தின் Z புள்ளியைவிட Q என்ற பாடத்தின் Z புள்ளி கூடுதலாகக் காணப்படுகிறது.

(தொடரும்...)

# கல்யாணக் கனவு

**கனவு 14**

யாழ் சத்யா



வைஷாலிக்கு இந்தக் கதை வாசிக்கும் பழக்கத்திற்குக் கூடக் காரணம் முரளிதரன்தான். பாடசாலை இடைவேளையின் போது ஒரு நாள் முரளி ஏதோ ஒரு புத்தகம் வைத்து வாசிப்பதைப் பார்த்தாள். நிறையப் படங்கள் போட்டிருக்க அது என்னவென்று பார்த்து விட வேண்டும் என்ற ஆர்வம் இவளிடம். முரளிதரனோடு நேரடியாகக் கதைக்க இவளுக்கு ஏனோ தயக்கம். முரளிதரனும் இவளைப் பெரிதாகக் கணக்கெடுப்பதில்லை. இவளுக்குத்தான் இவள் பிரச்சினையெல்லாம் தீர்க்கும் ஒருவன் இருக்கிறானே. வழக்கம் போல சஞ்சயனிடம் வந்து நின்றாள்.

"சஞ்சு...!"

"என்ன வைஷு...? சொல்லு..."

"முரளி ஏதோ ஒரு புத்தகம் வாசிக்கிறான். எனக்கு அது வேணும்... அது என்ன புத்தகம்?"

"அது ராணி காமிக்ஸ்... மாயாவி என்ற ஒருத்தரிட கதை... அன்றைக்கு நான் வாசிச்சுக் கொண்டிருக்கேக்க உனக்கு வேணுமா என்று கேட்டனானெல்லோ... நீ தானே உதெல்லாம் வாசிக்கேலாது என்று சொன்னனீ..."

"அது அப்படா... இப்ப எனக்கு அது வேணும்."

"சரி... சரி... மூஞ்சியைத் தூக்கி வைக்காதை... என்னட்ட நிறைய இருக்கு. நான் நாளைக்குக் கொண்டு வந்து தாறன். முரளி வாசிக்கிறதும் என்ர புத்தகம்தான்."

"ஓகே... ஓகே... சரிடா... தாங்ஸ்டா சஞ்சு..."

ராணி காமிக்ஸில் இருந்து அடுத்த கட்டத்திற்கு இவள் நகர்ந்ததும் முரளிதரனால்தான். அப்போது இவள் ஆறாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தாள். இவள் வாசிப்பதெல்லாம் ராணி காமிக்ஸ், அம்புலிமாமா, கோகுலம்தான். வைஷாலியின் கதை வாசிக்கும் ஆர்வம் பார்த்து அவளின் அம்மா அவளை அவர்கள் ஊர் நூலகத்தில் சேர்த்து விட்டிருந்தார்.

ஒருமுறை பள்ளிக்கூட விடுமுறை நேரத்தில் இவள் நூலகத்தில் இருந்த நேரம் முரளிதரனும் வந்திருந்தான். இவள் கண்கள் அவனை மட்டுமே பின் தொடர்ந்தது. அப்போது அவன் பெரிய தடித்த அட்டை மொத்தப் புத்தகம் ஒன்றை எடுத்துச் செல்வதைப் பார்த்தவள், உடனேயே தானும் அதே புத்தகத்தை எடுத்துச் சென்றாள். ஆம். பொன்னியின் செல்வன்தான். கல்கியின் எழுத்துக்கு மயங்காதவர் யார்? கொஞ்சம் கொஞ்சமாகத் தனது வாசிப்பு வட்டத்தை விரிவாக்க ஆரம்பித்தாள்.

அன்று முரளிதரனைப் பார்த்து ராணி காமிக்ஸில் ஆரம்பித்த பழக்கம் அவளுக்கு ஒரு போதையாகி இன்று வரை தொடர்கிறது. இப்படி அவள் வளர்ச்சியின் ஒவ்வொரு பரிமாணத்திலும் முரளிதரன் எதையும் அறியாமலேயே தாக்கம் செலுத்திக் கொண்டிருந்தான். அதை அவன் அறியும் நாளும் விரைவில் வந்தது. வருடங்கள் செல்லச் செல்ல ஒரு ராமும் ஜானுவும் உருவாகிய நாளும் வந்தது.

வைஷாலி வீட்டிலே என்னதான் சண்டை போட்டும் அவளால் முரளிதரன் படித்த பாடசாலைக்குச் செல்ல முடியவில்லை. அவளுக்கு ஒரேயொரு ஆறுதல் டியூசன் சென்டரில் முரளிதரனைப் பார்க்க முடியும் என்பதுதான்.

பெரியதொரு காணியிருந்த வீடொன்றில் ஆங்காங்கே கிடுகால் வேய்ந்த கொட்டில்களில் நீள நீள மேசைகளும் அதற்கு ஏற்ற அளவில் நீண்ட வாங்கில்களும் போடப்பட்டிருக்கும். பாடசாலைகள் போலத் தனித்தனிக் கதிரைகள், மேசைகள் கிடையாது. நடுவே ஒரு சிறு பாதை ஆசிரியர் சென்று வர விடப்பட்டு ஆண்கள் ஒரு புறமாகவும் பெண்கள் ஒரு புறமாகவும் அமர்ந்து கொள்வார்கள். ஆண்கள் பக்கம் முரளிதரன் எப்போதும் முதல் வாங்கிலில்தான் இருப்பான். வைஷாலியோ முரளியைப் பார்ப்பதற்கு ஏற்ற வகையில் மூன்றாம் வாங்கிலில் இருந்து கொள்வாள்.

சஞ்சயனோ வைஷாலியைப் பார்ப்பதற்கு ஏற்ற வகையில் கடைசி வாங்கிலில் அமர்ந்து கொள்வான்.

எட்டாம் வகுப்பு வரை முரளிதரனை இவள் அடிக்கடி பார்த்துக் கொண்டிருப்பதில் எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை. ஆனால், வயது ஏற ஏற அதற்குரியளவு முதிர்ச்சியும் ஏற்படும்தானே.

ஒன்பதாம் வகுப்புப் படிக்கும் போது பிற மாணவர்கள் இவள் முரளிதரனைப் பார்ப்பதைக் கவனித்து விட்டார்கள். அந்த வயதில் இப்படியான விடயங்கள் கிடைத்து விட்டால் மாணவர்களுக்குப் போதுமே. வெறுமையாய் மெல்லுகிற வாய்க்கு அவல் கிடைத்தால் போல ஆச்சே.

இவள் ரியூசனுக்குச் செல்லும் போது பாடம் ஆரம்பிக்க முதல் சில பொடியன்கள் (பையன்கள்) வெளி வாயிலில் நிற்பார்கள். சிலர் வகுப்பறைக்கு முன்னே துவிச்சக்கர வண்டிகள் விடும் இடத்தில் நிற்பார்கள். சிலர் வகுப்பறைக்கு முன்னே இருக்கும் முற்றத்தில் கிட்டிப்புள்ளோ, கிரிக்கெட்டோ விளையாடிக் கொண்டிருப்பார்கள். வைஷாலி டியூசன் சென்டர் வெளி வாயிலில் துவிச்சக்கர வண்டியை விட்டு இறங்கும் போதே, இவளைக் கண்டதும், "முரளி... முரளி..." என்று கத்த ஆரம்பிப்பார்கள், அவர்கள் முடிய இவள் துவிச்சக்கர வண்டியைத் தள்ளிக் கொண்டு உள்ளே செல்ல விளையாடிக் கொண்டிருப்பவர்கள் ஆரம்பிப்பார்கள். அவர்கள் முடிய வகுப்பறையின் முன்னிற்கும் மாணவர்கள் கத்துவார்கள்.

ஆரம்பத்தில் மற்றைய மாணவர்கள் மத்தியில், தான் முரளியைப் பார்ப்பது தெரிய வந்து விட்டதை எண்ணிப் பெரிதும் வெட்கப்பட்டு மனம் சோர்ந்து போனாள் வைஷாலி. ஆனால், நாட்கள் நகர அவளுக்கு இது பழக்கப்பட்டு கொஞ்சம் கொஞ்சமாக இவர்கள் கூப்பிடுவதை ரசிக்கவே ஆரம்பித்து விட்டாள்.

இவள் பயமெல்லாம் முரளிதரன் என்ன சொல்லப் போகிறானோ என்பதில் மட்டும்தான் இருந்தது. இவள் பயந்தது போலவே முரளிதரன் மற்றைய மாணவர்களிடம் இவ்வாறு கூப்பிட வேண்டாம் என்று அதட்டினான். அவர்கள் அதைப் பொருட்படுத்தினால்தானே. அவர்களிடம் தோற்றவன், வகுப்பறையில் அடிக்கடி இவள் பக்கம் திரும்பி இவளை முறைக்க ஆரம்பித்தான்.

ஆனால், பின்னிருப்பவர்களுக்கோ முரளிதரனும் வைஷாலியைத் திரும்பிப் பார்ப்பதாகத் தோன்றி இந்தப் பட்டம் தெளித்துக் கூப்பிடுவது எனும் ரியூசன் சென்டர் கலாசாரம் இவர்கள் வகுப்பில் முரளி வைஷாலிக்கே முதன்மையாக நடந்தது.

வைஷாலி எந்தளவு தூரம் இதை ரசித்து மகிழ்ந்தாளோ, அந்தளவுக்கு அந்தளவு முரளிதரன் இதை வெறுத்தான். அந்த வெறுப்பை வைஷாலியிடம் காட்டி இந்தப் பட்டம் தெளித்தலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் சந்தர்ப்பமும் அவனுக்கு விரைவில் கிடைத்தது.

முரளிதரனின் கோபத்தில் சிக்கிய வைஷாலியின் கதி என்ன?

**அவள் கனவு நனவாகுமா?**

**இவள் பயமெல்லாம் முரளிதரன் என்ன சொல்லப் போகிறானோ என்பதில் மட்டும்தான் இருந்தது. இவள் பயந்தது போலவே முரளிதரன் மற்றைய மாணவர்களிடம் இவ்வாறு கூப்பிட வேண்டாம் என்று அதட்டினான். அவர்கள் அதைப் பொருட்படுத்தினால்தானே. அவர்களிடம் தோற்றவன், வகுப்பறையில் அடிக்கடி இவள் பக்கம் திரும்பி இவளை முறைக்க ஆரம்பித்தான்.**

# வெள்ளிப்பனிக்குள் சிக்கி தவிக்கும் வாழ்க்கை



சுவிஸிலிருந்து பொலிகை ஜெயா

வேலை முடித்து உடுப்பு மாற்றும் அறைக்கு போவதற்கு பன்னிரண்டு படிகளைத் தாண்டி கீழே இறங்கி சமையல் செய்வதற்காக அணியும் தொப்பி, சேட்டு, ரவுசர் ஆகியவற்றைக் கழட்டி தோய்க்க போடும் பெட்டிக்குள் போட்டபின் மறு உடுப்புக்களை அணிந்து கொண்டு தலைக்கான தொப்பியையும் மாட்டி கங்கரில் தொங்கிய குளிருக்கான ஜக்கெற்றை (மேலங்கி) எடுத்து அணிந்த படி அவசரம் அவசரமாக உணவு விடுதியை விட்டு பஸ்ஸைப் பிடிக்க புறப்பட்டான் அமுதன்.

பஸ்ஸைப் பிடிப்பதற்காக தனது கால் பாதங்களை எட்டி வைத்து நடையின் வேகத்தை அதிகரித்தான். பனிக்காற்றின் வேகத்தில் குளிர் காதுகளை விறைக்க வைத்து, உடலை துளைத்தபடி தன் இருப்பை உணர்த்தியது. ஜக்கெற் பொக்கற்றுள் கைகள் இரண்டையும் புதைத்த படியால் கைகள் குளிரவில்லை. குளிரால் மூக்கு சிந்தியபோது! ஜக்கெற் பொக்கற்றிலிருந்து ரிசுப் பேப்பரை எடுத்து மூக்கைத் துடைத்து வீதியோரம் இருந்த குப்பைத் தொட்டிக்குள் வீசி விட்டு நடையின் வேகத்தை மேலும் அதிகரித்தான்.

பஸ்ஸில் ஏறியதும்,; "வீட்டில் தனிமையில் இருக்கும் பிள்ளைத்தாச்சி மனைவியின் எண்ணமே மனதுள் ஓடியது. மனம் முழுக்க அவளே நிறைந்திருந்தாள்."

அவள் சுவிஸிக்குப் புதியவள். அவளுக்கு டொச்சோ அல்லது பிறெஞ்சுப் பாசையோ கதைக்கத் தெரியாது. வயிற்று வலி வந்தால் ஆஸ்பத்திரிக்குப் போக ரெலிபோனில் ரக்சியைக் கூட கூப்பிடத் தெரியாது என்ற பதகளிப்பு வேறு.

சச்ச..சச்ச இதென்ன வாழ்க்கை? ஊர், உலகத்துக்கு நாம் சுவிஸில் ஒரு குறையுமில்லாது வாழுகிறோம் என்ற பெயர் தான். உறவுகள், அக்கம்பக்க உதவியற்ற, நிம்மதியை தொலைத்த இயந்திர வாழ்வு என மனதில் விரக்தி கொண்டான், அமுதன்.

வீட்டுக்கு வந்து செற்றியில் (மெத்தை இருக்கை) சாய்ந்து கண்களை மூடி இருந்தவாறு மனைவி அமுதா பற்றிய இளமைக் கால வசந்தங்களை இரை மீட்டான்.

நெல்லியடியில் ஒரே வகுப்பில் இருவரும் ரியூசன் (பிரத்தியேக வகுப்பு) படித்தனர். அந்த நேரம் எல்லோரும் சைக்கிளே பாவிப்பார்கள். ஒருநாள் இரவு எட்டு மணிக்கு வகுப்பு முடிந்து அவரவர் சைக்கிளை எடுத்து வீடு போக முயன்றபோது! "அமுதாவின் சைக்கிள் பின் சில்லின் காற்று போய் விட்டது." அவள் என்ன செய்வது என தெரியாது தவித்து நின்றாள். அதே நேரம் அமுதனும் தனது சைக்கிளை எடுக்கப் போன நேரம் இதை அவதானித்தான்.

"அவளின் பெயர்கூட அப்போது அவனுக்கு தெரியாது. அவனே கேட்டான், கலோ எங்கே இருக்கின்றீர்கள் எனக் கேட்டான்?"

"பொலிகண்டி" என்றாள் அவள். பொலிகண்டிக்கு நெல்லியடியிலிருந்து பஸ் இல்லை. நான் கிட்டடியில்தான் இருக்கிறன். விரும்பினால் நீங்கள் என்ர சைக்கிளை கொண்டு போங்கோ. உங்கட சைக்கிளை நான் சைக்கிள் கடையில் ஒட்டிப்போட்டு அடுத்த கிளாசில் தாறன் என்றான்.

அவள் சற்று யோசித்து விட்டு ஓக்கே தாங்ஸ் என சொல்லி அவனது சைக்கிளில் தன் வீடு போனாள்.

இதுதான் இருவர் விருப்புக்குமான முதல் பிள்ளையார் சுழி எனலாம். மறுநாள் வகுப்பு முடிந்த தும் அவள் அமுதனின் சைக்கிளை அவனிடம் கொடுப்பதற்காகக் காத்திருந்தாள். அவனைக் கண்டதும் மிக்க நன்றி கூறி அவனது சைக்கிள் திறப்பை கொடுக்கும் போது! உங்கள் பெயர் என்ன? என வினவினாள்?

"அமுதன்" என்றான்."

"உங்கள் பெயர் பிளீஸ்?"

"அமுதா" என்றாள்.

ஓ..அமுதாவா? இருவரின் பெயரும் ஒரேமாதிரி இருக்கிறதே எனச் சொல்லிச் சிரித்தான் அவன். அவளும் பதிலுக்குச் சிரித்தாள்.

மறுநாள் வகுப்பில் அவள் அமுதனைத் தனது கண்களை அகட்டி துழாவினாள். ஆனால், அவன் வகுப்பு ஆரம்பித்து சிறிது பிந்தியே வகுப்பினுள் நுழைந்தான். அவன் இருந்ததும் அவளது கண்கள் அவனை நோக்கி இடதுபக்கம் திரும்புவதை அவளால் தடுக்க முடியவில்லை.

அவன் திரும்பவும் தெரிந்தான். அவனின் நினைவுகள் தன்மீது ரோந்து செய்வதை அறியாது நல்லையா வாத்தியார் சிகரட்டை ஊதியபடி கரும் பலகையில் கணக்கைப் (Mathematics) போட்டு கற்பிப்பதைக் கவனித்தாள் அவள்.

அவன் பனை போல வளர்ந்து, தினவெடுத்த தோழனாக (தோழ்) அவள் கண்களுக்கு காட்சி கொடுத்தான். அவனது புடைத்த புஜத்தின் அழகில் அவளது இளமை அவளை அறியாது கட்டுப் பாடற்று அலைபாயத் தொடங்கியது.

பிற்பாடு இருவரும் அடிக்கடி சிநேக பூர்வமாகச் சந்தித்து ரியூசன் வகுப்புக்குள்ளேயே வழமையான ஆண்பால், பெண்பால் என்ற பாலின்பால் ஈர்ப்பாகி, எம் தமிழ்க் கலாசார காதலர்கள் கையாளும் கடிதம் விடும் தூது முறைமை இல்லாது காதலைத் தொட்டனர், இருவரும்.

மனமொத்த இருவரின் காதல் வெளிப்பாட்டின் பின், நாம் வணங்கும் கடவுளான அம்மனை ஒத்த பேரழகிய ஒரு பெண், தன்னையும் விரும்புகிறாள் என தன் மனதுள் எண்ணி வானத்தில் உயர சிறகுவிரித்து பறந்திடும் பட்சிகள் போல பறந்தான். அவளை தினமும் சந்திக்கப் பள்ளிக்கூடம் ரியூசன் கிளாசாகவும், ரியூசன் கிளாஸ் பள்ளிக்கூடமாகவும் மாறினால் எவ்வளவு நல்லாயிருக்கும் என எண்ணினான்.

இவ்வாறு தனது பள்ளிப்பருவ வாழ்வின் சிந்தனை அலைகள் அமுதாவுடன் களவியல் காதலில் மூழ்கித் திளைத்த வசந்த காலத்தைக் கடல் அலைபோல மன ஓட்டத்தில் அலைய விட்டான். அலைகள் அங்கு மிங்குமாக மனதுள் தொட்டு ஓடியது.

இருந்த போதும் பசி வயிற்றைச் சுரண்டியது. செற்றியை விட்டெழுந்து அடுப்படிக்குள் சென்றான். அங்கு தானே தனக்கான சோற்றை தட்டில் போட்டு கறிகளை விட்டு, மீன் பொரியலையும் சோற்றின் மேல் ஒரு கரையில் வைத்து, அவுனுக்குள்ளே (சாப்பாடு சூடாக்கும் மெசின்) வைத்து, சூடாக்கினான்.

சாப்பாடு சூடாகியபடி இருந்த வேளை! அமுதா அங்கே வயிற்றைத் தள்ளியபடி, மெது மெதுவாக வந்தாள். ஏனுங்கோ என்னை எழுப்பியிருந்தால் நான் சாப்பாடு போட்டு தந்திருப்பன். வேலையால வந்த களையுடன் நீங்கள் ஏன் உதெல்லாம் செய்யிறியள் என்றாள்.

"இல்லை. உனக்கு வர, வர உடம்புக்கு ஏலாது நீ பெறுமாதம். உனக்கேன் இந்தக் கஷ்டம். நான் செய்வன் தானே. நீ நல்லா ஓய்வெடுக்கோணும். அப்ப தானே எனக்கு உன்னைப்போல வடிவான சின்ன இளவரசியைச் சுகமாக பெத்து தருவாய்" எனச் சிரித்த படி அவளது வயிற்றையே தடவினான்.

அவனின் இந்தப் பாசமான வார்த்தை, அவளுக்கோ வெண்பனிபோல வானத்தில் மின்னிடும் நட்சத்திரங்களை மாலையாகத் தொடுத்துப் போட்டது போன்ற சந்தோசத்தை கொடுத்தது.

அமுதன், அரைக்கோப்பை சாப்பாட்டை தொண்டைக்குள் செலுத்திய வேளை! அமுதா திடீரென வயிற்று வலியால் துடித்தாள். உடனே அவன் மலையிலுள்ள பீல் (Bienne) வைத்தியசாலைக்குத் தொலைபேசியில் விடயத்தை கூறியபோது! மறு முனையிலிருந்து உடனே கொண்டு வரும்படி குரல் ஒலித்தது.

ஏற்கெனவே வைத்திய சாலை தேவைக்கென தயார்படுத்தி வைத்திருந்த சூட்கேசையும் எடுத்து, அமுதாவையும் அணைத்த படி லிப்ற் மூலம் கீழே போய் தனது வாகனத்தில் வைத்தியசாலையில் சேர்த்தான்.

உடனே அவளைப் பரிசோதனை செய்த டாக்டர் பிள்ளை குறுக்கே கிடக்கிறது. அறுவைச் சிகிச்சை செய்தல் அவசியமெனக் கூறி அவனது கையெழுத்தையும் பெற்று சென்றார்.

"அவனோ எவரு மற்று தனிமையில் வைத்தியசாலை விறாந்தையில் இடிந்து போய் உட்கார்ந்திருந்தான். நேரம் செல்லச் செல்ல அவனின் மனம் பேதலித்தது. கனவு வேறு. காட்சி வேறுபோல் என எண்ணினான்."

அதிகாலை வரை எந்த தகவலு மற்றுக் கடவுளின் மேல் பாரத்தைப் போட்டு கண்களை மூடினான்.

யாரோ ஒருவரின் குரல் கேட்டு தலையை உயர்த்தி பார்த்தான். ஒரு வெள்ளக்கார தாதி அவன் முன்னால் நின்றாள். உங்களுக்குப் பெண் குழந்தை பிறந்துள்ளது. பிள்ளை நல்ல சுகம். ஆனால் தாய் இன்னும் கண்

**மனமொத்த இருவரின் காதல் வெளிப்பாட்டின்பின், நாம் வணங்கும் கடவுளான அம்மனை ஒத்த பேரழகிய ஒரு பெண் தன்னையும் விரும்புகிறாள் என தன் மனதுள் எண்ணி வானத்தில் உயர சிறகுவிரித்து பறந்திடும் பட்சிகள் போல பறந்தான். அவளைத் தினமும் சந்திக்கப் பள்ளிக் கூடம் ரியூசன் கிளாசாகவும் ரியூசன் கிளாஸ் பள்ளிக்கூடமாகவும் மாறினால் எவ்வளவு நல்லாயிருக்கும் என எண்ணினான்.**

முழிக்கவில்லை எனக் கூறி வாழ்த்துகள் என தனது மொழியில் கூறிச் சென்றாள்.

விடிந்து விட்டது. ஒன்பது மணிக்கு வேலை. ஏற்கெனவே முதலாளியுடன் அமுதனுக்கு ஆகாது. அழைப்பெடுத்து விடயத்தைக் கூறினாலும் அவன் ஏற்றுக்கொள்ள மாட்டான்.

மனிசிக்கு உடனடித் தேவை ஒரு துணை. நானும் வேலைக்குச் சென்று விட்டால்! அவள் நிலை?... வேலையா அல்லது குடும்பமா என்ற மனப்போராட்டத்தில் குடும்பமே என்ற கனத்த முடிவுடன் வேலையை துறக்கத் தீர்மானித்தான்.

■

# பாதிக்கப்பட்டவர்களின் குரலாக ஒலிக்கும் - நான் மூச்சயர்ந்த போது

இக்பால் அலி

எம்.எம்.எம். நூறுல்ஹக் அவர்களுடன் சிறு பராயம் முதல் மிக நெருக்கமான இலக்கிய நட்பு இருந்தது. மூன்று தசாப்தத்திற்கு முன்பு அடிக்கடி சந்தித்து இலக்கிய விடயங்களை பரஸ்பரமாகப் பகிர்ந்து கொள்வோம். கடற்கரை மணலில் அவருடன் மாளிகை அஸ்ஹர், புதுநகரான் அஷ்ரப், நிந்தமணாளன் அஷ்ரப், மருத நிலா நியாஸ், ஹாரிஸ் இஸ்மாயீல், சியாட், அஸ்ரப் ஏ ஸமட், ஹமீட் முதலியவர்கள் ஒன்று சேர்வோம். சிலவேளையில் நிதானிதாசன் ஆர்.எம். இம்டியாஸ் இடைக்கிடையே எம்மோடு இணைந்து கொள்வார்.

கடல் அலையின் இரைச்சலுக்குள்ளும் காலம் நேரம் பொழுது என்று தெரியாமல் இருள் சூழ்ந்திருந்தாலும் தம்மை மறந்து முழு நிலவின் வெளிச்சத்தில் கதைத்திருப்போம். அதில் இலக்கியக் கருத்துகள் தர்க்கங்கள் ஒவ்வொருவருடைய எழுத்துகள் பற்றிய மதிப்பீடுகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுமே ஒழிய அதற்கு இணையாக வேறு எந்த கவனத்தையும் செலுத்தி யோசிக்க இடம்கொடுக்காது. எம்.எம்.எம். நூறுல்ஹக் அவர்களோடு நிகழும் சந்திப்புக்களெல்லாம் அப்படிப்பட்ட அபூர்வத் தன்மையை மனதுக்கு வழங்கக் கூடியவையாகும்.

இக்காலகட்ட சந்திப்புக்களில் கவிஞர் எஸ்.யூ. கமர்ஜான் பீபீ எழுதிய கவிதைகள் கூட சபைக்கு வரும். இன்று தினகரன் வாரமஞ்சரியில் இன்ன தலைப்பில் கவிதை எழுதியுள்ளார். இதனை யார் யார் படித்தது என்று அலசி ஆராய்ந்து அக்கவிதையின் அதிர்வு நயம், பாடுபொருள் பற்றிக் கருத்துக்கள் பரிமாறப்படும். அவை மட்டுமல்ல கவிஞர் எஸ்.யூ. கமர்ஜான் பீபீ அவர்கள் மறைந்த எம்.எம்.எம். நூறுல்ஹக்கினால் வெளியிடப்பட்ட "அல் ஹுதா" சஞ்சிகை, சாய்ந்தமருது ஆர் எம். நௌசாட் வெளிக்கொணர்ந்த "தூது" கவிதை இதழ், கலைமகள் ஹிதாய ஏ.மஜீத் அவர்களினால் வெளியிட்ட தடாகம் போன்ற சஞ்சிகைகளில் அவரது படைப்புக்களை காணாமல் இருக்க முடியாது.

கவிஞர் மனதில் கொட்டிக் கிடக்கிற படைப்புக்கள் கல்முனைப் பிரதேசத்தில் வெளிவந்த கலை இலக்கிய சஞ்சிகைகளில் வெளிவந்தது போல இலங்கையின் தமிழ்த் தேசிய பத்திரிகையிலும் வெளிவந்ததை நாம் பார்க்க முடிந்தது. பின்பு நண்பர் மறைந்த எம்.எம்.எம். நூறுல்ஹக் கமர்ஜான் பீபீயைத் திருமணம் செய்து கொண்டார்.

திருமணத்திற்குப் பின்பு கவிஞர் கமர்ஜான் பீபீயின் கவிதைகளைப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் காணக் கிடைக்கவில்லை. அப்படிக் காண்பது மிக அரிது.

ஆனாலும் நண்பர் எம்.எம்.எம். நூறுல்ஹக் தம் மனைவி கமர்ஜான் பீபீ எழுதிய " நான் மூச்சயர்ந்த போது " என்ற நூலை எனக்கு அன்பளிப்புச் செய்தார். இந்நூலுக்கு அறிமுகம் ஒன்றை எழுதி பத்திரிகைக்கு அனுப்புமாறு கோரிக்கை விடுத்தார். ஊடகத் துறையில் முழுநேரம் இயங்க வேண்டிய காரணத்தினாலும் வேறு வேலைப்பளுக்களினாலும் இதற்கு நேரம் ஒதுக்க முடியவில்லை.

என்னுடைய மதிப்பீட்டைப் பார்ப்பதற்கு காலம் அவருக்கு இடம்கொடுக்கவில்லை. அவர் துரித கதியில் எம்மை விட்டுப் பிரிந்து செல்வார் என்று நாம் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. என்றாலும் அவர் இருக்கும் போது இந்நூலுக்கு ஒரு மதிப்பீட்டை எழுத முடியாமற் போய் விட்டது என்ற மன ஆதங்கமும் கவலையும் இருக்கிறது. ஆனாலும் அவருடைய நல்லெண்ணத்தை நிறைவு செய்ய வேண்டும் என்ற திருப்தியோடு இந்நூலை நுகர்ந்து சுவைத்தேன். அக்கால கட்டத்தில் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வாசித்த கவிதைகள் தான். மீண்டும் ஒரு தடவை மீட்டிப் பார்க்கக் கிடைத்தது. கவிதைகள் மிகவும் அலாதியானது. அவர் வாழ்ந்த சூழலின் அனுபவங்களின் மூலம் செழித்து நிற்கிறார். இவர் கவிதையும் மொழியும் அந்த வழித் தடத்திலேயே நகர்ந்து முன் நோக்கி செல்கின்றது.

உண்மையிலே கவிஞரின் கணவர் என்னுடைய ஆத்ம நண்பர். அவர் எம்.எம்.எம். நூறுல்ஹக் சிறந்த மனிதப் பண்புகளையும் துணிச்சலான எழுத்து ஆளுமைப் பண்புகளையும் கொண்டவர். இலக்கிய நண்பர்களை தூக்கிவிடுவதில் உயர்ந்த குணம் உடையவர். ஊடகத்துறை ஈடுபாடு, முழு நேர இலக்கிய அர்ப்பணிப்பு, தியாகம் நிறைந்த இயல்புகளுடன் சில தனித்துவப் பண்புகளைக் கொண்டவர். இவரது மரணம் இஸ்லாமிய தமிழ் இலக்கிய உலகிற்கு ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும். அன்னாரது இழப்பால் துயருற்றுள்ள கவிஞர் எஸ். யூ. கமர்ஜான் பீபீ உள்ளிட்ட அவரது பிள்ளைகள் குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



இவரது கவிதையில் இன்றைய நவீன தமிழ் கவிதை வடிவம் தனித்து விளங்குகிறது. நவீன கவிதையில் இடம் பெறும் உவமை, உருவகம், படிமம் குறியீடு முதலிய முக்கியத்தும் வாய்ந்த கவிதை வரம்புக்குரிய இலக்கணங்களோடு கவிஞரின் கவிதை ஊற்றுப் பெருக்கெடுக்கிறது.

நேசிக்கும் உயிர்களை சுவாசிக்காத தேசம் என்னும் தலைப்பில் எழுதியுள்ளார் கவிவரிகளில் வீட்டுக்கு வேலைக்கு அமர்த்துதல் பற்றி நாசுக்காகக் பாடியுள்ளார் கவிஞர் எஸ்.யூ. கமர்ஜான் பீபீ.

ஆடம்பர வீட்டுக்குள்
அடைப்பட்ட
நெஞ்சத்து தீச்சுவாலையில்
கருகிப் போவது
ஏழைகளின் வாழ்வு மட்டுமல்ல
தேசத்துக்குரிய
உயிர்களும் தான்.

வேலைக்கமர்த்தப்பட்ட பெண் பிள்ளைகள் எவ்வாறு இரக்கமற்ற முறையில் தமது உடல் வியர்வையின் இரத்தத்தை உறிஞ்சிக் குடித்து தமது மனதிற்கு தீயை மூட்டி கருக வைத்து ஒன்றுக்கும் உதவாமல் பிணமாகத்தான் மாடமாளிகைக்குள் சிக்கித் தவிக்கிறார்கள். இவர்கள்தான் சித்திரவதைக்கும் பாலியல் வன்முறைக்கும் உட்பட்டவர்களாக உயிர்களை மாய்த்துக் கொள்கின்றார்கள். தீவிர வறுமையால் கல்வியை இழந்து கௌரவத்தை இழந்து வீட்டு வேலைத் தொழில்களுக்காகச் செல்லும் பிள்ளைகளின் இறுதி நிலைமை மிகவும் மோசமானது. ஒரு நிலையான வளர்ச்சிக்கான பாதையில் சுமுகமாகப் பயணம் செய்வதற்கு வழியில்லை. அதன் மோசமான சூழற்சி இன்னும் தொடர்கின்றது. இதற்கு தேசமும் பதில் சொல்ல வேண்டும் என்று கவிஞர் ஆதங்கப்படுகின்றார்.




இரு இனப் பாதங்கள்
எம்மை மிதிக்கின்ற போது
நியாயத்தை நீரில்
கரைத்து
எம்மை பொம்மை ஆக்கிவிடும்
அநியாயக்காரர்களுடன்
போர் தொடுத்திட
புறப்படு.

என்ற வரிகள் யுத்த கால சூழலில் ஒரே நாட்டுக்குள் இரு தரப்பினர் தொடுத்துள்ள போரினால் அநியாயமான முறையில் சிறுபான்மையினமாக வாழும் முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டு உயிர் உடமைகள் இழந்து அகதிகளாக்கப்பட்ட சம்பவத்தைக் கவிதைகளின் ஊடாகத் தெளிவுறச் சொல்லி இருக்கிறார். இனச் சுத்திகரிப்புக்கள் கவிஞரின் மனதில் உணர்வுபூர்வமாக பாதித்திருந்தன. ஆதலால், அவர் இன ஒடுக்கு முறைக்கு எதிராகக் குரலெழுப்ப வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்படுகிறார். உண்மையிலேயே சகோதரியுடைய இந் நூலில் தமிழ் இலக்கியப் பரப்பில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய வகையிலான கவிதைகளும் அமைந்துள்ளன. கவிதைகளின் உள்ளடக்கத்தில் வடிவமாற்றங்களிலும் புதிய பரிமாணங்களைத் தொடுவனவாக அமைந்துள்ளதைக் காணலாம்.

குழப்பங்களும்
குரோதங்களும்
போர்கொண்டு குவிக்கப்படும்
மனித இனத்தின் இரத்தம்
இன்று வெள்ளமாய்
பாய்ந்தோடுகிறது.

இக்கவிதைகளை வாசிக்கும் மனதிற்கு மேலும் ஏதோ பெரும் அச்சநிலை தோன்றுகின்ற உணர்வு ஏற்படுகிறது. குண்டுகளாலும் செல்லடிகளினாலும் சரமாரியாகத் தாக்கப்பட்டு மரத்துப் போன மனங்களை உலுக்குகின்ற கவிதை வரிகளாகும்.

இக்கவிதையிலும் மறைந்து மறந்து போன கொடூர யுத்த வாழ்வின் நிகழ்வினையும் எதிர்வினைகளையும் வாசகர் மனதில் மீளவும் நினைவூட்டச் செய்கின்றன. இக்கவி வரிகள் வாசகர்களை இலகுவாக சென்று சேரும் தன்மை வாய்ந்தவை. கவிதைகளில் எளிமையும் அழகும் காணப்படுவதோடு உண்மையான படைப்பாளிக்கு உரித்தான ஈரமான இதயமும் நேர்மையும் விவேகமும் பெருமிதமும் இவர் கவிதைகளில் வெளிப்படுகின்றன.

குற்றக் கூண்டுக்குள்
உருவாகும்
கண்ணீர் கவிதைகள்
சுதந்திரப் பத்திரிகையில்
வெளிவராது.

ஊடகம் என்பது நியாயத் தன்மை வாய்ந்தது. மக்களுடன் நெருங்கிய உறவைக் கொண்டது. ஒரு திறந்தவெளி. அது உலகில் வலிமைமிக்க ஆயுதம். ஊடகப் பலம் உள்ளவன்தான் சர்வதிகாரி. ஆனால், அது முன்னொரு போதும் இல்லாத வகையில் நம்பகத் தன்மை இழந்து நிற்கிறது. உண்மைக்குப் புறம்பான செய்திகளையே வெளியிடுகின்றன. அதன் நேர்மைத் தன்மையின் பெறுமானம் இழந்துள்ளது. இன்றைக்கும் அதுதான் கோலோச்சுகிறது.

எத்தனையோ குற்றச் சம்பவங்கள்
மூடி மறைக்கப்பட்டு உண்மைச்
செய்திகள் எல்லாம்
திரிவுபடுத்தப்பட்டு மக்கள் மனங்களை
மாற்றும் நடவடிக்கைகளிலேயே
ஊடகங்கள் முனைப்புடன்
செயற்படுகின்றன. எனவே, எத்தனையோ
வன்முறைகள், அநீதிகள், அநியாயங்கள்,
அட்டூழியங்கள் எல்லாம்
மூடிமறைக்கப்பட்டு வெளிவராமல் உள்ளன.
அதற்கான சுயாதீனமான ஊடக நிறுவனங்கள்
இல்லை. இன்னும் நாங்கள் இருண்ட உலகி
லேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்று
கவிஞர் தன் கவிதையின் மூலம் வலியுறுத்திக்
குறிப்பிடுகின்றார்.

தலைப்புக்கு ஏற்ற தத்துவபூர்வமான அழகிய அட்டைப்படத்தைத் தாங்கி வந்துள்ள இக்கவிதைத் தொகுதியில் 54 கவிதைகள் இடம்பெற்றுள்ளன.


கவிஞர் பாத்திமா நளீரா சித்தீக் காரியப்பர் இந்நூலாசிரியர் பற்றி அறிமுகப்படுத்தும் போது "வத்தளை ஹுனுப்பிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எஸ்.யூ கமர்ஜான் பீபீ இலக்கிய உலகில் பேசப்படும் ஓர் ஆளுமையானவர். 1980 களில் எழுத வந்த படைப்பாளிகளில் ஏதோ ஒரு வகையில் காத்திரமாகவும் கனதியாகவும் எழுதியவர் என்ற மதிப்பீட்டுக்குள் உள்வாங்கப்பட்டு நிமிர்ந்து நிற்கின்றவர்" என்று அறிமுகப்படுத்தியுள்ளார் அவர் நண்பி.

எழுத்தாளர் நவாஸ் சௌபி இந்நூலாசிரியர் பற்றிக் கூறும் போது "காலம் நினைவில் வைத்திருக்கக் கூடிய கவிஞர்களுள் ஒருவராக கமர்ஜானும் தன் கவிதைகள் மூலம் நிலைத்திருப்பார் என்பதை இத்தொகுதியிலுள்ள அவரது கவிதைகள் என்னும் மூச்சயராமல் நிரூபிக்கக் கூடியவை" என்று தனது மதிப்பீட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

ஆக இத்தொகுதிகளில் உள்ள கவிதைகள் போர்க்கால சூழலில் மக்கள் படும் துயரங்களையும் அதேவேளை சில அன்றாடம் நமக்கு ஏற்படும் சில அனுபவங்கள் பற்றியும் பேசுகின்றன. ஆங்காங்கே புரட்சிகரமான முற்போக்கான மனித நேயத்தைச் சொல்லும் கவிதைகளும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. கவிஞரின் பணி தொடர வாழ்த்துக்கள்.

■



# தெரிந்த சினிமா தெரியாத சங்கதி

07

ரமணி

பானுமதி, சாவித்திரி, அஞ்சலிதேவி ஆகியோர் தமிழ்த் திரை உலகில் ஆட்சி செய்து கொண்டிருந்தபோது பாடல் காட்சிகளிலும் சிறிய வேடங்களிலும் தலையைக் காட்டியவர் சரோஜாதேவி. அதிர்ஷ்டக் காற்று சரோஜாதேவியின் பக்கம் வீசியதால் “கன்னடத்துப் பைங்கிளி” எனும் பட்டப் பெயருடன் கதாநாயகியாக வலம் வந்தார். சினிமாவைப் பற்றி எதுவும் தெரியாத வயதில் பாடுவதற்காகச் சென்ற சரோஜாதேவி எதிர்பாராத விதமாக நடிகையானார்.

சரோஜாதேவியின் தந்தை பைரவப்பா காவல் அதிகாரி. தாய் ருத்ரம்மா. பெங்களூரின் செயிண்ட் தெரசா கான்வென்டில் ஒன்பதாம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்தபோது நடந்த பாட்டுப் போட்டியில் சரோஜாதேவியும் கலந்துகொண்டார். போட்டியாளர்கள் அனைவரும் கீர்த்தனைகளையும் கன்னட சினிமாப் பாடல்களையும் பாடினார்கள். ‘ஏ ஜிந்தகி ஹே மேளே’ என்ற ஹிந்திப் படப் பாடலை சரோஜாதேவி பாடினார். நௌஷா இசையில் முகமது ரஃபி பாடி பட்டிதொட்டி எங்கும் ஒலித்த அந்தத் தத்துவப் பாடலைத் தனது இனிமையான கீச்சுக் குரலில் சரோஜாதேவி பாடியது சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட நடிகரும் தயாரிப்பாளருமான ஹொன்னப்ப பாகவதருக்குப் பிடித்துவிட்டது.

நிகழ்ச்சி முடிந்ததும் சரோஜாதேவியை அழைத்த ஹொன்னப்பர், “அப்பா அல்லது அம்மா யாரையாவது அழைத்துக்கொண்டு, என் ஸ்டூடியோவுக்கு வா. உன்னைப் பாடகி ஆக்குகிறேன்” என்றார்.

பாடகியாகும் கனவுடன் தாயாருடன் சென்ற சரோஜாதேவியைப் பார்த்த ஹொன்னப்ப பாகவதர் அதிர்ச்சியடைந்தார். பாடசாலைச் சீருடையில் பார்த்த சரோஜாதேவிக்கும் தனக்கு முன்னால் நிற்கும் சரோஜாதேவிக்கும் இடையிலான வித்தியாசம் அவரை வேறுவகையில் சிந்திக்கத் தூண்டியது.

ஜொலிக்கும் உடையும், கண்ணைக் கவரும் ஒப்பனையும் சரோஜாதேவியை வேறுபடுத்திக் காட்டின. ஹொன்னப்ப பாகவதர் தனது முடிவை மாற்றினார். பாடுவதற்கு ஆசையுடன் வந்த சரோஜாதேவியும், தாயும் அதிர்ச்சியடைந்தார்கள். நீ பாடவேண்டாம் எனப் பாகவதர் சொன்னபோது இருவரும் அதிர்ச்சியடைந்தனர். எனது படத்தில் கதாநாயகியாக நடி எனச் சொன்னதும் அவர்களின் அதிர்ச்சி பன்மடங்காகியது. இருவரும் மறுப்புத் தெரிவித்து விட்டு வீட்டுக்குச் சென்றனர். விக்கிரமாதித்தன் போன்று தொடர்ந்து முயற்சி செய்த ஹொன்னப்ப பாகவதரினால் தமிழ்த்திரை உலகுக்கு கன்னடத்துப் பைங்கிளி கிடைத்தார்.

சரோஜாதேவியின் அப்பாவின் அலுவலகத்துக்கே சென்று அவரைச் சந்தித்து, இது காளிதாஸனின் வாழ்க்கை வரலாறு கௌரவமான வேடம் என்று எடுத்துக்கூறிச் சம்மதிக்க வைத்தார். இந்த ஒரு படத்தில் மட்டுமே என் மகள் நடிப்பாள் என்று கண்டிப்பாகக் கூறினார் தகப்பன் பைரவப்பா.

ஹொன்னப்ப பாகவதர் கவி காளிதாஸாக நடித்து, தயாரித்த ‘மகாகவி காளிதாஸா’ என்ற கன்னடப் படத்தில் 1955 ஆம் ஆண்டு அறிமுகமானார் சரோஜாதேவி. அந்தப் படத்தில் “ பாரொ கிளியே.. மரளி மனகெ..” என்று சி. எஸ். சரோஜினி பாடிய சோகப் பாடலை வீணை வாசித்தபடியே பாடுவதாக அமைந்த சரோஜாதேவியின் அறிமுகக் காட்சியைக் கண்டு ரசிகர்கள் கண்ணீர் விட்டார்கள்.

படம் மிகப் பெரிய வெற்றி. அதற்குத் தேசிய விருதும் கிடைத்தது. ஒரே படத்துடன் முடித்துக் கொள்ளலாம் என்று நினைத்த சரோஜாதேவிக்கு இந்தப் படம் கொண்டுவந்த புகழ், வீட்டின் முன் ரசிகர் கூட்டத்தைக் கூட்டியது. ராசியான ஹீரோயின் என்ற சென்டிமென்டும் சேர்ந்துகொள்ளப் பாகவதர் தனது ‘ஆஷாடபூதி’, ‘பஞ்ச ரத்தினம்’ ஆகிய படங்களிலும் அவரைக் கதாநாயகியாக நடிக்க வைத்தார்.

‘இல்லறமே நல்லறம்’ என்ற படத்தில் சின்ன வேடத்தில் தமிழில் அறிமுகமானார் சரோஜாதேவி. பி. பிள்ளையா இயக்கத்தில் ஜெமினி - அஞ்சலிதேவி நடிப்பில் 1958 இல் வெளியான இந்தப் படத்தில் சரளாதேவி என்ற நாட்டியப் பெண்மணியாகச் சின்ன வேடத்தில் நடித்து யார் என்று ரசிகர்களைக் கேட்க வைத்தார். முறைப்படி நடனம் பயிலவில்லை என்றாலும் முக பாவனை அற்புதமாக இருந்தது.

‘நாடோடி மன்னன்’ படத்தில் எம்.ஜி.ஆருக்கு ஜோடியாக சரோஜாதேவியை நடிக்கவைக்கும் பேச்சு எழுந்ததும், ‘சிறு வேடங்களில் நடனமாடும் பெண், எம்.ஜி.ஆருக்கு ஜோடியா?’ என்று பல எதிர்ப்புகள் தோன்றின. சரோஜாதேவிக்கு மேக்கப் மற்றும் ஸ்கிரீன் டெஸ்ட் முடிந்தது. யோசித்தபடி உட்கார்ந்திருந்த எம்.ஜி.ஆரிடம் பக்கத்தில் இருந்த சிலர், ‘அந்தப் பெண் காலை தாங்கித் தாங்கி நடக்கிறாள். கதாநாயகி வேடத்துக்குச் சரிப்பட்டு வருமா?’ என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு எம்.ஜி.ஆர், ‘அந்த நடையும் அழகாகத்தான் இருக்கிறது’ என்று குறை சொன்னவர்களின் வாயை அடைத்திருக்கிறார். தமிழ் சுத்தமாகத் தெரியாது என்ற கருத்தையும் எம்.ஜி.ஆர் ஏற்கவில்லை. இதன்பிறகு எம்.ஜி.ஆருடன் 26 படங்களில் ஜோடி சேர்ந்து நடித் தார் இந்த அபிநய சரஸ்வதி.

பரதநாட்டியம் தெரியாது, நாடகத்தில் நடித்த அனுபவம் கிடையாது கவர்ச்சி காட்டவே மாட்டார் என வெள்ளித்திரையில் ஜொலிப்பதற்குத் தேவையான பல விஷயங்கள் சரோஜாதேவியிடம் இல்லாதபோதும், தன் உழைப்பாலும் நளினத்தாலும் மட்டுமே ஜெயித்தவர் இந்தக் கன்னடத்து பைங்கிளி.

தமிழில் அவர் அறிமுகமான படம் மணாளனே மங்கையின் பாக்கியம், என்றாலும் அவருக்கு நட்சத்திர அந்தஸ்தை உருவாக்கித் தந்த படம் - நாடோடி மன்னன்.




கன்னட கச்சதேவயானி படத்தின் படப்பிடிப்பு சென்னையில் நடந்தது. அப்போது ஒருவர் படப்பிடிப்பு நடந்த இடத்துக்கு வந்தார். அவரைப் பார்த்ததும், அங்கு இருந்த எல்லோரும் எழுந்து, வணக்கம் தெரிவித்தனர். ஆனால், அவர் யார் என்று சரோஜாதேவிக்குத் தெரியாது. எனவே பேசாமல் உட்கார்ந்து இருந்தார். அவர் படப்பிடிப்புத் தளத்தினை சுற்றிப் பார்த்துவிட்டு இயக்குநரிடம் சென்று சரோஜாதேவியைச் சுட்டிக் காட்டி யார் அந்த பெண் என்று கேட்டார்.

அதற்கு இயக்குநர் அவர்தான் இந்தப் படத்தின் கதாநாயகி. புதுமுகம். பெங்களூரைச் சேர்ந்தவர். பெயர் சரோஜாதேவி என்று தெரிவித்தார். வந்தவர் பேசாமல் சென்றுவிட்டார். அவர் போகும்போதும் எல்லோரும் எழுந்து வணக்கம் தெரிவித்து பணிவுடன் வழியனுப்பினார்கள். அவர் சென்றபிறகு வந்தது யார் என்று நான் இயக்குனரிடம் கேட்டபோது அவர்தான் எம்.ஜி.ஆர் என்று அவர் தெரிவித்தார்.

அதைக் கேட்டு சரோஜாதேவி அதிர்ச்சி அடைந்தார். அவ்வளவு பெரிய மனிதர் வந்து இருக்கிறார். எதுவும் தெரியாமல் சும்மா இருந்துவிட்டோமே என்று வருந்தினார். எம்.ஜி.ஆர் நடிக்க ஒப்பந்தமாகியிருந்த திருடாதே என்ற படத்தில் நடிக்க எம்.ஜி.ஆர் சரோஜாதேவியைத் தேர்வு செய்தாலும், ஒரு புதுமுகத்தை எப்படி நமது படத்தில் போடுவது என்று தயாரிப்பாளருக்குப் பயம். அதனால் அந்தப் படத்தில் அவர் நடிக்கவில்லை.

எம்.ஜி.ஆரின் சொந்த தயாரிப்பான நாடோடி மன்னன் படத்தில் இரண்டாவது கதாநாயகியாக நடிக்க சரோஜாதேவியை ஒப்பந்தம் செய்தார். அந்த படம் அவரின் வாழ்க்கையில் திருப்புமுனையாக அமைந்தது.

1958 ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர் தயாரித்து, இயக்கி இரட்டை வேடங்களில் நடித்து மிகப் பெரிய வெற்றியை ஈட்டிய நாடோடி மன்னன் திரைப்படத்தில் எம்.ஜி.ஆருக்கு ஜோடியாக இவர் நடித்த கதாபாத்திரமே இவர் தமிழில் ஒரு நிலையான இடத்தைப் பிடிக்கக் காரணமாயிருந்தது.

இதன் தொடர்ச்சியாக இயக்குநர் ஸ்ரீதரின் இயக்கத்தில் வெளிவந்த கல்யாணப் பரிசு, இயக்குநர் ஏ.பீம்சிங் இயக்கத்தில் வெளிவந்த பாகப்பிரிவினை ஆகிய திரைப்படங்கள் இவருக்குத் தமிழில் ஒரு நட்சத்திர அந்தஸ்த்தைப் பெற்றுத் தந்தன. 1957 ஆம் ஆண்டு என்டிராமாராவ் நடிப்பில் வெளிவந்த பாண்டுரங்க மகாத்மியம் என்ற படம்தான் இவர் தெலுங்கில் அறிமுகமாக வழிவகுத்தது. 1960 களில் ஒரு நாளைக்கு 20 மணி நேரம் பணிபுரியும் அளவிற்கு பிஸியான நடிகையாக வலம் வந்தார்.

தமிழில் எம்.ஜி.ஆர், சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், தெலுங்கில் என்.டி. ராமாராவ், ஏ.நாகேஸ்வரராவ், கன்னடத்தில் ராஜ்குமார் என அன்றைய முன்னணி நாயகர்களுடன் இணைந்து நடித்து ஏராளமான வெற்றிப் படங்களை தந்தார். நாடோடி மன்னன் தொடங்கி அரசகட்டளை வரை எம்.ஜி.ஆருடன் மட் டும் 26 படங்களில் ஜோடியாக நடித்த பெருமை இவருக்குண்டு.

1959 ஆம் ஆண்டு பைகாம் என்ற திரைப்படத்தின் வாயிலாக ஹிந்தியிலும் தடம் பதித்தார். சசுரால், ஒபேரா ஹவுஸ், பியார் கியா தோ டர்னா கியா, பேட்டி பேட்டே ஆகியவை ஹிந்தியில் இவர் நடித்து வெளிவந்த திரைப்படங்களாகும். திரைப்படங்களில் இவருடைய உடையலங்காரம், சிகையலங்காரம் மற்றும் இவர் அணிந்து வரும் ஆபரணங்கள் அன்றைய பெண்களை வெகுவாக ஈர்த்தது.

கால்நூற்றாண்டுக்கு மேல் தமிழ் திரையுலகில் முதன்மை நாயகியாக கோலோச்சியிருந்த நடிகை சரோஜாதேவி அடுத்த தலைமுறை நாயகர்களான விஜயகாந், அர்ஜூன் ஆகியோருடனும் அதற்கும் அடுத்த தலைமுறை நாயகர்களான விஜய், சூர்யா ஆகியோருடனும் இணைந்து பணிபுரிந்திருக்கின்றார். தமிழ், தெலுங்கு, கன்னடம் மற்றும் ஹிந்தி என அனைத்து மொழிகளிலும் ஏறக்குறைய 200க்கும் அதிகமான படங்களில் நடித்திருக்கின்றார். இயக்குநர் கே.எஸ்.ரவிகுமார் இயக்கத்தில் நடிகர் சூர்யா நடித்து 2009 இல் வெளிவந்த ஆதவன் திரைப் படத்திலும் நடித்தார். ■

# போருக்குப்பின்னர் வெளிவந்த நூல்களின் வரிசையில்

# மெல்பன் சுந்தரின் Dare to Differ

முருகபூபதி

இலங்கையில் நீடித்திருந்த உள்நாட்டுப்போர் கடந்த 2009 ஆம் ஆண்டு மேமாதம் நடுப்பகுதியில் முடிவுக்கு வந்திருந்தாலும் அதன் பாதிப்புகள் தொடர்பான விவாதங்கள், விசாரணைகள், ஆய்வுகள் இன்னமும் முடிவுக்கு வரவில்லை.

அந்தக் கொடிய போர்க்காலத்தில் காணாமல் போனவர்களின் உடன்பிறப்புகள், உறவினர்கள் நடத்திவரும் அறப்போராட்டங்களும் முற்றுப் பெறவில்லை.

அதேசமயம் நீடித்த அந்தப்போரின் உறைபொருளையும் மறைபொருளையும் பின்னணியாக வைத்து நூல்கள் வெளிவருவதும் முற்றுப்பெறவில்லை.

தமிழிலும் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் இலங்கை உள்நாட்டுப்போர் அல்லது தமிழ் ஈழ விடுதலைப்போர் என்பதை கருப்பொருளாகக் கொண்டு சிறுகதைகள், கவிதைகள், நாவல்கள் பல வெளிவந்தன, வந்தவண்ணமிருக்கின்றன.




விடுதலைப்புலிகளின் மகளிர் படையணியில் முக்கிய பொறுப்பிலிருந்து, போர் முடிவுற்ற காலத்தில் சரணடைந்து, புனர் வாழ்வு முகாமிலிருந்து வெளியேறிய தமிழினி சிவகாமி எழுதிய ஒரு கூர்வாளின் நிழலில், விடுதலைப்புலிகளினால் கடல் பரப்பில் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்த கடற்படையைச் சேர்ந்த கொமடோர் அஜித் போயா கொட எழுதிய காத்திருப்பு, ஆகிய நூல்கள் சிங்கள - தமிழ் மொழிகளில் வந்திருப்பது போன்று, மேஜர் கமால் குணரட்ண எழுதிய Road to Nandikadal என்ற நூலும் வெளிவந்து பர பரப்பாகப் பேசப்பட்டது.


இந்தவரிசையில் அவுஸ்திரேலியாவில் நான்கு தசாப்த காலங்களுக்கும் மேலாக வதியும் 'சுந்தர்' சுந்தரமூர்த்தி எழுதிய Dare to Differ என்ற நூல் அண்மையில் வெளிவந்துள்ளது.

அச்சம் தவிர் என்றார் ஔவையார். அச்சமில்லை... அச்சமில்லை என்றார் பாரதியார்.

இக்கூற்றுக்களைக் கேட்டும் படித்தும் கடந்து வந்திருக்கும் நாம், 'சுந்தர்' சுந்தரமூர்த்தியின் Dare to Differ என்ற நூலின் தலைப்பினை மாறுபட அஞ்சேல் எனவும் துணிந்து மாறுபடு எனவும் அர்த்தப்படுத்திக் கொள்ள முடியும்.

சுந்தர், அவுஸ்திரேலியா விக்ரோரியா மாநிலத்தில் இயங்கிய இலங்கை தமிழ்ச் சங்கத்தின் செய்தி ஏடான தென்துருவ தமிழ்முரசு இதழின் ஆசிரியராகவும் இங்கு இயங்கிய தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, தமிழ் ஈழப் பொருளாதார மேம்பாட்டு அமைப்பிலும் Tamil Elam Economic Development Organisation (TEEDOR) போரின் முடிவுக்குப்பின்னர் வடக்கு - கிழக்கு புனர் வாழ்வு மற்றும் அபிவிருத்தி என்னும் தன்னார்வ அமைப்புடன் North East Rehabilitation and Develop ment Organization (NERDO) முதலானவற்றில் இணைந்து பணியாற்றியவர். 1986 இலேயே அவுஸ்திரேலியா லிபரல் கட்சியிலும் அங்கத்தவராக சேர்ந்தவர். 1991 முதல் 2004 வரையில் சமூகத் தொடர்புச் செயலாளராக அவுஸ்திரேலிய தமிழர் பேரவையிலும் Australasian Federation of Tamil Association (AFTA) 1994 முதல் 2005 வரையில் ஸ்தாபக உறுப்பினராகவும் இணைப் பாளராகவும் இயங்கி வந்திருப்பவர்.

பல மாநாடுகள், கருத்தரங்குகள் ஆகியனவற்றில் சம்பந்தப்பட்டிருந்த இவர் ஜெனீவா வரையில், ஈழத்தமிழருக்காகக் குரல் கொடுக்கச் சென்றவருமாவார்.



அதனால், தான் கற்றதையும் பெற்றதையும், சந்தித்த தலைவர்கள், இயக்கத்தினர், அரசியல் ஆலோசகர்கள் பற்றியெல்லாம் தமது நூலில் விபரித்துள்ளார்.

தனது நாற்பது ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பொதுவாழ்வுபற்றி எழுதியிருக்கும் சுந்தரின் நினைவாற்றல், பல செய்திகளையும் சம்பவங்களையும் துல்லியமாக பதிவு செய்திருக்கிறது.

அத்துடன் அவரது தீர்க்கதரிசனமும் இனி நாம் என்ன செய்ய வேண்டும் என்பதற்கான யோசனைகளும் இந்நூலில் வெளிப்பட்டுள்ளது. அதன் மூலம் அவரது அரசியல், சமூக நிலைப்பாடும் தெரிய வருகிறது.

தான் கடந்து வந்த பாதையில் நேர்ந்த மாற்றங்களைப் படிப்படியாக சித்திரித்திருக்கும் சுந்தர், ஒரு நோக்கத்திற்காக முன்னெடுக்கப்பட்ட விடுதலைப் போரின் உள்ளிடுக்குகளில் நிகழ்ந்த, தான் நேருக்கு நேர் சந்தித்த சம்பவங்களையும் பதிவு செய்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் மதியுரைஞர் அன்டன் பாலசிங்கம், குமார் பொன்னம்பலம், தமிழ்ச் செல்வன், மற்றும் ஒரு காலத்தில் ஐக்கிய நாடுகள் சபையில் குரல் எழுப்பிய கிருஷ்ணா வைகுந்தவாசன் முதலானோருடன் நடத்திய உரையாடல்கள் குறித்தும் இந்நூலில் எழுதியிருக்கிறார்.

அரசியல் ஆய்வாளர்களுக்கும் ஈழ விடுதலை அரசியலை கற்க விரும்பும் மாணவர்களுக்கும் இந்த நூல் வாயில்களை திறந்துவிட்டிருக்கிறது.

இந்த நூல்பற்றிய சிறிய அறிமுகம்தான் இந்தப் பதிவு. எனினும் இந்நூல் கூறும் முரண் நகை, குறித்து எழுதுவதற்கு நிறையவுண்டு.

அவை பற்றி பிறிதொரு சந்தர்ப்பத்தில் எழுதலாம். ■

# முந்தினம் பார்த்தேனே

பர்வீன் யூனுஸ் @parveenyunus
பிட்ஸா ஆர்டர் செய்தேன்.. பாக்ஸ் சதுரமாகவும்..பிட்ஸா வட்டமாகவும் ஸ்லைஸ் முக்கோண வடிவிலும் இருந்தது.. குழப்பறீங்களேடா..!

ஆர்வக்கோளாறு™ 🇮🇳 @motheen_farook
கை க்கும்-காலுக்கும்
எவ்ளோ வலிமை இருக்கு'னு வறுமை
துரத்தும்போது புரிந்துகொள்ள
முடிகிறது ...!!

❤🕊அன்னப்பறவை🕊❤ @whitecloud_pri
எவ்வளவு தூரம் எவ்வளவு வேகம் ஓடினாலும்
பின் தொடர்வதை நிறுத்த மறுக்கிறது
மனதை காயப்படுத்தும்
சில கவலைகள் 😑😔

☕ டீ இன்னும் வரலை ⏳ @Raajavijeyan
பத்திரிக்கை வைக்க நேர்ல வரனும்னு அவசியம் இல்லை ஃபோன்ல சொன்னாலே போதும் நீங்க மத்த வேலைகளை பாருங்கன்னு சொல்ற நட்பும், சொந்தக்காரங்களும் உண்மையிலேயே போற்றக்கூடியவர்கள்

Vinoba Sivanarulsundaram




Jeyabalaratnam Jeyaganesh
நான் திறமை இருந்தும் மறுக்கப்பட்டோனா?
அல்லது எனக்கு இன்னும் வேணுமா?
தனியார் கல்வி நிலைய ஆசிரியர் என்ற காரணத்தை காட்டி என்னை நேர்முகத் தேர்வில் நிராகரிப்பு செய்யப்பட்டதால் நான் எவ்வளவு சந்தர்ப்பங்களை இழந்து உள்ளேன்.....

Pirashanth Kamalanathan
கம்பஸ்ல படிக்கிறப்போ "ராஜபக்சே பிரதர்ஸ் நல்லவங்களா கெட்டவங்களா" என்று எனக்கும், சிங்கள ஃப்ரெண்ட் ஒருத்தனுக்கும் பெரிய சண்டையே நடக்கும். எங்கேயோ எல்லாம் ஆர்ட்டிக்கிள்ஸ் தேடி எடுத்துட்டு வந்து மகிந்த வல்லவரு, கோத்தா நல்லவரு என்றெல்லாம் சொல்லுவான். பேசி ரொம்ப வருஷங்களாச்சே என்று இண்டைக்கு ஃபோன் பண்ணினால், பெற்றோலுக்கு லைன்ல நிக்கிறானாம்

Darien Daries
#Untitled2022
#எங்கட_கதை #எங்கட_சினிமா
#திரை🙂🙂🙂🎥🎥🎥
stunt choreography:-Darien😉🤼
thanks for stunt boys👏👏👏



# ஊக்கமும் உயர்வும்...



வேதநாயகம் தபேந்திரன்

அது ஒரு வாழைப்பழக்கடை. அவர் பல வகையான வாழைக்குலைகளை வாங்கி விற்கின்றார். கதலி வாழைப்பழத்தை ஒரு கிலோ 50 ரூபாப்படி வாங்கினால் ரூபா 80 படி விற்பார். வாழைக்குலைகள் மலிந்த காலங்களில் பழுத்துக் கொட்டும் பழங்களால் வருமான ரீதியாக மிகவும் சிரமப்படுவார். அவரது குடும்பத்தின் வாழ்க்கைத் தரமும் சகட ஓட்டம் தான்.

அதே பிரதேசத்தில் இன்னுமொரு வாழைக் குலை வியாபாரி உள்ளார். அவர் ஒரு கிலோ கதலிப் பழம் 50 ரூபாப்படி வாழைக் குலைகளை வாங்குவார். அதனைப் பழச்சாறாக அடித்து வாசனையூட்டி சிறிதளவு ஐஸ்கட்டித் தூள்களைக் கலந்து ஒரு கிலோப் பழத்தை 200 ரூபாவாக வருமானம் வரும் வகையில் கிளாசில் ஊற்றி பழச்சாறாக விற்றுக் காசாக்குவார்.

பழங்கள் மலிந்த காலத்திலும், அன்றாடம் சேதமாகும் பழங்களையும் தனது வீட்டில் வளரும் ஆடுகளுக்கு உணவாக்குவார். வருடம் ஒரு கிடாய் ஆடு விற்று 50 000 ரூபா வரையில் உழைத்துக் கொள்வார். இதனால் இவரது வாழ்க்கைத் தரம் மிகவும் வசதியாக இருக்கிறது.

இவர்கள் இருவரும் ஒரே மூலப் பொருளைத் தான் விற்பனைப் பொருளாகக் கொள்கின்றனர். ஆனால் ஒருவர் உயர் வருமானத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் அனுபவிக்கின்றார். மற்றையவர் ஏற்ற இறக்க வாழ்க்கை வாழுகின்றார்.

இதற்கு என்ன காரணம். சாதாரண வாழ்க்கை வாழ்ந்தவர் வியாபாரியாக இருக்கின்றார். வசதியாக வாழ்பவர் தொழில் முயற்சியாளராக இருக்கின்றார்.

ஒரு பொருளின் பெறுமதியைக் கூட்டி அதனை ஓரிரு மடங்கு விலையில் விற்பவர் நிறைய இலாபம் உழைத்து வசதியாக வாழ்கின்றார்.

அதனைச் சிறிய விலை அதிகரிப்புடன் விற்பவர் சாதாரண வாழ்க்கை வாழ்கின்றார். அதிக இலாபம் உழைத்து வசதியாக வாழ்வதற்கு முயற்சியாண்மையே தேவை. அது தொடர்பான வழிகாட்டுதல் செயலமர்வு எமது பிரதேசத்தில் காலத்திற்குக் காலம் செய்யப்பட்டு வருகின்றது. அதில் பங்கு பற்றுவோரில் ஒரு பத்து வீதமானோர் அதனைப் பின்பற்றத் தொடங்கி இருந்தால் மிகப் பெரிய ஒரு பொருளாதாரச் சமூக மாற்றம் ஏற்பட்டிருக்கும்.

ஆனால், அது பெருமளவில் ஏற்படவில்லை. காரணம் பாரம்பரியமான சிந்தனைப் பாங்கிலிருந்து விடுபட எம்மவர் பெருமளவில் தயாராக இல்லாதமையே இதற்கான காரணமாகும்.

போர் முடிந்து 12 வருடங்கள் கடந்து விட்டது. அரசாங்க, அரச சார்பற்ற நிறுவனங்களது உதவிகள், தனிப்பட்ட கொடையாளர்களின் நன்கொடைகள் எனக் கோடான கோடி உதவிகள் வழங்கப் பட்டுள்ளன. வியாபாரம் எது தொழில் முயற்சியாண்மை எதுவென்ற கோட்பாட்டை ஒரு பத்து வீதமானோர் பின்பற்றி இருந்தால் மிக உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அடைந்திருப்பார்கள். இது தொடர்பான செயலமர்வுகள், பயிற்சிகள் காலத்துக்குக் காலம் நடைபெற்றே வருகிறது.

ஆசியாவின் புதிய பொருளாதாரப் புலிகள் என தாய்வான், தென்கொரியா, மலேசியா போன்ற நாடுகள் 1980 கள், 90 களில் அழைக்கப் பட்டன. அவை தமது நாட்டின் அபிவிருத்திக்காக முயற்சியாண்மையை ஊக்குவித்தன. சிறு சிறு முயற்சியாளர்கள் பல்லாயிரம் பேர் பெருகும் வண்ணம் நாட்டின் பொருளாதாரக் கொள்கையை வடிவமைத்தார்கள். அரசாங்கம் ஒரு வகைச் சர்வாதிகாரத்துடன் இதய சுத்தியுடன் நடைமுறைப்படுத்தியது. நாடு வேகமாக வளர்ந்து பொருளாதாரத்தில் நிமிர்ந்தது.



உலக வங்கி இவர்களை உயர்வருமான நாடாக வகைப்படுத்தி உள்ளது. தெற்காசியாவின் பங்களாதேஷ் ஒரு காலத்தில் மிக மோசமான வறுமையில் வாடியது. பேராசிரியர் முகமது யூனூஸ் கிராமின் வங்கி முறையின் ஊடாகச் சிறுகுழு முறையை உருவாக்கிக் கடன் திட்டங்களை முன்னெடுத்தார். சிறுகுழு முறை வெற்றி பெற முயற்சியாண்மை என்ற பக்கத்தை நோக்கி வெற்றி பெற்றவர்களை வழி நடத்தினார். சிறு முயற்சியாண்மை என்ற பக்கத்தை நோக்கி வெற்றியாளர்களைத் தள்ளினார். விளைவு பங்களாதேஷ் இன்று உண்மையிலேயே ஆசியாவின் ஆச்சரியம் எனக் கூறும் வகையில் பொருளாதாரப் பேரெழுச்சி பெற்ற நாடாக இருக்கின்றது. கொவிட் -19 பெருந்தொற்று நோய்க் காலத்தின் டொலர் வறட்சியைப் போக்க எமது நாட்டுக்குப் பல மில்லியன் டொலர் கடன் வழங்கும் அளவுக்கு வளர்ந்து விட்டது.

மலைகள், நதிகள், வளமான மண் வகைகள், கடல்கள், நீரேரிகள் என வளம் மிகுந்த நாட்டின் சொந்தக்காரர்கள் நாம். எமது நாட்டில் தொழில் முயற்சியாண்மை என்பது மிகப் பெருமளவில் வளரவில்லை. அதிலும் எமது வட பிரதேசத்தில் போதுமான வகையில் வளர்த்தெடுக்கப்படவில்லை. கருத்துகள் ஊட்டப்படுகின்றன. ஆனால் அவை செயலுருவம் பெறுவதில் விருப்பத்துடனான ஈடுபாடு மிகவும் குறைவானது. அதன் விளைவு எமது பிரதேசத்தின் பொருளாதார வளர்ச்சி குறைவானதாக உள்ளது.

எடுத்த எடுப்பில் பெரும் பணத்தை முதலிட்டு வளருவது தொழில் முயற்சியாண்மை அல்ல. சுயதொழிலும் அல்ல. கையில் இருக்கும் பணத்தைக் கொண்டும் மீளளிக்கக் கூடிய கடன் தொகையைக் கொண்டும் ஆரம்பிப்பதே சுயதொழில்.

மெல்ல மெல்ல உழைத்து படிப்படியாக உறுதியாக முன்னேறுவதே சுயதொழிலாகும். ஒரு ரூபாவையும் கணக்குப் பார்த்துத் தொழில் செய்பவனே திறமையான ஒரு முதலாளியாக இருப்பான்.

குறித்த ஒரு தொழிலில் மற்றவர்களிடமிருந்து வேறுபட்ட வகையில் வாடிக்கையாளரைக் கவரும் ஒருவனே சிறந்த தொழில் முயற்சியாளனாக இருப்பான். நவீன காலத்துக்கு ஏற்ப தொழில் முயற்சியாண்மையும் மாறுபடுகிறது.

மாற்றத்தை உள்வாங்கித் தொழில் செய்பவரே சிறந்த தொழில் முயற்சியாளராகி வெற்றி பெறுவார் என்பதே உண்மை. ■

**மலைகள், நதிகள், வளமான மண் வகைகள், கடல்கள், நீரேரிகள் என வளம் மிகுந்த நாட்டின் சொந்தக்காரர்கள் நாம். எமது நாட்டில் தொழில் முயற்சியாண்மை என்பது மிகப் பெருமளவில் வளரவில்லை. அதிலும் எமது வட பிரதேசத்தில் போதுமான வகையில் வளர்த்தெடுக்கப்படவில்லை. கருத்துக்கள் ஊட்டப்படுகின்றன. ஆனால் அவை செயலுருவம் பெறுவதில் விருப்பத்துடனான ஈடுபாடு மிகவும் குறைவானது.**

# நம்ம அல்பம் 04

**மதுமிதா**




சிவராத்திரியைச் சிறப்பிக்கும்வகையில் வெளியிடப்பட்ட "சிவாஞ்சனம்" எனும் இசைக்கோலம் ரசிகர்களின் மனதை வெகுவாகக் கவர்ந்துள்ளது. மங்கிய வெளிச்சம், கற்பூர ஒளி, பாடல், இசை, யோகசித்தர்கள், காட்சி அமைப்பு அனைத்தும் பக்தியை மையமாக வைத்து அமைக்கப்பட்டுள்ளன.

"ஏகாஷ்யந்து சதுர்புஜம்" எனும் விநாயக ஸ்லோகத்துடன் பாடல் ஆரம்பமாகின்றது. "ஆலால கண்டனே ஆடலரசே" என விழித்த சிவனை அழைக்கும் போதே பக்திப் பரவசம் ஆரம்பமாகிவிடுகிறது.

இன்பன் அருணையாவின் வரிகள் சிவன் மீது கொண்ட அன்பையும் பக்தியையும் வெளிப்படுத்துகிறது. விஸ்வபிரசன்ன குருக்களின் குரல் பக்தியை பக்திக் கோர்வையாக ஒலிக்கிறது.

பிரியன் தம்பிராஜாவின் இசையமைப்பைப் பற்றி இங்கு கூறியே ஆக வேண்டும். இவரது இசையமைப்பும் தனிச்சிறப்பானதாகவே காணப்படுகின்றது. பாடல் வரிகளுக்கேற்ப இசையை அனுபவித்துக் கொடுத்துள்ளார்.

சிவாஞ்சனம் என்ற இப்பாடலின் இசையும் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் இறை பக்தியை இன்னுமின்னும் அதிகரித்துள்ளது. இதில் இடம் பெற்றுள்ள வாகீசனின் வீணை சிறப்பாக உள்ளது.

இதன் சிறப்பம்சம் யாதெனில் இப்பாடல் காட்சி முழுவதும் ஒரு நாளிலேயே நடத்தி முடிக்கப்பட்டுள்ளமையே. துரைசிங்கம் வாகீசனினதும் ஜீ.ஜீவிதனினதும் நடன இயக்கம் மிக சிறப்பு. நடன கலைஞர்கள் ஒவ்வொருவரினதும் நடனம் மட்டுமல்ல முக பாவனை, அபிநயம் என்பனவும் மனதைக் கொள்ளை கொள்கின்றது. யோகிகளாக நடித்துள்ளவர்களின் நடை, உடை, பாவனை ஒவ்வொன்றுமே பாடல் காட்சி முழுவதும் அவர்கள் யோகிகளாக வாழ்ந்துள்ளார்கள்.



பாடல் மட்டுமல்ல பாடலின் காட்சிகள் ஒவ்வொன்றுமே ரசிகர்களை ஈர்த்துள்ள ஒலிப் பதிவு, ஒலிக்கலவை : யாழ் என்ரெர்டெய்ன் மெண்ட் கலையகம். கலை இயக்கம்: சி.துஷிகரன். ஒப்பனை: ரிஷிவர்மன். உடை: வாகீஷன், சோபனா சுதாகரன், ஒளிப்பதிவு இயகம்: வற்சு, ஒளி அமைப்பு: நிலுஜன். வடிவமைப்பு : மொறிஸ், தயாரிப்பு நிர்வாகம் : சி துஷிகரன், தயாரிப்பு உதவி: நிவேதிகன், யது, ஜீவிதன், சந்தோஸ், சுதாகரன். ஒலித்தயாரிப்பு : ஆரணி படைப்பகம், தயாரிப்பு : ஐங்கரன் கதிர்காமநாதன். இயக்கம் : ரா. காந்தரூபன்.

இப்பாடலைக் காண்பதற்கு https://m.youtube.com/watch?t=29&v=_CDKwJRLXng&feature=youtu.be என்ற இணைப்பினூடாகச் சென்று பார்வையிடலாம். ■

---

# பகையாளிகளா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்வதாகவும் அதனால் இலாகாக்கள் இழந்தாலும் இழப்பதற்கு எதுவுமில்லை என அரசியல் கட்சி உறுப்பினர்கள் கருதுவதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

"சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் கலந்தாலோசித்த பிறகு ஜனாதிபதி முடிவுகளை எடுப்பதில்லை, எனவே யாராவது தங்கள் இலாகாக்களை இழந்தாலும் உண்மையில் இழப்பதற்கு எதுவும் இல்லை" என்று திமோனிங் தெரிவித்தது.

சந்திரிக்கா அல்லது மைத்திரி தலைமையில் புதிய கூட்டணி உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசாங்கத்தில் இருந்து வெளியேறிய 11 கட்சிகள் இந்தக் கூட்டணியில் இணையலாம் எனக் கருதப்படுகிறது.



பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடன் மிக நெருக்கமான அரசியல் உறவைக் கொண்டிருந்த விமல் வீரவன்ச, உதய கம்பன் பில ஆகியோர் பசிலின் அரசியல் வருகைக்குப் பின்னர் அரசாங்கத்தை மிக மோசமாக விமர்சிக்கத் தொடங்கினர். அரசாங்கத்தின் அமைச்சர்கள் நிதி அமைச்சரை விமர்சித்ததை ஜனாதிபதி ரசிக்கவில்லை. அவர்களின் அமைச்சுப் பதவி பறிக்கப்பட்டது. தங்களைப் பற்றி நன்கு தெரிந்த மஹிந்த இருப்பதால் அமைச்சுப் பதவியில் ஜனாதிபதி கைவைக்க மாட்டார் என நம்பியவர்களின் நம்பிக்கை பொய்த்தது. இது மற்றவர்களுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கையாகவும் கருதப்படுகிறது.

இலங்கையில் உள்ள ஐ.நா அலுவலகத்துக்கு முன்னால் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து இலங்கை அரசுக்குத் தனது விசுவாசத்தை வெளிப்படுத்தியவர் விமல் வீரவன்ச. அன்றைய அரசாங்கத்துக்கு அவர் தேவையாக இருந்தார். விமலின் உதவி தேவை இல்லை என இன்றைய அரசாங்கம் கருதுகிறது.

இதேவேளை, கடந்த 7 ஆம் திகதி 11 கட்சிகள் நாட்டை "சரியான பாதையில்" கொண்டு செல்லத் தனியான வேலைத்திட்டத்தை அண்மையில் ஆரம்பித்துள்ளன.

நிலவும் பொருளா தார நெருக்கடிக்கான தீர்வுகளாகக் கருதப்படும் முன்மொழிவுகளை முன்வைத்து, தொடர்ந்து இணைந்து பணியாற்றுவதற்கு உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாக லங்கா சமசமாஜக் கட்சியின் தலை வரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP), தேசிய சுதந்திர முன்னணி (NFF), ஜனநாயக இடதுசாரி முன்னணி, ஸ்ரீலங்கா கம்மியூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, பிவித்துரு ஹெல உறுமய (PHU), தேசிய காங்கிரஸ், லங்கா மக்கள் கட்சி, விஜய தரணி தேசிய சபை, ஐக்கிய மக்கள் கட்சி மற்றும் யுத்தகம தேசிய அமைப்பு ஆகிய 11 கட்சிகள் மார்ச் 6 ஆம் திகதி கூடி தமது எதிர்காலத் திட்டங்கள் குறித்து கலந்துரையாடின.

"மார்ச் 6 ஆம் திகதி பத்து அங்கத்துவக் கட்சிகளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அரசியல் பேச்சுக்களை நடத்தியதுடன், நாங்கள் தொடர்ந்து இணைந்து பணியாற்றுவோம் என்று ஒப்புக் கொண்டன. இப்போதுதான் ஒரு மாற்றம் நிகழ்ந்தது. எங்களின் முன்மொழிவுகளை அரசு செயற்படுத்த வேண்டும் என்பதே எங்கள் நோக்கம். அப்படி நடந்தால், ஆட்சியில் இருந்து கொண்டு, பொதுமக்கள் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். ஆனால், பிரச்சினைகள் இருப்பின் அந்த நேரத்தில் மதிப்பீடு செய்து அதற்கேற்ப முடிவுகளை எடுக்க வேண்டும்" என ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய பேராசிரியர் விதாரண தெரிவித்தார்

ஜனாதிபதி கோட்டபாயவையும், பிரதமர் மஹிந்தவையும் அரியணையில் ஏறுவதற்கு ஒன்று கூடிய அரசியல் கட்சிகள் அவர்களை அரசில் இருந்து அகற்றுவதற்கு ஒன்றிணைகின்றன. தமக்கு விருப்பமானவர்களை அரியணையில் ஏற்றி அழகு பார்க்க வேண்டும் தமக்கு விருப்பம் இல்லை என்றால் அரியணையில் இருந்து குப்புற விழுத்த வேண்டும் என்ற கொள்கையுடன் செய்யும் அரசியலால் நாட்டுக்கு எந்த வித நன்மையும் ஏற்படப் போவதில்லை. ■




# ஊக்கமருந்து பாவித்ததால் பறிக்கப்பட்ட தங்கம்

ஸ்ப்ரிண்டர் தாண்டோ டிலோட்லோ ஊக்கமருந்து பயன்படுத்தியதற்காக 30 மாதங்கள் தடை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, 2021 உலக தடகளப் போட்டிகளிலிருந்து தென்னாபிரிக்கா தங்கப் பதக்கத்தை இழக்க நேரிட்டது.

22 வயதான ஸ்ப்ரிண்டர் தாண்டோ டிலோட்லோவுக்கு இன்ஸ்ரிரியூட் ஃபார் டிரக்- ஃப்ரீ ஸ்போர்ட் (SAIDS) மூலம் இரண்டரை வருடம் தடை விதிக்கப்பட்டுள்ளது.

லோட்லோ டெஸ்டோஸ் டிரோனுக்கு நேர்மறை சோதனை செய்யப்பட்டது, இது இயற்கையாக நிகழும் ஹார்மோன் ஆகும், இது ஒரு அனபோலிக் ஸ்டீராய்டாகவும் பயன்படுத்தப்படலாம்.

ஊக்கமருந்து வழக்குகளின் SAIDS பட்டியலில் தடை நடைமுறைக்கு வந்த திகதியைக் காட்டவில்லை என்றாலும், தென்னாபிரிக்கத் தளமான நியூஸ் 24 கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் தென்னாபிரிக்க தேசிய சாம்பியன்ஷிப்பில் கேள்விக்குரிய மாதிரி சேகரிக்கப்பட்டது என்று தெரிவிக்கிறது.

உலக தடகள தொடர்கள் அடுத்த மாதம் போலந்தில் உள்ள சிலேசியாவில் நடந்தன. எனவே, அந்த சோதனை தகுதி நீக்கம் செய்யப்பட்டதில் இருந்து டிலோட்லோ இன் முடிவுகளுடன், தென்னாபிரிக்க ஆண்கள் 4x100 மீற்றர் தங்கப் பதக்கத்தை இழக்கும்.

தாண்டோ டிலோட்லோ, சென்டர், போதைப் பொருள் சோதனையில் தோல்வியடைந்ததால், தென்னாப்பிரிக்கா ஆடவர் 4x100 மீற்றர் தங்கப் பதக்கத்தை இழக்கிறது.

தென்னாபிரிக்கா 38.71 வினாடிகளில் கோட்டைக் கடந்தபோது டிலோட்லோ முதல் லெக்கை ஓடினார். அகானி சிம்பைன், கிஃப்ட் லியோட்லெலா மற்றும் கிளாரன்ஸ் முன்யாய் ஆகியோர் தென்னாபிரிக்க அணியின் மற்ற உறுப்பினர்களாக இருந்தனர்.

ஒலிம்பிக் சம்பியனான இத்தாலி தங்கப் பதக்க நிலைக்கு முன்னேறும், ஜப்பான் இரண்டாவது இடத்திற்கு நகர்கிறது மற்றும் டென்மார்க் புதிய தோற்ற மேடையை நிறைவு செய்யும். டிலோட்லோ 100 ஆம் இல் 10.08 மற்றும் 200 இல் 20.41 என்ற தனிப்பட்ட சாதனையைப் பெற்றுள்ளார். டோக்கியோ 2020 ஒலிம்பிக் போட்டிகளுக்கு தென்னாபிரிக்கா டிலோட்லோவைத் தேர்ந்தெடுக்கவில்லை. மேலும், கடந்த ஆண்டு ஜூன் 29 முதல் உலக தடகளத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிகழ்வில் தடகள வீரர் ஓடவில்லை. ■

# இந்தியா பாக்.கிரிக்கெட் போட்டி தொடருக்கு ஏற்பாடு

இந்தியா பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டிகள் விரைவில் நடைபெறும் என்ற தகவல் வெளியாகி உள்ளது. இரு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள அரசியல் பிரச்சினை காரணமாக கடந்த 10 ஆண்டுகளாக இருதரப்பு கிரிக்கெட் தொடரில் விளையாடுவது இல்லை.

ஐ.சி.சி தொடர்களைத் தவிர்த்து, இரு அணிகளும் கடந்த 10 ஆண்டுகளில் ஒரு முறை கூட கிரிக்கெட் போட்டியில் மோதியது இல்லை. 100 டெஸ்ட் போட்டிகள் விளையாடியுள்ள விராட்கோலி இது வரை ஒருமுறை கூட பாகிஸ்தானுடன் டெஸ்ட் போட்டியில் விளையாடவில்லை. டுபாய் போன்ற நாட்டில் இரு அணிகளையும் இருதரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் விளையாட வைத்துவிடலாம் என்று ஐ.சி.சி முயற்சித்தால் அதற்கும் வழியில்லை.

இந்த நிலையில், இந்தியா, பாகிஸ்தான், அவுஸ்ரேலியா, இங்கிலாந்து மட்டும் பங்கேற்கும் ஒரு தொடரை நடத்த ஐ.சி.சியிடம் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத் தலைவர் ரமிஸ் ராஜா கோரிக்கை வைத்தார். இது தொடர்பாக திட்டப் பணிகளையும் மேற்கொள்ள தயார் என்று அவர் அறிவித்தார். ஆனால், அதற்கு பி.சி.சிஐ வாய் திறக்கவில்லை.

தற்போது இந்த பிளானை வைத்து அவுஸ்ரேலிய கிரிக்கெட் வாரியம் காய் நகர்த்தி வருகிறது. யஎரஸ்திரேலியா கடந்த பல ஆண்டுகளாக முத்தரப்பு தொடரை ஆண்டுதோறும் நடத்தி வந்தது. ஆனால் ரசிகர்களிடையே போதிய வரவேற்பு இல்லாததால் அந்த தொடரை நிறுத்திவிட்டது. இந்த நிலையில் தான் அவுஸ்ரேலியா, இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய அணிகளை வைத்து கிரிக்கெட் போட்டியை நடத்த அவுஸ்ரேலிய கிரிக்கெட் வாரியம் முடிவு எடுத்துள்ளது.

இது தொடர்பான திட்டப் பணிகள் தயாரிக்கப்பட்டு விட்டதாகக் குறிப்பிட்டுள்ள அவுஸ்ரேலிய கிரிக்கெட் வாரியம், சம்பந்தப்பட்ட நாடுகளிடம் ஒப்புதல் வாங்கிய பிறகு விரைவில் முத்தரப்பு தொடர் நடத்தப்படும் என்று தெரிவித்துள்ளது, முத்தரப்பு தொடர் மூலம் வருமானம் வரும் என்பதால் பாகிஸ்தான் இதற்கு ஒப்புக்கொள்ளும். ஆனால் இந்தியாதான் இதற்கு இறுதி ஒப்புதல் வழங்க வேண்டும். ■










# டோனி கூட குடும்பம் நடத்துறது எவ்வளவு கஷ்டம் தெரியுமா?

இந்திய அணியின் வெற்றிகரமான கப்டனாக பெயரெடுத்தவர் மகேந்திரசிங் டோனி. அவரைப் பற்றி மனைவி சாக்ஷி வெளியிட்ட கருத்து மகளிர் தினம் கொண்டாடப்பட்ட வேளையில் டோனியுடன் குடும்பம் நடத்துவதில் உள்ள கஷ்டங்களை அவர் சி.எஸ்.கே அணியின் சமூக வலைத்தளப் பக்கம் மூலமாகப் பகிர்ந்து கொண்டுள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில்: டோனியுடன் வாழ வேண்டுமெனில் பல விடயங்களை நாம் பொறுத்துக் கொண்டு, மாற்றிக் கொண்டு வாழ வேண்டும். ஏனெனில், அலுவலகத்திற்கு செல்லும் ஒரு நபரை நாம் திருமணம் செய்தால் கூட அவர்களுக்காக நம் வாழ்க்கை நடைமுறையில் சில விடயங்களை மாற்றிக்கொள்ள வேண்டும். இதுவே நாம் ஒரு விளையாட்டு வீரரை திருமணம் செய்து கொண்டால் நிறைய பழகிக்கொள்ள வேண்டும்.

ஏனெனில், ஒரு மிகப்பெரிய பிரபலத்தின் மனைவியாக நீங்கள் இருக்கும் போது உங்களுக்கு என்று பிரைவசி இருக்காது. எங்கு சென்றாலும் உங்களை சுற்றி ஒரு கூட்டம் இருக்கும். எப்போதுமே நாம் கமரா முன் இருப்பது போன்று நிஜ வாழ்க்கையிலும் இருக்கமாட்டோம். எனவே பொது வெளியில் நாம் சரியாக நடந்து கொள்ள வேண்டியது அவசியம். - ஆட்வெர்டிசெமென்ட் - அதேபோன்று பிரபலங்களின் மனைவியாக இருக்கும் போது நாம் நண்பர்களுடன் வெளியே சென்று வந்தால் கூட அதை தவறாக எண்ணி பல கருத்துக்களைப் பகிர்வார்கள். இப்படி பல கருத்துகள் பகிரப்படும் போதும் நாம் சகஜமாக எடுத்துக் கொள்ள தயாராக இருக்கவேண்டும்.

ஒருபுறம் இப்படி ஒரு பிரபலத்தின் மனைவியாக பல்வேறு சிக்கல்கள் இருந்தாலும் கணவரால் நாட்டிற்கே பெருமை என்பதை என்ற போது நமக்கும் அது கூடுதல் பெருமையாக இருக்கும். டோனிக்கு மனைவியாக இருப்பதை எண்ணி மிகவும் மகிழ்ச்சிதான் என்று சாக்ஷி தோனி பகிர்ந்து கொண்டது குறிப்பிடத் தக்கது. ■





# அனுபவமே வாழ்க்கை

முக்கனிகளும் நிறைந்த வளம் பொருந்திய இடம் ஒன்றினூடாக ஒரு குருவும் மூன்று சீடர்களும் சென்றனர். அப்போது சீடர்கள், “வாழ்க்கை என்றால் என்ன” எனக் கேட்டனர். குருவானவர் “நீங்கள் மூவரும் சென்று மா, பலா, வாழை ஆகிய முக்கனிகளையும் நன்கு சாப்பிட்டு வாருங்கள் என்றார்.

மூவரும் சென்று நன்றாகசச் சாப்பிட்டார்கள். மீண்டும் குருவை வந்து சந்தித்தார்கள். “நீங்கள் சாப்பிட்டதில் எந்தக் கனி சிறந்தது?” என்று குரு கேட்டார். முதலாவது சீடன், “மாம்பழத்தை தோல் நீக்காமல் இலகுவாகச் சாப்பிட முடிந்தது! அதுவே சிறந்த கனி” என்றான். இரண்டாவது சீடனோ “பலாப் பழத்தை உண்ணப் பல்வேறு தடைகளைத் தாண்டினேன். போராட்டத்திற்குப் பின்பே பலாச்சுளை கிடைத்தது. அதுவே சிறந்த கனி” என்று கூறினான். மூன்றாவது சீடனோ “வாழைமரம் ஒரு தடவை மாத்திரமே பழுப்பதால் அதை உண்ணும் போது அந்த மரத்தின் ஆயுளை நினைத்தேன். அந்தக் கனியே சிறந்தது” என்றான். உடனே, குரு மெல்லிய புன்னகை பூத்தார். “வாழ்க்கை ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு அனுபவத்தைத் தருகிறது. வாழ்க்கையை அனுபவித்தே அறிய வேண்டும். இதனைப் புரிந்து கொண்டால் நீங்கள் வெற்றியடைவீர்கள்” என்று குரு விளக்கம் கொடுத்தார்.

**வி.அபிஷா**
**தரம்-10**
**யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை**

# வாழ்க்கை

விதி அது விளையாட
விழிகளுள் நீர் பிறக்க
மதி அதை உபயோக்கி
புவிதனில் நீ வாழ
எதை நீ கொண்டு வந்தாய்
கையோடு கொண்டு செல்ல
வாழும் காலம் குறுகியதே
மகிழ்வுடனே நீ வாழு

**மம்மு**





**சிறுவர் பகுதிக்கான உங்கள் சொந்த ஆக்கங்களை எங்களுக்கு உடனே அனுப்பி வையுங்கள்**

**தீம்புனல்**
கனகசபை கட்டடத் தொகுதி
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 0777 133 542






# இயற்கை அமோனியா உரம் தரும் பக்றீரியா!

பயிர்களுக்கு பரவலாக அமோனியா உரம் போடுகின்றனர். ஆனால், தேவைக்கு அதிகமாக அந்த உரம் போடப்படுகிறது. இதனால், வயலிலிருந்து வழிந்தோடும் மிகையான அமோனியா தண்ணீர் கால்வாய் போன்ற நீர் நிலைகளில் கலந்தால், அவை வேதியியல் மாசடைகின்றன.

செயற்கை அமோனியாவுக்குப் பதிலாக, இயற்கையாகவே அதை உற்பத்தி செய்யும் பக்றீரியாக்கள் இருந்தால் எப்படி இருக்கும்? அமெரிக்காவின் வாஷிங்டன் மாநில பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞா னிகள் ஒருவகை பாக்டீரியாவை தேர்ந் தெடுத்தனர்.



அது இயல்பாகவே சுற்றுப் புறத்திலுள்ள நைதரசன் வாயுவைக் கிரகித்து, அமோனியாவாக மாற்றி, கழிவாக வெளியேற்றும் தன்மை கொண்டது. அந்த பக்றீரியாவை மேலும் கூடுதலாக அமோனியாவை வெளியேற்றும்படி மரபணு திருத்தம் செய்தனர்.

இந்தப் புதிய பக்றீரியாவை, நெல் விளையும் மண்ணில் விட்டபோது, அவை பல்கிப் பெருகி, அமோனியாவை வெளியேற்றின. இதை, அந்த நெற்பயிர்களும் உள்வாங்கிக் கொண்டன.

இப்போது, வெவ்வேறு அளவுகளில் அமோனியாவை வெளியேற்றும் திறன் கொண்ட பக்றீரியாக்களை உருவாக்க விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர். இதனால் எந்தப் பயிர்களுக்கு எத்தனை அமோனியா தேவை என்பதை அறிந்து அதற்கேற்ற உற்பத்தித் திறனுள்ள பக்றீரியாவை மண்ணில் பரவவிட முடியும். அது நடைமுறைக்கு வரும் போது, விவசாயிகள் செயற்கை அமோனியா உரத்தை அடியோடு நிறுத்திவிட்டு, அமோனியாவை உற்பத்தி செய்யும் பக்றீரியாவை இலவசமாக வாங்கி, மண்ணில் வாழ விடப்போகிறார்கள்.

# இரண்டு மைனாக்கள்

ஒரு ஊரில் அமலன் எனும் மாணவன் ஒருவன் இருந்தான். இரண்டு மைனாக்களைப் பார்த்தால் அன்றையநாள் நல்ல நாளாக அமையும் என அவனிடம் நம்பிக்கை இருந்தது. தினமும் பாடசாலைக்குப் போகும் போது இரண்டு மைனாக்களைப் பார்க்க ஆசைப்படுவான். பரீட்சைக்குப் போகும் போது தோட்டமொன்றில் இரு மைனாக்களைக் கண்டான். அன்று அவன் சந்தோசமாகப் பரீட்சை எழுதினான். அதன் பிறகு ஒவ்வொரு நாளும் பரீட்சைக்குச் செல்லும் போது தோட்டத்திற்குப் போய் இரண்டு மைனாக்களையும் பாத்துவிட்டே செல்வான்.



நாட்கள் கடந்தன. பரீட்சைப் பெறுபேறு வெளியானது. அவன் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடைந்து இருந்தான். பாடசாலையில் இருந்து மகிழ்ச்சியோடு வீடு திரும்பினான். வீடு நோக்கிச் செல்லும் போது தோட்டத்திற்குச் சென்றான். அங்கே இரண்டு மைனாக்களையும் காணவில்லை. கவலையடைந்தான். வீட்டுக்குப் போனான். அவனது தாத்தா இரண்டு மைனாக்களையும் கூட்டிலே அடைத்து வைத்திருந்தார். “ ஏன் தாத்தா மைனாக்களைப் பிடித்து வைத்திருக்கிறீர்கள்” என்று அமலன் கேட்டான். அதற்கு தாத்தா, “மைனாக்களுக்குப் பேசப் பழக்கப் போகிறேன்” எனச் சொன்னார். “அவற்றுக்கு எமது மொழி எதற்குத் தாத்தா? இந்த மைனாக்கள் எனக்கு நம்பிக்கை தந்தன. திறந்து விடுங்கள் தாத்தா” என்று கெஞ்சினான். தாத்தாவும் அவற்றைத் திறந்து விட்டார். இரண்டு மைனாக்களும் மகிழ்ச்சியோடு பறந்தன.

**அ.கவிஷ்**
**யா/நெல்லியடி மத்திய கல்லூரி**
**தரம்-09**

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 12.03.2022 அன்று வெளியிடப்பட்டது.